விஷயமறிந்த மனிதனின் கொள்கை-



தொழிற்சாலைக்கு வேண்டியவைகளை வாங்கும் விஷயமறிந்த டைரக்டர், இயந்திரங்கள் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமானவர். தோல், உலோகம் அல்லது மர தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் சகல வித பொருள்களுக்கும் அஜாக்ஸ் உயர் தர பட்டசீலைகள் உபயோகப்படுத்தப் பட்டதாய் இருந்தால் வெகு நேர்த்தியாய் இருக்கும்.

அஜாக்ஸ்

பிராடக்ட்ஸ் லிமிடெட்,

106, அரமனைக்காரத் தெரு,

சென்னை.

- பிளின்ட் (ஸான்ட்)
- கார்னெட்
- எமரி
- அஜாக்ஸைட்
  - பேப்பர்
- க்ளாத்
- டிஸ்க்ஸ்
- ரோல்ஸ்
- பெல்ட்ஸ்
- டேப்ஸ்

மற்றுமுள்ளவைகள்.

மானேஜிங் ஏஜண்டுகள் :—முருகப்பா & சன்ஸ்.

தென் இந்தியாவுக்கு விற்பனை ஏஜண்டுகள் :

மார்ஷல் ஸன்ஸ் & கோ., (இந்தியா) லிமிடெட்.


தபால் பெட்டி 141 :: :: சென்னை

A. S—K. 10

கல்கி பொருளடக்கம்

மலர் 4 இதழ் 26 | 1945 பிப்ரவரி 4 | தாரண தை 22

சென்ற தலைமுறையில் வங்காளத்தில் ஒவ்வொரு துறையிலும் பிரசித்தமான சிங்கங்கள் தோன்றி கர்ஜனை புரிந்தனர். அவ்விதம் கல்வித் துறையில் பிரசித்தி பெற்றிருந்த சிம்மம் ஹைகோர்ட் ஜட்ஜ் ஸர் அஷுதோஷ் முகர்ஜி என்பவர். கல்கத்தா சர்வகலாசாலையின் வைஸ் சான்ஸலராக இருந்து அவர் கல்விக்குச் செய்த தொண்டு அபாரம்.



"புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?" என்பது மனிதர்களுக்குள் அவ்வளவு பொருந்துவதில்லை என்றாலும், ஸர் அஷுதோஷ் முகர்ஜியின் புதல்வர் டாக்டர் சியாம் பிரசாத் முகர்ஜி சிங்கத்துக்குப் பிறந்த இளஞ் சிங்கம் தாம் என்பதை 33-ம் வயதிலேயே நிரூபித்துக் கல்கத்தா சர்வகலாசாலையின் வைஸ்சான்ஸலர் பதவியை யடைந்தார்.

ஆனால் அவருடைய சிம்ம கர்ஜனை கல்வித் துறையோடு நின்று விடவில்லை. செல்வாக்கற்று, கேட்பாரற்று, மங்கி மறைந்து வந்த ஹிந்து மகா சபையில் அவர் சேர்ந்தார். அதற்கு ஆக்கமும் பலமும் தந்தார். ஹிந்து மகா சபையின் விரோத அரசியல் கொள்கைக்கு இணங்க, ஸர் நாஸிமுதீனின் முஸ்லிம் லீக் மந்திரி சபையில் சிலகாலம் சேர்ந்து ஒத்துழைத்தார். வங்காளப் பஞ்சத்தின் போது மேற்படி மந்திரி பதவியை விட்டொழித்தார்.

அறிவாற்றல்களில் சிறந்த டாக்டர் முகர்ஜி ஹிந்து மகா சபையில் சேர்ந்தது தேசத்தின் நன்மைக்கா, தீமைக்கா என்பதைச் சரித்திரம்தான் கூறவேண்டும்.

நமது சகோதர வங்க மாகாணத்தின் சிறந்த புதல்வர் என்ற முறையில் டாக்டர் முகர்ஜியின் படத்தை நமது அட்டைப் படத்தில் வெளியிட்டுக் கௌரவிக்கிறோம். அவருடைய சுயநலமற்ற பொதுநலத் தொண்டையும் பாராட்டுகிறோம்.


அவன் ஊக்கங் குறை
யாமல் இருக்கச் செய்வது
உங்கள் வேலை!
The DALDA COOK BOOK
Price Rs.1/-
DALDA
டால்டா உணவுகளை
மேலும் ஊக்கமுள்ள
தாக்குகிற தென்பதை
நிரூபித்துள்ளோம்
வைடமின் நிறைந்த
டால்டா
ஊக்கமளிக்கிறது.

கல்கி

மலர் 4 } தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் { இதழ் 26

என்ன சேதி?

வரவேற்பு தயார்!

சென்னை நகர சபையின் அரசியல் கொள்கை நமக்கு ரொம்பவும் பிடித்திருக்கிறது. சமீபத்தில் நமது நகர சபா அங்கத்தினர் பெரும்பான்மை வோட்டுக்களால் காங்கிரஸ் வாதியான ஸ்ரீ எம். ராதாகிருஷ்ணப் பிள்ளையை மேயர் பதவிக்குத் தேர்ந்தெடுத்தார்கள். இதன் மூலம் தேசிய மகா சபையினிடத்தில் தங்களுடைய அபார பக்தியைத் தெரிவித்துக் கொண்டார்கள். காங்கிரஸ் வாதியை மேயராக்கிய இதே நகர சபையார் சில மாதத்துக்கு முன்பு சென்னைக்கு விஜயம் செய்த டாக்டர் அம்பேத்கருக்கு வரவேற்புப் பத்திரம் அளித்தார்கள். இரண்டு வாரத்துக்கு முன்பு சென்னைக்கு வந்த முஸ்லிம் லீக் உப தலைவர் நவாப் ஜாடா லியாகத் அலிகானுக்கு வரவேற்பு அளித்தார்கள். டிரேட் யூனியன் காங்கிரஸுக்காக வந்த தொழிலாளர் தலைவர் ஸ்ரீ என். எம். ஜோஷியை வரவேற்று உபசரித்தார்கள். சென்ற வாரத்தில் சென்னைக்கு விஜயம் செய்த ஹிந்து மகா சபைத் தலைவர் டாக்டர் ஸியாம்பிரஸாத் முகர்ஜிக்கும் வரவேற்பு அளித்தார்கள். இம்மாதிரி சர்வ சமரச வரவேற்பு அளிப்பதின் மூலம், "தேசத்தின் அரசியல் சமூகத் தலைவர்கள் ஒற்றுமைப் பட்டு ஏதாவது ஒரு வழி காட்டினால் தான் இந்தியா உருப்பட்டு விமோசனம் அடையும்" என்பதைச் சென்னை நகர சபையார் சொல்லாமல் சொல்லிக் காட்டுகிறார்கள் என்று கருதுகிறோம். இப்படிப்பட்ட சமரசக் கொள்கையுடையவர்கள், இன்னும் சீக்கியத் தலைவர் ஸர் ஜோகேந்திர சிங், பார்ஸி தலைவர் ஸர் மோடி, லிபரல் கட்சித் தலைவர் ஸர் தேஜ் பகதூர் ஸப்ரு, முதலாளிகளின் தலைவர் ஸர் புருஷோத்தமதாஸ் தாகூர் தாஸ், கம்யூனிஸ்ட் தலைவர் ஸ்ரீ பி. ஸி. ஜோஷி ஆகியவர்கள் நமது நகருக்கு விஜயம் செய்தால், அவர்களுக்கும் தக்க உபசாரப் பத்திரம் வழங்குவார்கள் என்பதில் சந்தேகமில்லை.


எனவே, மேலே குறிப்பிட்ட தலைவர்கள் எல்லாரும் கூடிய சீக்கிரம் சென்னைக்கு விஜயம் செய்து தங்களுக்காகக் காத்திருக்கும் வரவேற்புப் பத்திரத்தை மரியாதையாக வாங்கிக் கொண்டு போவார்கள் என்று நம்புகிறோம்.


மாணவர் கலகம்

தேசத்தில் ஏற்கெனவே பிரிவினைகளுக்கும் வேற்றுமைகளுக்கும் சண்டை சச்சரவுகளுக்கும் குறைவே இருக்கவில்லை. அப்படிக் கொஞ்ச நஞ்சம் இருந்தாலும், இப்போது தேசமெங்கும் மாணவர்களுக்குள் தோன்றி வளர்ந்திருக்கும் வேற்றுமையானது அந்தக் குறையைத் தீர்த்திருக்கும். இப்போதெல்லாம் மாணாக்கர் கூட்டமென்று எங்கே கூடினாலும் ஒரு கட்சி மாணாக்கர், இன்னொரு கட்சி மாணாக்கர்களைத் தாக்காமல் நடவடிக்கைகள் நடப்பதில்லை. மாணாக்கர் சம்மேளனம் என்று ஒரு ஸ்தாபனமும் மாணாக்கர் காங்கிரஸ் என்று ஒரு ஸ்தாபனமும் ஏற்பட்டுத் தீவிரமாக வாக்குப் போராட்டங்களையும் சில சமயம் வசைப் போராட்டங்களையும் நடத்தி வருகின்றன. சமீபத்தில் இந்தப் போராட்டம் ஆந்திர தேசத்தில் கல் எறி, தடியடிப் போராட்டமாகவும் மாறியது என்று அறிகிறோம்.

இவ்வளவு கலவரத்திற்கும் அமர்க்களத்திற்கும் மூல காரணம் என்னவென்றால், இப்போது நடக்கும் உலக யுத்தம் "ஜனங்களின் யுத்தமா? ஏகாதிபத்திய யுத்தமா?" என்னும் விவாதந்தான். மேற்படி விவாதமே தற்போது நடக்கும் பெரிய மாணாக்கர் யுத்தமாக விளைந்திருக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சிச்


"சர்க்கார் ஸ்வீகாரத்தின்கீழ்
பத்திரிகைகள் இருப்பது பொதுஜன
நன்மைக்கு எவ்வளவு கெடுதலோ,
அவ்வளவு கெடுதல், பணக்காரர்களின்
ஆதிக்யத்தின்கீழ் பத்திரிகைகள் கிடப்பதும்."
—அகில இந்தியப்
பத்திரிகாசிரியர்
மகாநாட்டுத் தலைவர்
மிஸ்டர் பணமூட்டை


இரு முனைப் போர்
அச்சுச் சட்டம்
"முதலாவதாக, காங்கிரஸ் இந்தியாவின் சுதந்திரத்திற்காகப்
போராடி வருகிறோம். அதே சமயத்தில், பத்திரிகைச்
சுதந்திரத்திற்காகவும் போராடுகிறோம்" என்று கூறுகிறது.


"எங்கள் சொத்தை
விடமாட்டோம்
"இந்தியப்
பிரச்னைபற்றி
அமெரிக்கா வாயைத்
திறந்து மனதிருப்பதை
அழுத்தந்திருத்தமாகக்
கூறவேண்டும்" என்று
ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட்
பேசியிருக்கிறார். நியாயந்தானே?

-உர்மன்



யுத்தம்
ஹிட்லர் வளர்த்து அனுப்பிய யுத்தப் பறவை, பாவம்!....
யுத்தம்
....இப்பொழுது திரும்பி அவரையே கொத்த வருகிறது.
இதோ புது ரத்தம்!
பர்மா ரோடு
"பர்மா ரோடு திறக்கப்பட்டதினால் சீனவுக்குச் சிறிது உதவி கிடைக்கலாம்" என்று சொல்லப்படுகிறது.
சீன

சார்பான மாணாக்கர்கள் ஒரு பக்கமும், நேஷனல் சோஷியலிஸ்ட் சார்புள்ள மாணாக்கர்கள் இன்னொரு பக்கமும் நின்று போரை நடத்துகிறார்கள்.

மாணாக்கர்கள் அனைவரும் ஒரு முகமாக ஒரே ஸ்தாபனத்தில் ஈடுபட்டு ஒற்றுமையாக தேசத் தொண்டு செய்தால் அதனால் தேசத்திற்கு நன்மை விளையும். அல்லது இரண்டு ஸ்தாபனங்கள் அமைத்துக் கொண்டாலும் ஒருவரை யொருவர் தாக்காமல் அவரவர்களுக்கு உசிதமான முறையில் தொண்டு செய்தாலும் நன்மை யுண்டு. இரண்டு போட்டி ஸ்தாபனங்களை அமைத்துக் கொண்டு ஒருவரை யொருவர் தாக்குவதையே முக்கிய வேலையாகக் கொள்வதா யிருந்தால், அதைக் காட்டிலும், "மாணாக்கர்கள் அரசியலிலேயே தலையிடக் கூடாது; பாடப் புத்தகங்களைச் சரியாகப் படித்துப் பரீட்சையில் தேற வேண்டும்" என்னும் மிதவாதிகளின் கொள்கையே சாலச் சிறந்ததாகும்.

முதல் பலன்

அமெரிக்காவில் ஸ்ரீமதி விஜய லக்ஷ்மி பண்டிட் செய்து வரும் தீவிரப் பிரசாரத்திற்கு முதல் பலன் கிடைத்திருக்கிறது. அமெரிக்க சர்க்காரின் உதவிக் காரியதரிசி வாயைத் திறந்து இந்தியாவைப் பற்றிப் பேசியிருக்கிறார். "இந்தியப் பிரச்னையைச் சமரசமாகத் தீர்த்து வைப்பதற்கு அமெரிக்கா உதவி செய்யத் தயார்!" என்று தெரிவித்திருக்கிறார். "இந்த மட்டில் இந்தியப் பிரச்னை என்பதாக ஒன்று இருக்கிறது என்பதை ஒப்புக் கொண்டாரே, அந்தவரையில் லாபந்தான்" என்பது ஸ்ரீமதி விஜய லக்ஷ்மியின் அபிப்பிராயம்.

ஆனால், மிஸ்டர் ஜோஸப் க்ரு தமது பேச்சில் ஒரு பொடி வைத்திருக்கிறார் என்பதை நாம் கவனிக்க வேண்டும். "இந்த யுத்தத்தில் இந்தியா இவ்வளவு தூரம் எங்களுடன் ஒத்துழைத்திருக்கும் போது இந்தியாவை நாங்கள் எப்படி அலட்சியம் செய்ய முடியும்?" என்பது அவருடைய கூற்று.

நல்ல வேளையாக, ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் இதை ஆட்சேபிக்கவில்லை. "அதெப்படி இந்தியா உதவி செய்ததாகக் கூறலாம்? இது இந்திய ஜனங்களின் யுத்தம் அல்லவே; ஏகாதிபத்திய யுத்தம் ஆயிற்றே? இந்திய மக்களின் சம்மதத்தைக் கேட்காமலே அல்லவா இந்திய வீரர்களையும் இந்தியப் பணத்தையும் இந்திய சாமக்கிரியைகளையும் பிரிட்டிஷார் போர் முனைக்குக் கொண்டு போகிறார்கள்?" என்று ஸ்ரீமதி விஜய லக்ஷ்மி கேட்கவில்லை.

யுத்தமோ முடிவை நெருங்கி விட்டதாகத் தோன்றும் இந்தச் சமயத்தில், "இது யாருடைய யுத்தம்? இதற்கு உதவி செய்யலாமா, கூடாதா?" என்று கேட்டு விவாதிப்ப தெல்லாம் மூடப் பைத்தியக்காரத் தனத்தைத் தவிர வேறொன்றும் இல்லை. இந்தியா யுத்தத்தில் செய்த உதவிகளை ஒரு தடவைக்குப் பத்துத் தடவை வற்புறுத்திச் சொல்லி தேச சுதந்திரத்தைத் தேட வேண்டிய சமயம் இது. நாம் எடுத்துச் சொல்லாவிட்டாலும் மற்றவர்கள் சொல்லுவதை ஆட்சேபிக்க வேண்டியதில்லை

ரொம்ப மோசம்!

இந்த ருஷ்யா தேசம் ரொம்பவும் மோசம்!

இந்த ஸ்டாலின் இருக்கிறாரே, இவர் ரொம்ப ரொம்ப மோசம்!

ருஷ்ய போல்ஷிவிக்கர்கள் உண்டே, அவர்கள் மகா மகா மோசம்!

அவர்களுடைய பொது உடைமைக் கொள்கையைப் போன்ற சர்வ மோசமான காரியம் இந்தப் பூவுலகத்திலேயே கிடையாது.

இவ்வளவும் ஸ்பஷ்டமாக விளங்கிப் போய் விட்டது! வெட்ட வெளிச்சமாகி விட்டது.

சுருங்கச் சொன்னால், ருஷ்யாவின் குட்டு உடைந்து விட்டது!!

* * *

ருஷ்யா தேசத்து ருஷ்யர்கள் சென்ற இருபத்தைந்து வருஷ காலமாகவே இல்லாத கலாட்டாவெல்லாம் செய்து வந்தார்கள். உலகத்திலேயே இதுவரை கேள்விப்படாத பைத்தியக்காரத்தனமெல்லாம் செய்து வந்தார்கள். தேசத்திலே ஏழை-பணக்காரன் என்ற வித்தியாசம் இல்லாமல் செய்வோம் என்றார்கள். எழுதப் படிக்கத் தெரியாதவர்களே இல்லாமல் பண்ணுவோம் என்றார்கள். எல்லோரையும் படித்தவர்களாகப் பண்ணுவோம், எல்லோரையும் கைத்தொழில் வல்லவர்களாகச் செய்வோம் என்றார்கள். பூமியை எல்லோருக்கும் பொது உடைமையாகச் செய்வோம், பூமியில் விளைந்ததை எல்லோருக்கும் பகிர்ந்து கொடுப்போம் என்றார்கள். ருஷ்ய நாட்டிலே பட்டினி கிடந்து சாகும் உரிமை ஒருவருக்கும் கிடையாது, படிப்பில்லா மூடனாக ஒருவரும் இருக்கப்படாது என்று மக்களின் சுதந்திரத்தை அநியாயமாய்ப் பறித்தார்கள்!

அதோடு இந்த அழகான கொள்கைகளைப் பாதுகாப்பதற்காக ருஷ்யன் ஒவ்வொருவனையும் யுத்த வீரனாக்குவோம் என்றும் கூறினார்கள்.

இந்தப் புதிய மூடப் பைத்தியக்காரக் கொள்கைகள் பிடிக்காமற் போனால், ருஷ்யாவில் அடங்கிய ஒவ்வொரு மாகாணமும் வேண்டும்போது தனியாகப் பிரிந்து தொலைந்து போகலாம் என்றும் ஏற்படுத்தினார்கள்.

ஆயினும், பாருங்கள், அவ்வளவு மூட ருஷ்யர்களும் மேற்படி அசட்டுக் கொள்கைகளையெல்லாம் சகித்துக் கொண்டிருந்தார்களே தவிர, ஒரு மாகாணத்தைச் சேர்ந்தவர்களாவது பிரிந்து போய் க்ஷேமமாய் வாழ்கிறோம் என்று சொல்லவில்லை! அவர்களுடைய மௌடீகம் அவ்வளவாகத் தடித்துப்போயிருந்தது, பாவம்!

* * *

இதையெல்லாம் பக்கத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த மனிதர் ஒருவர், "ருஷ்யர்களுக்குப் பாடம் கற்பிப்பேன். அவர்களுடைய பைத்தியக்காரக் கொள்கைகளிலிருந்து உலகத்தைக் காப்பேன்!" என்று கிளம்பினார். அவர் பெயர்தான் அடால்ப் ஹிட்லர்.

ஐந்து வருஷத்துக்கு முன்பு ஹிட்லர் போர் முரசு கொட்டிக் கொண்டு கிளம்பிப் போலந்தை மூன்றே வாரத்தில் தீர்த்துக் கட்டினார். பெல்ஜியத்தையும் பிரான்ஸையும் இரண்டே வாரத்தில் தவிடு பொடியாக்கினார். இப்படி மகோன்மத்தமாய்க் கிளம்பியவர் பிரான்ஸைக் கைப்பற்றிய அடியோடு இங்கிலாந்து மீது பாய்ந்திருந்தால், இங்கிலாந்து பைஸலாகி யிருக்கும் என்று "மெட்ராஸ் மெயில்" பத்திரிகை திவ்யமாய் எழுதி யிருக்கிறது.

ஆனால் ஹிட்லர் அப்படிச் செய்தாரோ? கிடையாது! அதற்குப் பதிலாக அந்த மஹிபூபி கிழக்கு நோக்கி ருஷ்யா மீது பாய்ந்தார். இதற்குக் காரணம் அந்த நாளில் ருஷ்யா செய்த ஒரு முழு மோசமான ஏமாற்றல் காரியந்தான்.

ஆ! எப்படிப்பட்ட ஏமாற்றல்? சின்னஞ்சிறு பின்லாந்து தேசத்தின் மீது ருஷ்யர்கள் போர் தொடுத்து, போரில் வெற்றியடையாமல் பத்து மாத காலம் இழுத்துப் பறித்துக் கொண்டு நின்றார்கள். இதைப் பார்த்த ஹிட்லர், "இரண்டும் இரண்டும் நாலு; நாம் எண்ணியது சரியாப் போச்சு! ருஷியர்கள் அனுஷ்டிக்கும் மூடக்கொள்கைகளினால்தான் இப்படி அவர்கள் பலமிழந்து பேதைகளாகி விட்டனர்.

அவர்களுக்கு ஒரு பாடம் கற்பிக்கலாம். போல்ஷிவிக் பிசாசை ஐரோப்பாவை விட்டு விரட்டலாம்!'' என்று புறப்பட்டார். அப்படிப் புறப்பட்ட போது, போல்ஷிவிக் பிசாசைப் பற்றி ஏறக்குறைய அதே கருத்துள்ள சர்ச்சில் நாஜியுடைய நீசச் செயலைப் பாராட்டி யுத்தத்தை நிறுத்திவிட்டுச் சமாதானத்துக்கு ஓடி வருவார் என்றும் ஹிட்லர் ஆசையுடன் எதிர்பார்த்தார்! பாவம்! இரண்டு பக்கத்திலும் மோசம் போனார்!

ருஷ்யர் தம் கண்ணிலே மண்ணைத் தூவுவதற்காகவே பின்லாந்தில் அப்படி மோசடியாகப் பாசாங்கு செய்தனர் என்பதை அவர் கண்டாரா? சர்ச்சிலுக்குக் காரியந்தான் பெரிதே தவிர, வீரியம் பெரிதல்ல; காரியார்த்தமாக அவர் நமது கொள்கைகள், பேச்சுகள் எல்லாவற்றையும் விழுங்கி ஏப்பம் விடக் கூடியவர்; போல்ஷிவிக் 'கொலைகாரர்'களுடன் கூடக் கூசாமல் கைகுலுக்கக் கூடியவர் என்பதைத்தான் அவர் கண்டாரா?

பாவம்! மனுஷர் ஏமாந்து போனார்!

யுத்தம் ஆரம்பித்ததும் அந்தப் பொல்லாத ருஷ்யர்கள் என்ன செய்தார்கள்? ஓட ஆரம்பித்தார்கள் நின்று திருப்பிக் கூடப் பாராமல் மேலும் மேலும் ஓடினார்கள். பாவிகள், ஊரைக் கொளுத்தி விட்டு. உடைமைகளைக் கொளுத்தி விட்டு. நிலத்தில் விளைந்த பயிரைக் கொளுத்தி விட்டு ஓடினார்கள்.

மேலே, லெனின் கிராட் வரையில் ஓடினார்கள். நடுவில், மாஸ்கோ வரையில் ஓடினார்கள். கீழே, ஸ்டாலின் கிராட் வரைக்கும் ஓடினார்கள்.

அந்தக் காலத்தில் ஸ்டாலின் அழுத அழுகையும், கெஞ்சிய கெஞ்சலும், கதறிய கதறலும் உண்டே! அபாரம்!

கொடுக்கும் விஷயத்தில் கஞ்சர்களாகிய அமெரிக்கர்களையும் பிரிட்டிஷாரையும் கூட அல்லவா அவருடைய அழுகை இளக்கி விட்டது? அந்நாடுகளிலிருந்து டாங்கிகளையும் ஆகாச விமானங்களையும் அனுப்பச் செய்து விட்டது?

அப்படி அவருக்கு அப்போது ஆயுதங்களைக் கொடுத்தது எவ்வளவு விருதாவான காரியம் என்பது இப்போதல்லவா தெரிய வருகிறது?

ஆசியாவின் சக்தியைக் கொண்டு வந்து ஐரோப்பாவை ஒரே அமுக்காக அமுக்கி, ருஷ்யாவின் ஆதிக்கியத்தை நிலை நாட்டுவதல்லவா அவருடைய அந்தரங்க நோக்கமாகக் காணப்படுகிறது?

நீங்களே உங்கள் கண் முன்னால் நடப்பதைப் பாருங்கள்! ஜெர்மனிக்கு மேற்கு எல்லையிலும் பாருங்கள்; ஜெர்மனியின் கிழக்கு எல்லையிலும் சற்றே பாருங்கள்.

மேற்கே நமது அன்பார்ந்த பிரிட்டிஷ் — அமெரிக்கப் படைகள் என்ன செய்து கொண்டிருக்கின்றன? ஒரு வாரம் அங்குலம். இருநூற்றிருபது அடி, நாற்பத்திமூன்று கஜம் — என்று இப்படியாக அவை ஜெர்மனியின் மேற்கு எல்லையில் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. பிடித்த இடங்களையே திருப்பித் திருப்பிப் பிடிக்கின்றன. கண்ணாமூச்சி விளையாடுகின்றன. சுற்றிச் சுற்றி வருகின்றன.

ஆனால், கிழக்கே இந்த ருஷ்யப் படைகள் என்ன செய்கின்றன? என்னமோ, அவசரம் கொள்ளை போவது போல் மைல் கணக்கில் முன்னேறுகின்றன! மைல் கணக்கில், ஐயா, மைல் கணக்கில்!

மார்ஷல் ஜுகாவ் தலைமையில் முன்னேறும் மத்திய ருஷ்யப் படைகள் சென்ற 17 நாளில் மொத்தம் 250 மைல் முன்னேறியிருக்கின்றனவாம்! எப்படியிருக்கிறது கதை! ஜெர்மன் எல்லைக்குள் முப்பது மைல் பிரவேசித்து 'ஸாண்ட்ஸ்பர்க்' நகரைப் பிடித்திருக்கின்றனவாம்! என்னமா யிருக்கிறது விஷயம்! இன்னும் ஜெர்மன் தலைநகராகிய பெர்லினுக்கு 40 மைல் தூரந்தான் பாக்கி யிருக்கிறதாம்! பார்த்தீர்கள் அல்லவா இலட்சணத்தை!

பொல்லாத மனுஷன் ஸ்டாலின்! பொல்லாதவர்கள் ருஷ்யர்கள்! அழுகையையும் துக்கத்தையும் ஓடுவதையும் நிறுத்தி விட்டு, லெனின்கிராட் — மாஸ்கோ — ஸ்டாலின் கிராட் கோட்டிலிருந்து முன்னேற ஆரம்பித்தார்களும் ஆரம்பித்தார்கள்! அப்புறம் ஒரே முன்னேற்றந்தான்! ஏதோ கொஞ்ச தூரம் முன்னேறினோம், அப்புறம் கொஞ்சம் பின் வாங்கினோம், ஓரிடத்தில் ஜயித்தோம், இன்னோரிடத்தில் தோற்றோம் என்று உண்டா? கிடையாது! பால்டிக் கடல் முதல் கருங்கடல் வரையில் வளைத்துக் கொண்டு ஒரே படியான முன்னேற்றமேதான்!

இரண்டு வருஷத்துக்கு முன்னால் வாயைத் திறந்தால் முனகிக் கொண்

டும். புகார் சொல்லிக் கொண்டிருந்த ஸ்டாலின், முன்னேற ஆரம்பித்த பிறகு உலக க்ஷேமத்தைப் பற்றியோ, அட்லாண்டிக் சமுத்திரத்தைப் பற்றியோ, பரலோக சுதந்திரத்தைப் பற்றியோ ஏதாவது வாய் திறக்க வேண்டுமே? கப்சிப்!

மனுஷர் வாயைத் திறந்து பேசினால்: "அதை ஜயித்தோம்! இதைப் பிடித்தோம்! அப்படி வெட்டி முறித்தோம்! இப்படி மணலைத் திரித்தோம்!" என்பதற்காகத்தான்.

ஆகக்கூடி விஷயம் என்னவென்றால், ஐரோப்பாவின் நிலைமை இப்போது சர்வ நெருக்கடியாயிருக்கிறது!

பிரிட்டிஷ் - அமெரிக்கப் படைகள் ஜெர்மனிக்குள் சீக்கிரம் பிரவேசிப்பது நல்லது. ருஷ்யப் படைகள் பெர்லினுக்குப் போய்ச் சேர்ந்து விடும்போலிருக்கிறது!

அப்படி நேர்ந்தால், அதனால் எப்பேர்ப்பட்ட விபரீதம் நேரிடும் என்று சொல்ல வேண்டியதில்லை.

நேற்று அடால்ப் ஹிட்லர் தமது ஆட்சியின் பன்னிரண்டாம் ஆண்டு கொண்டாட்டத்தில் அதைப் பற்றி ஐயந்திரிபுக்கு இடமில்லாமல் சொல்லிவிட்டார். "ஆசியாவிலிருந்து பெரிய கரிய பூதம் கிளம்பி ஐரோப்பாவுக்கு வந்திருக்கிறது! ஜாக்கிரதை!" என்று எச்சரித்து விட்டார். அவருடைய விசேஷ அன்புக்கும் மரியாதைக்கும் உரிய ஆங்கிலோ-ஸாக்ஸன் ஜாதியார் வாழும் பிரிட்டனுக்கும் எச்சரிக்கை கொடுத்தார். "ஆசிய பூதத்துக்கு நீங்களும் இரையாகப் போகிறீர்கள்! பொது உடைமை என்னும் கொடிய வியாதி உங்களையும் கபளீகரம் செய்யப் போகிறது!" என்றார்.

ஐரோப்பாவுக்கும், ஐரோப்பாவின் மூலம் உலகத்துக்கும் இப்பேர்ப்பட்ட அபாயகரமான நெருக்கடி ஏற்பட்டிருக்கும் சமயத்தில், நம்முடைய கடமையை நாம் செய்துவிட விரும்புகிறோம். பொது உடைமை வியாதியுடனே கூடப் பெர்லினை நோக்கி முன்னேறும் ருஷ்ய பூதத்தைப் பார்த்து, "நில்! அவசரப்படாதே!" என்று எச்சரிக்கை செய்கிறோம். "நம்முடைய கேள்விகளுக்குச் சரியான பதில் சொல்லிவிட்டு, அப்பால் அடி எடுத்து வை!" என்று கட்டளை விடுகிறோம்.

அவ்விதம் நாம் தோழர் ஸ்டாலினாகிய ருஷ்ய பூதத்துக்குப் போடும் கேள்விகள் இவைதான்:—

1. அட்லாண்டிக் சமுத்திரத்தின் சராசரி ஆழம் என்ன?

2. அட்லாண்டிக் சாஸனத்தின் நிஜ மர்மம் என்ன?

3. பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட்டின் நான்கு வகைச் சுதந்திரங்களைப் பற்றி உமது அபிப்பிராயம் என்ன?

4. லண்டனில் ஐந்து வருஷ காலமாக நடந்துவரும் போலிஷ் கவர்ன்மெண்டுக்காக பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட் செலவு செய்திருக்கும் பணத்தையெல்லாம் யார் கொடுப்பது? உமது பாப்பர் லப்ளின் கவர்ன்மெண்ட் கொடுக்குமா?

5. இந்தியாவின் சுதந்திரத்தைப் பற்றி நீர் ஏன் வாய் திறப்பதில்லை?

6 இந்தியாவில் ஒற்றுமை ஏற்பட்ட பிறகு பிரிட்டிஷார் போவார்களா? பிரிட்டிஷார் போன பிறகு ஒற்றுமை ஏற்படுமா?

7. உமக்கும் டிகாலுக்கும் ஏற்பட்ட இரகசிய உடன்படிக்கையில் எங்கள் புதுச்சேரியின் சுதந்திரத்தைப் பற்றி ஏதாவது நிபந்தனை போட்டிருக்கிறதா?

"மேற்படி கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லிவிட்டு மேலே பெர்லினை நோக்கி அடி எடுத்து வையுங்கள்! இல்லாவிட்டால் எப்படியாவது நாசமற்றுப் போங்கள்!" என்று ருஷ்யர்களுக்கு எச்சரிக்கை செய்கிறோம்.

இன்னும் ஒரு முக்கிய விஷயத்தை ருஷ்யர்களுக்கும் தோழர் ஸ்டாலினுக்கும் பட்டவர்த்தனமாகத் தெரியப்படுத்த விரும்புகிறோம். அவர்கள் தங்களுடைய சொந்தக் காரியத்துக்கு உத்தேசித்து 'இந்தியா'வின் பெயரை உபயோகிப்பதை அடியோடு வெறுக்கிறோம்.

சில நாளைக்கு முன் இவ்விதம் இந்தியாவின் பெயரைத் தங்கள் சுயகாரியத்திற்காக ருஷ்யர்கள் உபயோகித்திருப்பதை நாம் மன்னிக்கவே முடியாது. விஷயம் என்ன தெரியுமா? பிரிட்டிஷ் பார்லிமெண்டில் காப்டன் கிரஹாம் என்பவர் ருஷ்ய கவர்ன்மெண்டுக்கு ஒரு சூடு கொடுத்தார். லண்டனில் காத்திருக்கும் போலிஷ் கவர்ன்மெண்டை அவர்கள் மோசம் செய்ததைப் பற்றிக் குறிப்பிட்டு விட்டு, "போலந்தை என்னவென்று நினைத்தீர்கள்? உஸ்பெக்குகளையும் டாட்ஜிக்குகளையும் போன்ற அநாகரிக ஆசிய ஜாதியார் என்று நினைத்தீர்களா? போலந்தியர்

நாகரிக கிறிஸ்தவ ஐரோப்பிய ஜாதி யார் அல்லவா?'' என்று கேட்டார்.

இந்த ஒன்றும் நம்பர் கேள்விக்கு விடை சொல்லத் தெரியாமல் ருஷ்ய சர்க்கார் விழித்துவிட்டு, கடைசியில் அவர்களுடைய, 'இஸ்வெஸ்டியா'' பத்திரிகையில் என்ன எழுதினார்கள் தெரியுமா? ''ஓஹோ, உஸ்பெக்குகள் டாட்ஜிக்குகள் என்றால் அவ்வளவு மட்டமா? எங்கள் ருஷ்யாவில் அப்படிப்பட்ட ஏற்றத் தாழ்வு கிடையாது. இங்கு எல்லோரும் சமம். ஆசியாக்காரர்களைப் பற்றி இவ்வளவு அவமதிப்புடன் பேசும் மனுஷனுடன் நாங்கள் போகவே தயாராயில்லை. போலந்தின் சுதந்திரத்தைப் பற்றி இவ்வளவு பரிகிறவர்கள இந்தியாவைப் பற்றி என்ன சொல்லுகிறீர்கள்?'' என்று இவ்விதமாகத் தங்கள் சுய காரியத்துக்கு நம்முடைய இந்தியாவின் பெயரை இழுத்திருக்கிறார்கள்.

நல்லது: இப்போது இந்தியாவுக்காகப் பரிகிற ருஷ்யர்களுக்கு இரண்டு மூன்று வருஷத்திற்கு முன்னால் நம்முடைய ஞாபகமெல்லாம் எங்கே போயிற்று? அப்போதே ''இந்தியாவின் பிரச்னை தீர்ந்த பிறகுதான் ஹிட்லருடன் யுத்தம் செய்வோம்'' என்று அவர்கள் சொல்லுவதற்கென்ன? ''இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுக்காவிட்டால் உங்கள் டாங்குகளும் ஏரோப்ளேன்களும் எங்களுக்கு வேண்டாம்'' என்று சொல்லுவதற்கு என்ன? அப்போது இப்படி யெல்லாம் துணிச்சலாகச் செய்யத் தைரியமில்லாத யோக்கியர்கள் இப்போது மட்டும் எதற்காக இந்தியாவின் பெயரை எடுக்கிறார்கள்? ஜெர்மனியையும் பிரிட்டனையும் அமெரிக்காவையும் ஏமாற்றியது போல் நம்மையும் ஏமாற்றி விடலாம் என்ற எண்ணமா? அந்தப் பாச்சா இங்கே பலிக்காது!

ருஷ்யர்கள் உண்மையில் யோக்கியர்களாக இருந்தால், இந்தியாவின் நட்பை அவர்கள் கோரினால், பெர்லினுக்குப் போவதற்கு முன் இந்தியப் பிரச்னையைத் தீர்த்து வைக்க வேண்டும். இல்லாத வரையில் அவர்களுடைய வண்டவாளத்தை இன்னும் முழுவதும் வெளிப்படுத்த வேண்டியதா யிருக்கும் என்று எச்சரிக்கிறோம். இந்தியக் கம்யூனிஸ்டுகளை காங்கிரஸ் சங்கங்களிலிருந்து வெளியேற்றியது போல இந்தியாவிலிருந்தே வெளியேற்றி விடுவோம். நமது அகராதிகளிலிருந்து பொது உடைமை என்ற வார்த்தையையே நீக்கி விடுவோம். இந்நாட்டில் வழங்கும் தேசப் படங்களிலிருந்து ருஷ்யா என்ற பெயரையே எடுத்து விடுவோம்.

* * *

மேற்கண்டவாறு எழுதிய பிறகு, ''ஹாஸ்யமாகப் பேச வேண்டாம்! அபாயம்!'' என்று ராஜாஜீ எச்சரித்ததாக ஸ்ரீமதி சரோஜினி தேவி கூறியது ஞாபகம் வருகிறது. ஒரு வேளை, கம்யூனிஸ்ட் வேட்டையில் ஈடுபட்ட நண்பர்களும் இன்றைத் தவளை அரசியல்வாதிகளும் நமக்கு வாழ்த்துச் செய்திகள் அனுப்பி விடுவார்களோ என்று பயமா யிருக்கிறது. எனவே விஷயத்தைப் பட்டவர்த்தனமாகச் சில வார்த்தைகளில் சொல்லி விடுகிறோம். மேலே நாம் எழுதியிருப்ப தெல்லாம் ருஷ்யாவை மனமாரப் பாராட்டி எழுதப்பட்டவையே யாகும்.

ஏதோ உலகத்தின் நல்ல காலத்தினால் தான் ஹிட்லர் ருஷ்யாவின் மேல் படையெடுக்கும் பிரமாண்டமான தவறு செய்தார் என்று நாம் கருதுகிறோம்.

ஜாதி வெறி கொண்ட ஹிட்லர் இந்த யுத்தத்தில் ஜயமடைந்தால் அதனால் உலகத்துக்குப் பெரும் ஆபத்து என்பதில் நமக்கு எள்ளளவும் சந்தேகமில்லை. மந்திரவாதிகள், சூன்யக்காரர்கள் முதலியோரிடம் சிக்கிக் கொண்டவர்களைப் போல் ஜெர்மானியரின் இரகசிய ஆயுதங்களுக்குப் பயந்து உலக மக்கள் அடிமைகளாக வாழும்படி நேரிடும்.

பிரிட்டிஷார் தன்னந் தனியாக ஜெர்மனியை ஜயித்திருந்தாலும், அதனால் உலகத்துக்கு க்ஷேமம் என்று சொல்ல முடியாது. சர்ச்சிலைப் போன்ற ஏகாதிபத்திய வெறியர்களின் ஆட்சியில் உலக மக்கள் வேறுவித இன்னல்களை அனுபவிக்க வேண்டியதா யிருக்கும்.

ஆகையினால்தான் ருஷ்யா இப்போது அடைந்து வரும் வெற்றி நமக்கு அளவற்ற மகிழ்ச்சி யளிக்கிறது என்று பச்சையாகக் கூறிச் சந்தோஷிக்கிறோம்.


ருஷ்யா இந்தியாவின் சார்பாகப் பேசினாலும் சரி, பேசாவிட்டாலும் சரி, ருஷ்யாவின் வெற்றி நமக்கு மகிழ்ச்சி தருவதாகும்.

ஐரோப்பாவில் ருஷ்யாவின் கை ஓங்குவதினால், உலகத்துக்கு நிச்சயமாக நன்மை உண்டு அப்படி உலகத்துக்கு ஏற்படும் நன்மையில் இந்தியாவுக்கும் பங்கு உண்டு என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

சென்ற இதழின் வெளியான காலக்ஷேபத் துணுக்குக்குப் பத்து ரூபாய் பரிசு பெற்றவர்: ஆர். கே. ரங்கராஜன் (தயவு செய்து விலாசம் தெரிவிக்கவும்.)

உன் பிரஷில் ரத்தம் கண்டால்

ஆபத்திற்கு அறிகுறி...



...பல் ஈறுகள் கெட்டுப்போவதற்கு முதல் அபாய எச்சரிக்கை! கொடிய ஈறு உபாதையாகிய 'பையோரியா' அல்லது ஜிஞ்ஜிவைடிஸோ உங்கள் பற்களை காலாவதியில் போக்கடித்து தேகத்தையும் பாழாக்கலாம். இந்த அபாயத்தைப் போக்க இப்பொழுதே "எஸ். ஆர்." டூத் பேஸ்ட் உபயோகியுங்கள்—அது ஈறு வியாதியைத் தடுக்கவும் கட்டுப்படுத்தவும் வல்லது. சுத்தமான சோடியம் ரிஸினோலியேட் ஈறு உபாதைகளைக் குணப்படுத்த பல வைத்தியர்கள் உபயோகிக்கிறார்கள். ஒழுங்காக தினம் "எஸ். ஆர்." உபயோகித்தால் அது உங்கள் ஈறுகளை ஆரோக்கியமாகவும் பற்களை உறுதியாகவும் வைத்திருக்கும்.

Gibbs

"S.R." TOOTHPASTE



GSR. 15-33 TM

D. & W. GIBBS LTD., LONDON, ENGLAND

இன்னும் ஏழு நாள்தான்

எட்டயபுரம் பாரதி ஞாபகச் சின்ன நிதிக்கு உதவுவோர் பங்கைச் செலுத்த இன்னும் ஏழு நாள் தான் பாக்கி யிருக்கிறது. தயவு செய்து பிப்ரவரி 10உக்குள் அனுப்பி வைக்கக் கோருகிறேன். ஆங்காங்கு வசூல் எடுத்து நிதிக்குப் பணம் சேர்க்கும் அன்பர்களும் பிப்ரவரி 10உ வரையில் வசூல் கணக்கை முடித்து அனுப்பி விடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

"பிப்ரவரி 10உக்குப் பிறகுதான் எனக்குப் பணம் அனுப்ப வசதிப்படும். அனுப்பினால் ஒப்புக் கொள்ளாமல் திருப்பி யனுப்பி விடுவீர்களா?" என்று ஒரு நேயர் கோபமாய்க் கேட்டிருக்கிறார்.

அவ்விதம் பாரதியார் நிதிக்கு வரும் தொகையைத் திருப்பி யனுப்ப எனக்கு பாத்தியதை இல்லை. நிதியை நிர்வாகம் செய்யப் போகும் டிரஸ்டிகளுக்கும் அந்த பாத்தியதை கிடையாது. பிப்ரவரி 10உக் குப் பிறகுதான் நிதிக்குப் பணம் அனுப்ப வசதியுள்ளவர்கள் தாராளமாக அனுப்பலாம். ஆனால் அவர்களுடைய பெயர் முதலிய விவரம் 'கல்கி'யில் வெளி வராது. இது வரையில் நன்கொடையாளருக் கெல்லாம் அனுப்பி வருவதுபோல் தனித் தனியாக ரசீதுகள் மட்டும் அனுப்பப்படும்.

மேற்படி விஷயத்தைத் தெளிவு படுத்துவதற்கு ஒரு அவசியமான காரணமும் நேர்ந்திருக்கிறது. திருநெல்வேலியில் பிப்ரவரி 3உ நடப்பதாக இருந்த உதவிக் கச்சேரியைச் சில காரணங்களால் ஒத்திப் போட வேண்டியதாகிவிட்டது. பிப்ரவரி 24உ மேற்படி கச்சேரி நடக்கிறது. ஆனாலும், அந்தக் கச்சேரியில் மிச்சமாகும் தொகை பாரதியார் நிதியில்தான் சேரப் போகிறது. கூடுமானால் நேரில் நானே போயிருந்து கையோடு வாங்கிக் கொண்டு வந்துவிடலாமென்று உத்தேசம்!

திருநெல்வேலிக் கச்சேரியைத் தள்ளிப் போட்டது ஒரு காரியத்துக்கு மிகவும் நல்லதாய்ப் போயிற்று. அந்த ஜில்லாவைச் சேர்ந்த பாரதி அன்பர்கள் சிலர், மேற்படி உதவிக் கச்சேரியை நன்றாக உபயோகப் படுத்திக்கொண்டு நிதிக்கு வசூல் செய்வதற்கு அவகாசம் போதாது என்று குறைப்பட்டார்கள். இப்போது எதிர்பாராத காரணங்களினால் கச்சேரியைத் தள்ளிப் போட்டிருப்பதால் கிடைத்துள்ள அவகாசத்தை அவர்கள் நன்கு உபயோகப்படுத்திக் கொள்ளலாம். பாரதியார் பிறந்த திருநெல்வேலி ஜில்லாவுக்குள்ள விசேஷ பாத்தியதையை நிலை நாட்டிக் கொள்ளலாம்.

இந்த வாரத்து ஜாபிதாவில் சேர்ந்துள்ள இரண்டு பெயர்கள் நேயர்களின் கவனத்தைக் கவரக் கூடியவை. உலகப் பிரசித்தி பெற்ற விஞ்ஞான மேதாவி ஸர் ஸி. வி. ராமனின் பத்தினியார் ஸ்ரீமதி லோகசுந்தரி ராமன் பாரதியார் நிதிக்கு அனுப்பிய ஐம்பது ரூபாய் நன்கொடை ஐம்பதினாயிரம் ரூபாய்க்குச் சமானம் என்று சொல்ல வேண்டும்.

தமிழ் நாட்டு ஸினிமா நடிகர்களுக்குள் ஸ்ரீ கே. சாரங்கபாணி ஒரு தனி ரகம் என்பது அநேகருக்குத் தெரிந்த விஷயம். அவருடைய தூய ஒழுக்கமும், காங்கிரஸ் அபிமானமும், சதா பக்தியும் பிரசித்தி பெற்றவை. அவருடைய வாழ்க்கையின் தூய்மை அவருடைய உயர்தர ஹாஸ்ய நடிப்பிலும் பிரதிபலிப்பதைக் காணலாம். ஸ்ரீ சாரங்கபாணியின் ரூ. 101 நன்கொடையை நான் பெரிதும் பாராட்டுகிறேன் என்று சொல்ல வேண்டியதில்லை.

ஜனவரி 31உ வரையில் வசூல்

ஸ்ரீ கே. சாரங்கபாணி, ஹாஸ்ய நடிகர், கும்பகோணம்		101	0	0
ஸ்ரீமதி லோகசுந்தரி ராமன், பங்களூர்		50	0	0
* ஸ்ரீ எம். ஏ. ஜி. சுவாமி, டிரிக் ரோட், ஸிந்து		50	0	0
ஆசிரியர்களும், மாணவர்களும், லண்டன் மிஷன் ஹைஸ்கூல், சேலம் (ஹெட் மாஸ்டர் ஸ்ரீ வி. வேதநாயகம் பி.ஏ.எல்.டி. மூலம்)		27	0	0
ஸ்ரீ எஸ். ஆர். எஸ். உதயப்பா, "திருமகள் நிலையம்," [illegible]		25	0	0
ஸ்ரீ சீனு செட்டி, இரும்பு வியாபாரம், பார்க் டவுன், சென்னை		25	0	0
* இருபத்தைந்து ரூபாய்க்கு உட்பட்ட நன்கொடைகள்		159	1	1
* அன்பர்கள் மூலம் வந்த நன்கொடைகள்	ரூ.	1321	5	0
ஏற்கெனவே வசூல்	ரூ.	24 020	15	5
ஆக மொத்தம்	ரூ.	25,679	5	6

* விவரம் அடுத்த இதழில் வெளி வரும்.

வானசஞ்சாரம்

இசைத்தேன்

கர்நாடக சங்கீதத் திருமூர்த்திகளில் ஒருவரான ச்யாமா சாஸ்திரிகளின் பாடல்களுக்கென்று 23ல். சென்னை நிலையத்தார் ஒரு புதுச்சேதிரம் ஏற்படுத்தியது பாராட்டத்தக்கது. அன்று அப்பாடல்களை வழங்கியவர் டி. கே. ஆராவமுத அய்யங்கார் திறம் கொண்ட இளம் பாடகர். நயமான சாரீரத்தில் ஒழுங்கான சஞ்சாரங்களோடு சங்கராபரணம், மத்யமாவதி, கல்யாணி ராகங்களையும் ஐந்து கிருதிகளையும் பாடினார். 'ஓ ஜகதம்பா' உருப்படியும் அதில் கண்ட ஸ்வரமும் சிறப்பாயிருந்தன.

அன்றிரவு அதே நிலையத்தில் கொத்தமங்கலம் ஸ்ரீநிவாசன் ஒரு மணி நேரம் கனிப்பான ஆழமும் பிர்க்கா நிறைந்த வழியும் கொண்டு சக்கை போடு போட்டார். கல்யாணி, மலயமாருதம் இவைகளோடு காபியையும் ஜோராய் வாசித்துவிட்டார். கல்யாணி உருப்படியில் நிரவல் ஸ்வரங்கள் ராகபாவத்துடன் பிரகாசமாயிருந்தன.

24ல். காலையில் நல்லவேளை முகத்தில் விழித்தேன் போலும். சென்னை நிலையத்திலிருந்து அடக்கமாக நாதமும் அதிக எழிலும் கொண்ட நாதஸ்வர கானம் மங்களகரமாய்க் காதில் விழுந்தது. வாசித்தவர் எஸ். நாராயணசாமி பிள்ளை. மாலையிலும் வாசித்தார். பூர்வி கல்யாணி, ஹம்ஸத்வனி, ஷண்முகப்ரியா ராகங்களில் அசாதாரண அழகு கமகங்களும் அழுத்தமான சஞ்சாரங்களும் நிறைந்திருந்தன.

அன்று அதே நிலையத்தில் பாடிய ஆர். நீலகண்டய்யரின் கானமும் அனுபவிக்கத்தக்கதாகவே யிருந்தது. அவர் எடுத்துக்கொண்ட ராகங்களில் தேர்வும் எதுகை கம்போதிரமும் மேன்மையாயிருந்தன.

25ல். சென்னையில் சந்தபாய் மாதவராவ், சங்கரி, திருச்சியில் பம் கே. கோவிந்தராஜ பாகவதர். இம்மூவரின் கச்சேரிகளும் கவனத்தை யீர்த்தன. முதல் இருவருக்கும் நயமான குரல். சந்தபாயினது சொந்தத்தில் பிர்க்கா வகை, கார்வைகளும் வளைவு நெளிவுகளும் தென்பட்டன. சங்கராபரணம், கல்யாணி ராகங்கள் தெளிவாயிருந்தன. 'தூக்கிய திருவடி'யில் ஸ்வரம் நன்றாயிருந்தது. சங்கரியினது சொக்கவும் கமகப் பிடிகளும் கொண்ட சுகவழி. கல்யாணியை விஸ்தாரமாய் வழங்கினார்.

கோவிந்தராஜ பாகவதரின் சாரீரம் சற்று விரிந்தது போலும். அவர் பாடிய ஐந்து ராகங்களில் ஷண்முகப்ரியா, ஜக்கைக கமகப் பிடிகள் நிறைந்ததா யிருந்தது. ஆனால் இவருக்கு அச்சிட்ட புரோகிராம் ஒன்று. பாடியதெல்லாம் வேறு.

26ல். சென்னை ரேடியோவிலிருந்து சதாரணமாய் அதிகம் கேட்கப்படாத ஜுஜாவந்தி, பஹுதாரி, நளினகாந்தி முதலிய ராகங்கள் நல்ல உருப்படியுள்ள குரலிலிருந்து நிதானமாய்ப் படிப்படியான சஞ்சாரங்களுடன் காதில் விழுந்தன. பாடியவர் திருவாடி வி. வி. ராமச்சந்திரன் என்றறிந்தேன். காபியில் 'இனி உனதருள்' உருப்படி சற்று அபூர்வமாய்த் தென்பட்டது. இக்காலத்தில் புதிது புதிதாய்ப் பொருள்களுடன் விளம்பும் வகைகளைச் சேர்த்தும், பிறுவின் சாயையுள்ளதுமான 'மாஜுவதாரி' என்ற ராகத்தில் 'கருணை இதாவே' என்ற உருப்படியில் கண்ட ஒரு ஸ்வரப் பிடிப்பு எல்லாவற்றிலும் பூர்வமாகவே யிருந்தது.

அன்றிரவு திருச்சியிலிருந்து கேட்ட கோமளம் ஸ்ரீனிவாசன் இவர்கள் சேர்ந்து இழைந்து பாடியது வெகு சுகமாயிருந்தது. இருவருக்கும் நயமான சாரீரம். ஒருவரது சற்று அடங்கியதாய்க் கேட்டது. ஜகன்மோஹினி, ஆரபி, சங்கராபரணம், ஸிம்மேந்திரமத்யமம் என்று ராகங்களையும் உருப்படிகளையும் சுகபாவத்துடன் வழங்கினார்கள். மாறி மாறி இருவரும் பாடிய ஸ்வரமும் தனிச் சிறப்பாயிருந்தது.

27ல். திருச்சியிலிருந்து கேட்ட என். கே. வெங்கடேசனுக்கு நடுத்தர சாரீரம். சரளமான உருப்படி. அழகு சஞ்சாரங்களும் விறுவிறுப்பும் கொண்டு ராகங்களை நல்ல வேலைப்பாடுகளுடன் திறமையாகக் கையாண்டார். மேல் ஸ்தாயியில்தான் அதிக சிறப்புக் கண்டது. சங்கராபரணம் ஸிம்மேந்திரமத்யம ராகங்கள் தேர்ந்ததாயிருந்தன.

28ல். கச்சேரிகளில் சென்னையில் கேட்ட கச்சேரி அக்கு ராமானந்தரது முதன்மையாயிருந்தது. இனிமையாய் இழையும் குரல்; காகு அசைவுகளின் அழகு விசேஷம். சௌராஷ்டிரத்தில் முதல் பாகத்தில் நாட்டையும், இரண்டாம் பாகத்தில் பந்துவராளியும் வளைப்பு வடிவங்களை விளங்கின. 'இகாரம் தரும்' உருப்படியும் 'நின்று நேரம்பின்றேனு'வில் கண்ட நிரவல் ஸ்வரமும் அதிசுகமா யிருந்தன.

அன்று 3 மணிக்கு அதே நிலையத்தில் பாலக்காடு ராமநாராயணன், கனகனத்த சாரீரத்தில் வழக்கம்போல் ஒழுங்கான முறையில் கச்சேரி செய்தார். பூர்வி கல்யாணி வாசஸ்பதி ஆலாபனைகள் சிறந்து விளங்கின.

29ல். காலையிலும் பிற்பகலிலும் வாசித்த வி. பி. ரங்கசாமி அய்யங்காரின் வீணை வாத்யம் ரஞ்சகமா யிருந்தது. ஷண்முகப்ரியா, பந்துவராளி, மலயமாருத ராகங்கள் தெளிவா யிருந்தன. 'எவரனி நிர்ணயிஞ்சிரா' என்ற யாவருமறிந்த உருப்படியை 'காம்போதியில் பாடுவோர்' என்று அனௌன்ஸர் கூறியதுதான் புதுமையா யிருந்தது. வைணிகர் அதற்கேற்பட்ட ராகத்திலேதான் வாசித்தார்.

அன்றிரவு திருச்சியில் நடந்த பாலக்காடு ராமபாகவதரின் பெரிய கச்சேரி. கட்டை சாரீரமாயினும் ஞானமயம் நிறைந்த சங்கீதம். அசல் கர்நாடக வழி. தன்யாசி, மோகனம், பந்துவராளி ராகங்கள் சிறப்புற்றிருந்தன. மோகனத்தில் கண்ட படிப்படியான சஞ்சாரங்களும் மேல்ஸ்தாயி வேலைப் பாடுகளும் விசேஷமா யிருந்தன.



சிவகாமியின் சபதம்

அத்தியாயம் 50

காஞ்சியில் கோலாகலம்

ஏறக்குறைய அர்த்த ராத்திரியில் வராக நதிக் கரையிலிருந்து புறப்பட்ட மாமல்லரும் தளபதி பரஞ்சோதியும் காஞ்சிமா நகரை நோக்கி விரைந்து சென்றார்கள். வழியில் இரண்டு காத தூரத்துக்கு ஒன்றாக ஏற்பட்டிருந்த இராஜாங்க விடுதிகளில் அவர்களுக்குக் கால்மாற்றுக் குதிரைகள் ஆயத்தமாயிருந்தன. உணவும், சிரம பரிகாரம் செய்து கொள்ள வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இவ்வளவுடன் ஒவ்வொரு விடுதியிலும் நூறு குதிரை வீரர்கள் அணிவகுத்து ஆயத்தமாக நின்றார்கள். மாமல்லருடன் வந்த வீரர்களை ஆங்காங்கே தங்கி வரும்படி நிறுத்தி விட்டுப் புதிய துணை வீரர்களுடன் செல்வது பிரயாணத்தின் விரைவுக்கு அநுகூலமாயிருந்தது.

இந்த முன்னேற்பாடெல்லாம் மாமல்லருக்கு மிக்க வியப்பளித்தது. அதே வழியில் முன்னால் சென்ற தமது தந்தைதான் அந்த ஏற்பாடுகளெல்லாம் செய்து விட்டுப் போயிருக்க வேண்டும் என்று நினைத்து மாமல்லர் அளவற்ற இறும்பூது அடைந்தார். பரஞ்சோதியிடமும் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தார்.

அதற்குப் பரஞ்சோதி, "ஆஹா! இதை ஒரு பிரமாதமாகச் சொல்லப் போகிறீர்களே? சமுத்திரத்தின் ஆழத்தையாவது கண்டு பிடிக்கலாம்; சத்ருமல்லரின் முன் ஜாக்கிரதைக்கு ஆழம் கண்டு பிடிக்க முடியாது. இதையெல்லாம் எட்டு மாத காலம் அவருடன் கூட இருந்து நேரிலேயே பார்த்தேன். அதனாலேதான், சக்கரவர்த்தி எது சொன்னாலும் அதற்கு மாறாக என் மனம் நினைப்பது கூட இல்லை" என்றார்.

கல்கி

வட பெண்ணையாற்றங் கரையில் பல்லவ சைன்யத்தோடு எட்டு மாதம் தங்கி, வாதாபி சைன்யத்தை மேலே வர வொட்டாமல் தடுப்பதற்குச் சக்கரவர்த்தி கையாண்ட அதிசயமான யுக்திகளையும் தந்திரங்களையும் பற்றிப் பரஞ்சோதி பிரஸ்தாபித்தார். இது மாமல்லருக்கு அவ்வளவு உற்சாகம் அளிக்கவில்லை. அவருடைய முகம் சுருங்கியது.

"தளபதி! நீங்கள் என்னதான் சொல்லுங்கள். எதிராளியை நிறுத்தி வைப்பது, ஏமாற்றுவது, பின்வாங்கித் தப்பித்துக் கொண்டு வருவது—இதெல்லாம் எனக்குப் பிரியம் கிடையாது; பெருமையும் இல்லை!" என்றார் மாமல்லர்.

அப்போது பரஞ்சோதி, "யுத்தத்தில் பின்வாங்க வேண்டிய சமயமும் உண்டு; எதிர்த்துத் தாக்க வேண்டிய சமயமும் உண்டு. ஒன்று கவனித்தீர்களா? ஆர்

விநீதனைத் துரத்திக் கொண்டு, தென் பெண்ணைக்கு அப்பால் தாங்கள் போக வேண்டாமென்று சக்கரவர்த்தி கட்டளையிட்டிருந்தார். அதற்காகத் தாங்கள் வருத்தப்பட்டீர்கள். ஆனால் துர்விநீதன் தப்பித்துக் கொண்டு விட்டானா? இல்லையே? சக்கரவர்த்தி அதற்கும் ஏற்பாடு செய்திருந்தார் அல்லவா? தென்பெண்ணைக்கு அக்கரையில் திருக்கோவலூர் கோட்டத் தலைவன் அனந்தன் மழவராயனை ஆயத்தமாயிருக்கும்படி செய்திருந்தார் அல்லவா? துர்விநீதன் சமணப் பள்ளியில் ஒளிந்து கொள்ள முயன்றும் தப்ப முடியவில்லையே? இப்போது மழவராயன் கோட்டையில் சிறைப்பட்டிருக்கிறானல்லவா? பிரபு! பெரிய பிரம்மாண்ட சைன்யங்களை வைத்துக் கொண்டு யுத்தத்தில் ஜயிப்பது ஒரு பிரமாதமில்லை. எத்தனையோ பேர் அவ்விதம் ஜயித்திருக்கிறார்கள். ஆனால் நமது சக்கரவர்த்தியைப்போல் சொற்ப சைன்யத்தை வைத்துக் கொண்டு மகத்தான எதிரிகளின் மேல் ஜயம் அடைந்தவர்கள் யாரும் இல்லை!" என்றார்.

"ஆமாம்; அதில் என்ன சந்தேகம்? பல்லவ வீரன் ஒவ்வொருவனும் சளுக்க வீரன் பத்துப் பேருக்கு இணையானவன அல்லவா? புள்ளலூரில் தான் பார்த்தோமே?" என்றார் மாமல்லர்.

மகேந்திர சக்கரவர்த்தி சுத்த வீரத்தைக் கைக்கொள்ளாமல் தந்திரத்தைக் கையாண்டு ஜயிக்கிறார் என்ற எண்ணமே குமார சக்கரவர்த்திக்கு வேம்பாயிருந்தது. அதை அவரால் ஒப்புக்கொள்ளவே முடியவில்லை.

* * *

பாதி இரவும் ஒரு பகலும் அந்த வீர சிநேகிதர்கள் இடைவிடாமல் பிரயாணம் செய்து சூரியன் அஸ்தமிக்கும் சமயத்தில் காஞ்சிமா நகரின் தெற்கு வாசலை அணுகினார்கள்.

அதே தெற்கு வாசலை, ஒன்பது மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் அஸ்தமன நேரத்தில், நாகநந்தி பிக்ஷுவுடன்கூடத் தான் அணுகியது பரஞ்சோதிக்கு நினைவு வந்தது. அன்று கோட்டைக் கதவின் உள் துவாரத்தின் வழியாக நகருக்குள் பரஞ்சோதி பிரவேசித்தார். இன்றைக்கு அவ்விதம் பிரவேசிக்க வேண்டியிருக்கவில்லை.

மாமல்லரும் பரஞ்சோதியும் துணையாக வந்த வீரர்களுடன் கோட்டை வாசலை நெருங்கியதும், கோட்டை வாசலின் மேல் மச்சு மண்டபத்தில் ஜயபேரிகைகள் முழங்கின; வெற்றிச் சங்குகள் ஒலித்தன; கொம்புகள் கோஷித்தன. கோட்டைக்கு உட்புறத்திலிருந்து ஒரே கோலாகல சத்தம் எழுந்தது.

கோட்டைக் கதவுகள் 'படார்' என்று திறந்தன. உள்ளே பார்த்தால், நகரம் கண் கொள்ளாக் காட்சி அளித்தது. விசாலமான வீதிகளில் நடுவில் கண்ணுக்கெட்டிய தூரம் பல்லவ வீரர்கள் அணிவகுத்து நின்றார்கள். வீதியின் இரு புறங்களிலும் நகர மாந்தர்கள் 'ஜே ஜே' என்று நெருங்கி நின்றார்கள். இருபுறத்து வீடுகளின் உப்பரிகை மாடங்களில் திவ்யாலங்கார பூஷிதைகளாக இளம் பெண்கள நின்றார்கள். அவர்கள் பக்கத்தில் மல்லிகை முல்லை கொன்றை முதலிய மலர்கள் குப்பல் குப்பலாகக் கிடந்தன. இரண்டு கை நிறையப் புஷ்பங்களை எடுத்து அவர்கள் சித்தமாய் வைத்துக் கொண்டிருந்தார்கள். எதற்காக வென்று சொல்ல வேண்டுமா? வெற்றி வீரராகத் திரும்பி வரும் குமார சக்கரவர்த்தியின் மீது மலர் மாரி பொழிவதற்காகத்தான்.

காஞ்சி நகரம் அன்று அப்படிக் கோலாகலமாய் இருந்ததற்குக் காரணங்கள் இரண்டு இருந்தன. முதலாவது, வடக்குப் போர்க்களத்திலிருந்து பல்லவ சைன்யம் சேனாபதி கலிப்பகையின் தலைமையில் காஞ்சிக்குத் திரும்பி வந்து சேர்ந்திருந்தது. சென்ற சில நாளாக ஜனங்கள் நகரை விட்டுப் போய்க் கொண்டிருந்தபடியால் பாழடைந்தது போலிருந்த நகரம் ஒரு லட்சம் போர் வீரர்களின் வரவினால் கலகலப்பை அடைந்திருந்தது. அதோடு புள்ளலூர்ச் சண்டையில் மாமல்லரின் வெற்றியைப் பற்றிய செய்தியானது அனைவருக்கும்

உற்சாகத்தை உண்டு பண்ணியிருந்தது. வடக்குப் போர்க்களத்திலிருந்து மனச் சோர்வுடன் திரும்பிய வீரர்களும், நகரைவிட்டுப் போகாதிருந்த ஜனங்களும் அந்தச் செய்தி கேட்டு உற்சாகம் அடைந்தார்கள். அச்செய்தி வந்த பிறகு நகர மாந்தரில் யாருமே வெளியேற விரும்பவில்லை. போவதற்கு ஆயத்தம் செய்திருந்தவர்கள் கூடப் பிரயாணத்தை நிறுத்தி 'நடப்பது நடக்கட்டும்' என்று இருந்து விட்டார்கள்.

இத்தகைய உற்சாகத்துக்கும் குதூகலத்துக்கும் காரண புருஷரான குமார சக்கரவர்த்தி அன்று நகருக்குத் திரும்பி வருகிறார். அவரை நேரிலேயே பார்க்கப் போகிறோம் என்று தெரிந்த பிறகு, ஜனங்களின் குதூகலத்துக்குக் கேட்க வேண்டுமா? தெருக் கோட்டை வாசல் முதல் அரண்மனை வாசல் வரையில் ஒரே ஜனத்திரள் மயமாயிருந்தது.

தூக்கி நிறுத்தியிருந்த பாலம் அகழியின்மேல் விடப்பட்டதும், மாமல்லர் அதன் வழியாகக் கோட்டைக்குள் பிரவேசித்தார். பரஞ்சோதியும் பற்று ஆணை வீரர்களும் அவரைப் பின்தொடர்ந்து சென்றார்கள். திறந்த கோட்டைக் கதவுகள் மறுபடி சாத்திக் கொண்டன.

கோட்டை வாசலைத் தாண்டி மாமல்லர் நகர் வீதியில் பிரவேசித்ததும், ஏககாலத்தில் ஆயிரக் கணக்கான ரிஷபக் கொடிகள் தெருவெல்லாம் உயர்ந்தன. வீதியில் அணிவகுத்து நின்ற வீரர்கள் அதுவரை அக்கொடிகளைத் தாழ்த்திப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். மாமல்லர் உள்ளே பிரவேசித்ததும் கொடிகள் மள மள வென்று உயர்ந்து காற்றில் சட சட வென்று அடித்துக் கொண்ட



காட்சி ஏதோ ஒரு இந்திர ஜாலக் காட்சி மாதிரி தோன்றியது. அதிலிருந்து குமார சக்கரவர்த்தி நகருக்குள் பிரவேசித்து விட்டார் என்பதை நெடுந் தூரத்துக்கு நெடுந்தூரம் நெருங்கி நின்ற ஜனத்திரள்கள் தெரிந்து கொண்டன. அவ்வளவு ஜனங்களும் ஒருவரோ டொருவர் அந்தச் செய்தியைக் கூறி மகிழ்ந்து கொண்டபோது எழுந்த சத்தமானது ஏழு சமுத்திரங்களும் ஒரேயடியாகப் பொங்கி வந்தால் எப்படிப்பட்ட பேரொலி உண்டாகுமோ அம்மாதிரி தொனித்தது.

மாமல்லரை வரவேற்பதற்காகக் கோட்டை வாசலுக்கருகில் அமைச்சர் குழுவினர், மந்திரி மண்டலத்தார் இவர்களுடன் சேனாபதி கலிப்பகையாரும் காத்திருந்தார். மாமல்லரும் பரஞ்சோதியும் குதிரைகள் மீதிருந்து இறங்கினார்கள். தங்க நிறமான கொன்றைப் பூக்களை அழகாகத் தொடுத்திருந்த பெரியதொரு மாலையை மாமல்லரின் கழுத்தில் முதல் அமைச்சர் சூட்ட, சேனாபதி கலிப்பகையார், "வாழ்க! வாழ்க! புள்ளலூர்ப் போர்க்களத்தில் கங்க நாட்டு மன்னனைப் புறங்கண்ட வீராதி வீர மாமல்லர் வாழ்க! வாழ்க!" என்று கோஷித்ததும், "வாழ்க! வாழ்க!" "ஜய விஜயீபவா!" என்ற கோஷங்கள் ஆயிரமாயிரம் கண்டங்களிலிருந்து ஏக காலத்தில் எழுந்து வானளாவி முழங்கின.

இந்த வரவேற்பு வைபவங்களினால் எல்லாம் மாமல்லருடைய முகத்தில் நியாயமாகத் தோன்றியிருக்க வேண்டிய மலர்ச்சி காணப்படவில்லை. அவருடைய உள்ளத்தில் இன்னதென்று தெரியாத ஏதோ ஒரு குறை உறுத்திக் கொண்டிருந்தது. தந்தை மகேந்திர சக்கரவர்த்தி முன்னதாக நகருக்கு வந்து இந்த வரவேற்பு வைபவத்தை யெல்லாம் ஏற்பாடு செய்திருக்கிறார் போலும்! பல்லவ ராஜ்யத்தின் மகத்தான எதிரியின் படைகள் காஞ்சியை நெருங்கி வந்து கொண்டிருக்கும்போது, அந்தப் படைகளை இனிமேல் தான ஜயிக்க வேண்டியதாயிருக்கும்போது, இந்த வெற்றி முழக்கங்கள் எல்லாம் எதற்காக?

மேலும், புள்ளலூர்ச் சண்டையில் வெற்றி கண்ட பெருமை உண்மையில் சக்கரவர்த்தியுடையதல்லவா? திடீரென்று அவர் வந்து கங்கர் படைகளின்மீது இடிபோல் விழுந்ததினால் அல்லவா அந்தப்படை சிதறி ஓடியது? துர்விநீதனைச் சிறை பிடித்தவரும் சக்கரவர்த்தியேயல்லவா? தான் செய்தது பிரமாதமாக ஒன்றுமில்லையே?

இத்தகைய பல எண்ணங்களினால் அலைப்புண்ட மாமல்லரின் மனநிலையை அவருடைய முகமும் பிரதிபலித்தது. அந்தக் கணமே தந்தையைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் மாமல்லரின் உள்ளத்தில் பொங்கிற்று. உடனே அவரும் பரஞ்சோதியும் தத்தம் குதிரைகள்மேல் ஏறிக்கொண்டு அரண்மனையை நோக்கி விரைந்து செலுத்தினார்கள்.

அரண்மனையை அடைந்து முன் வாசலையும் நிலா முற்றத்தையும் தாண்டி உள்ளே சென்றதும், அந்தப்புரத்து வாசலில புவனமகா தேவியார் சேடியர் புடைசூழக் காத்திருப்பதைக் கண்டார். போர்க்களத்திலிருந்து வெற்றிமாலை சூடித் திரும்பி வரும் வீர மகனை வரவேற்க அன்னை காத்திருந்ததில் வியப்பு ஒன்றுமில்லை. ஆனாலும் அதுகூட மாமல்லருக்குக் கசப்பாகத்தானிருந்தது. வீரப் புதல்வனுக்கு அன்னை ஆலாத்தியெடுத்து, திருஷ்டி கழித்த பிறகு, அந்தப்புரத்து உப்பரிகை மாடத்துக்கு அழைத்துக் கொண்டு சென்றாள்.

அந்த அருமை மகனை அன்புடன் அணைத்துக் கொண்டு, "குழந்தாய்! உன் வீரச் செயல்களைப் பற்றிக் கேட்டு என் தோள்கள் பூரித்திருக்கின்றன. நகர மாந்தர்கள் எல்லாம் சொல்ல முடியாத ஆனந்தத்தில் மூழ்கியிருக்கிறார்கள். ஆனால், உன் முகம் ஏன் வாடிச் சிணுங்கியிருக்கிறது? நெடுந்தூரம் பிரயாணம் செய்த அலுப்பினாலா?" என்று சக்கரவர்த்தினி கேட்டாள்.

"ஆம். அம்மா! அதுவும் ஒரு காரணந்தான். ஆனால் அது மட்டும் அல்ல. இந்த வரவேற்பு வைபவம் ஒன்றும் எனக்குப் பிடிக்கவில்லை. புள்ளலூர்ச் சண்டையில் அடைந்த வெற்றி ஒரு பெரிய வெற்றியா? வாதாபி சைன்யம் ஒரு பெரிய சமுத்திரம் என்றால், கங்கர் சைன்யம் ஒரு சிறு குட்டைக்குச் சமானம். அந்தச் சிறு படையை முறியடித்ததற்கும் நானே முழுக் காரணம் அல்ல......"

இதைக் கேட்ட புவன மகாதேவி, புன்னகையுடன் மாமல்லனுக்குச் சற்றுப் பின்னால் நின்ற பரஞ்சோதியைப் பார்த்து விட்டு, "ஆம்; உன் அருமைச் சிநேகிதருக்கும் அந்த வெற்றியில் பங்கு உண்டு என்று எனக்குத் தெரியும். உனக்கு வந்த பெருமை அவருக்குந்தான். உங்கள் இருவருக்கும் வேற்றுமை கற்பிக்கவே நான் விரும்பவில்லை" என்றாள்.

"ஆம், தாயே! எங்கள் இருவருக்குள்ளும் வித்தியாசம் இல்லைதான். ஆனால் நான் அதைப் பற்றிச் சொல்லவில்லை. உண்மையில், புள்ளலூர்ச் சண்டையில் நமது வெற்றிக்குக் காரணமானவர் என் தந்தைதான்!......"

"அதில் என்ன, குழந்தாய், சந்தேகம்? பல்லவ ராஜ்யத்தில் உன் தந்தையின் விருப்பமில்லாமல் ஒரு அணுக்கூட அசையாது. வெற்றியோ, தோல்வியோ, பெருமையோ, சிறுமையோ எல்லாம் அவரைச் சேர்ந்தது தான்......"

மாமல்லர் மேலும் பேச்சை வளர்த்த விரும்பாமல், "அம்மா! அப்பா எங்கே?" என்று கேட்டார். அப்போது புவன மகாதேவியின் முகத்தில் உண்மையாகவே ஆச்சரியக் குறி தென்பட்டது.

"இது என்ன குழந்தாய்? அந்தக் கேள்வியை உன்னிடத்தில் கேட்க



வேண்டும் என்றல்லவா நினைத்தேன்? என்னை நீ கேட்கிறாயே? அப்பா எங்கே? நீ பார்க்கவில்லையா? உன்னோடு வரவில்லையா?" என்றாள் புவனமகாதேவி.

அப்போதுதான் மகேந்திர சக்கரவர்த்தி காஞ்சிக்கு இன்னும் வந்து சேரவில்லையென்பது மாமல்லருக்குத் தெரிய வந்தது. இந்தச் செய்தி சொல்ல முடியாத வியப்பையும் மனக் குழப்பத்தையும் மாமல்லருக்கு அளித்தது.

தனக்கு முன்னாலேயே புறப்பட்டவர் ஏன் இன்னும் வந்து சேரவில்லை? வழியில் ஏதேனும் அபாயம் நேர்ந்திருக்குமோ! வாதாபிப் படைகள் கோட்டையைச் சூழ்வதற்குள் சக்கரவர்த்தி வந்து சேராவிட்டால் என்ன செய்வது? இராஜ்யப் பொறுப்பும் யுத்தம் நடத்தும் பொறுப்பும் தன்னையல்லவா சாரும்?—இத்தகைய எண்ணங்கள் மாமல்லரின் உள்ளத்தில் அலை மோதிக்கொண்டு எழுந்தன.

புவனமகாதேவி கூறிய செய்தியானது மாமல்லருக்கு எவ்வளவு வியப்பை அளித்ததோ, அவ்வளவு பரஞ்சோதிக்கு அளித்ததாகத் தெரியவில்லை. அவர் ஒருவாறு இதை எதிர்பார்த்ததாகவே தோன்றியது.

அத்தியாயம் 51

மந்திராலோசனை

அன்றிரவு ஒன்றரை ஜாமம் ஆனபோது, மந்திராலோசனை சபை கூடியிருப்பதாகவும் குமார சக்கரவர்த்தியின் வரவை அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவும் செய்தி வந்தது. மாமல்லரும் அன்னையிடம் விடை பெற்றுப் புறப்பட்டார்.

புள்ளலூரிலிருந்து சக்கரவர்த்தி செய்தி அனுப்பியதன் பேரில்தான் இன்றிரவு இந்த மந்திராலோசனை சபை கூடிற்று. *மந்திரிகளும், அமைச்சர்களும், தென் பல்லவ நாட்டுக் கோட்டத் தலைவர்களும் இந்த மந்திராலோசனைக்கு அழைக்கப்பட்டு வந்து கூடியிருந்தார்கள்.

தளபதி பரஞ்சோதி பின்தொடர, மாமல்லர் மண்டபத்திற்குள் பிரவேசித்ததும் அங்கே கூடியிருந்தவர்கள் எல்லாரும் எழுந்து நின்று மரியாதை செய்தார்கள். பிறகு அவரவர்களுடைய பீடங்களில் அமர்ந்தார்கள்.

சக்கரவர்த்தியின் சிம்மாசனம் வெறுமையாயிருந்தது. அதனருகில போட்டிருந்த மற்றொரு சிறு சிம்மாசனத்தில மாமல்லர் அமர்ந்தார். அவருக்குப் பின்னால் பரஞ்சோதி நின்று கொண்டிருந்தார். அவருக்கு ஏனோ உட்காரவே மனம் வரவில்லை. ஏதோ எதிர்பாராத சம்பவங்கள் நடக்கப் போவதாக அவருடைய உள்ளுணர்ச்சி சொல்லிக் கொண்டிருந்தது. இதனால் ஏற்பட்ட பரபரப்பு அவருடைய முகத்தில் பிரதிபலித்தது.

முதன் முதலில், முதல் மந்திரி சாரங்கதேவ பட்டர் சபையைப் பார்த்துக் கூறினார்:—

"இன்றைக்கு இந்த நேரத்தில் மந்திராலோசனை சபை கூட்டும்படியாகச் சக்கரவர்த்தி ஆக்ஞை இட்டதின் பேரில் இங்கே கூடியிருக்கிறோம். ஆனால் சக்கரவர்த்தி இன்னும் வந்து சேரவில்லை. வடக்குப் போர்க்களத்திலிருந்து நேற்று நமது வீர சைன்யத்துடன் திரும்பி வந்த சேனாதிபதி கலிப்பகையாருடன் சக்கரவர்த்தியும் வருவாரென்று எதிர் பார்த்தோம். பிறகு,

* பல்லவ சாம்ராஜ்யத்தில் அந் நாளில் மந்திரி மண்டலம் என்றும், அமைச்சர் குழு என்றும் இரண்டு சபைகள் சக்கரவர்த்திக்கு இராஜ்ய நிர்வாகக் காரியங்களில் துணை செய்தன. மந்திரிகள் என்போர், ஆலோசனை சொல்வதற்கு மட்டும் உரியவர்கள்; அமைச்சர், அல்லது அமாத்தியர் காரிய நிர்வாகத் தலைவர்கள்.

பல்லவ சாம்ராஜ்யம் பற்பல கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு கோட்டத்திற்கும் ஒரு தலைவன் உண்டு. நெருக்கடியான காலங்களில் இந்தக் கோட்டத் தலைவர்களும் மந்திராலோசனைக்கு அழைக்கப் படுவார்கள்.



இன்று மாலை நமது குமார சக்கரவர்த்தியுடன் பல்லவேந்திரரும் வருவார் என்று எண்ணினோம். இருமுறையும் ஏமாற்றமடைந்தோம். எக்காரணத்தினாலோ சக்கரவர்த்தி இன்னும் வந்து சேரவில்லை. விசித்திர சித்தரான நமது சக்கரவர்த்தி வேறு முக்கிய அலுவல்களில் ஈடுபட்டிருப்பதினால் இன்னும் வந்து சேரவில்லையா, அல்லது எதிர்பாராத இடையூறுகளினால் தடுத்து நிறுத்தப்பட்டாரா என்பதும் தெரியவில்லை. இந்த நிலைமையில் மந்திராலோசனையைத் தள்ளிப் போடுவதா, அல்லது குமார பல்லவரின் தலைமையில் நடத்துவதா என்று முதலில் தீர்மானிக்க வேண்டும். சக்கரவர்த்தி ஒன்பது மாதத்துக்கு முன்பு வடக்குப் போர்க்களத்துக்குச் சென்றபோது மாமல்லருக்குச் சர்வ இராஜ்ய அதிகாரங்களையும் கொடுத்து விட்டுப் போயிருப்பதால், அதன்படி மாமல்லரின் தலைமையில் மந்திராலோசனையை நடத்தலாம் என்றே நான் நினைக்கிறேன். உங்கள் எல்லாருடைய அபிப்பிராயமும் அவ்விதமே என்று நினைக்கிறேன்."

"ஆம்; ஆம்" என்று சபையோர் அனைவரும் ஆமோதித்தார்கள்.

பின்னர் முதல் அமைச்சர் ரணதீர பல்லவராயர் சொன்னதாவது:—

"இந்த சபையைத் தள்ளிப் போட்டு, சக்கரவர்த்தி வருகிற வரையில் காத்திருக்கலாம் என்பதற்கு முடியாத நிலைமையில் நாம் இருக்கிறோம். வாதாபியின் முன்னணிப் படைகள் கோட்டைக்கு இரண்டு காத தூரத்தில் வந்து விட்டதாகத் தெரிகிறது. இந்த நிலைமையில் நாம் செய்ய வேண்டியது என்ன வென்பது பற்றிக் குமார சக்கரவர்த்தியின் அபிப்பிராயத்தையும், ஆக்ஞையையும் அறிய விரும்புகிறோம். வடக்குப் போர்க்களத்திலிருந்து நமது வீர பல்லவ சைன்யத்தைச் சேதமடையாமல் கோட்டைக்குள் கொண்டு வந்து சேர்த்த சேனாதிபதி கலிப்பகையாரும் தமது அபிப்பிராயத்தைத் தெரியப்படுத்துவாரென்று ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்."

செஞ்சிக் கோட்டைத் தலைவன் சடையப்ப சிங்கன் சொன்னான்:—

"சக்கரவர்த்தியைப் பற்றிய செய்தியை முதலில் தெரிந்து கொள்ள விரும்புகிறோம். வடக்குப் போர்க்களத்தில் தமது சேனாதிபதியுடன் இருப்பதாகவே இத்தனை காலமும் எண்ணிக்கொண்டிருந்தோம். சைன்யத்தை விட்டுப் பிரிந்து சக்கரவர்த்தி எப்போது போனார், எங்கே போனார் என்பதைச் சேனாதிபதி தெரிவிக்கக் கூடுமா?"

சேனாபதி கலிப்பகையார் கூறினார்:- "பத்து தினங்களுக்கு முன்னால் சக்கரவர்த்தி இரண்டாயிரம் வீரர்களுடன் வடக்குப் போர்க்களத்திலிருந்து கிளம்பினார். காஞ்சிக் கோட்டைக்குச் சைன்யங்களுடன் வந்து சேரும்படியும், என்னை இன்று இங்கே சந்திப்பதாகவும் கூறி விட்டுச் சென்றார். அப்புறம் எனக்குத் தகவல் ஒன்றும் தெரியாது. புள்ளலூர்ப் போர்க்களத்துக்குச் சென்றதாக நான் ஊகித்தேன். சக்கரவர்த்தி அழைத்துச் சென்ற வீரர்களில் திரும்பி நகருக்கு வந்திருப்பவர்கள் அவ்விதம் தான் சொன்னார்கள்."

"புள்ளலூர்ப் போர்க்களம்" என்றதும் அங்கிருந்தோர் அனைவருடைய கண்களும் மாமல்லரை நோக்கின. சபையின் நோக்கத்தை அறிந்து மாமல்லர் சொன்னார்:—

"சேனாபதி ஊகித்தது உண்மை, தந்தை புள்ளலூர்ப் போர்க்களத்துக்குத்தான் வந்தார். ஆனால் இன்னும் இங்கு வந்து சேரவில்லையென்பது எனக்கும் வியப்பாய்த்தானிருக்கிறது. உங்களையெல்லாம் கோட்டை வாசலில் சந்தித்தபோது, என் தந்தை அரண்மனையில் என்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று எண்ணித்தான் அவ்வளவு அவசரமாகச் சென்றேன். அரண்மனைக்கு வந்ததும் பெரும் ஏமாற்றமடைந்தேன். என் அருமைத் தோழர் பரஞ்சோதிக்குச் சக்கரவர்த்தி அனுப்பியிருந்த ஓலையிலிருந்து அவ்விதம் நாங்கள் நினைக்க நேர்ந்தது. தளபதி! எல்லா விவரங்களையும் இவர்களுக்குச் சொல்லுங்கள்!"



அவ்விதமே தளபதி பரஞ்சோதி தெரிவித்தார். அதாவது, புள்ளலூர்ப் போரின் விவரம், துர்விநீதன் தோற்று ஓடியது, அவனைத் துரத்திக் கொண்டு தாங்கள் சென்றது, சக்கரவர்த்தியும் வேறு மார்க்கமாகத் தெற்கு நோக்கி வந்தது, மாமல்லர் வெள்ளத்தில் அகப்பட்டுக் கொண்டு மண்டபப்பட்டுக் கிராமத்தில் ஒதுங்கியது. தான் அவரைத் தேடியது, சக்கரவர்த்தி துர்விநீதனைச் சிறைப்படுத்திவிட்டுத் தனக்கு ஓலை அனுப்பியது ஆகிய விவரங்களைச் சுருக்கமாகக் கூறினார். ஆயனர்-சிவகாமி விஷயத்தை மட்டும் பிரஸ்தாபிக்கவில்லை.



அதன்மேல் முதன் மந்திரி சாரங்க தேவ பட்டர் பேசினார்:— "சக்கரவர்த்தி இல்லாத சமயத்தில் நம்முடைய பொறுப்பு பன்மடங்கு அதிகமாகியிருக்கிறது. தென்னாடு இதுவரையில் கண்டிராத பெரிய பகைவர் படை நம்மை நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. இந்த நிலைமையில் நாம் செய்ய வேண்டியதைப் பற்றிக் குமார சக்கரவர்த்தியின் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறோம். கோட்டத் தலைவர்களும் மாமல்லரின் ஆக்ஞையை எதிர்பார்க்கிறார்கள். காஞ்சிக் கோட்டை முற்றுகைக்கு உட்படுவதற்குள் அவர்கள் தங்கள் தங்கள் கோட்டத்துக்குப் போய்விட விரும்புகிறார்கள்."

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த மாமல்லர் உடனே மறுமொழி எதுவும் சொல்லவில்லை. ஏதோ தீவிரமான சிந்தனையில் ஆழ்ந்தவராகக் காணப்பட்டார்.

அதைக் கவனித்த முதல் அமைச்சர் ரணதீர பல்லவராயர், "முதலில் வடக்குப் போர்க்களத்திலிருந்து திரும்பி வந்திருக்கும் சேனாபதி கலிப்பகையார் தமது அபிப்பிராயத்தைச் சொல்லுவது நல்லது. சக்கரவர்த்தியின் அபிப்பிராயம் என்ன, இந்தச் சபை கூட்டச் சொன்னதின் நோக்கம் என்ன என்பது அவருக்குத் தெரிந்திருக்கக் கூடும்!" என்றார்.

சேனாபதி கலிப்பகையார் தம் ஆசனத்திலிருந்து எழுந்து நின்று



சொல்லத் தொடங்கினார்:— "எனக்குத் தெரிந்த வரையில் சக்கரவர்த்தி இந்த மந்திராலோசனை சபையைக் கூட்டியதின் காரணம், காஞ்சி முற்றுகை சம்பந்தமானதுதான். முற்றுகை ஒருவேளை ஓராண்டு காலம் நீடித்தாலும் நீடிக்கலாம் என்று சக்கரவர்த்தி எதிர்பார்க்கிறார். இந்த ஒரு வருஷமும் கோட்டைக்குள்ளே இருப்பவர்களுக்கும் வெளியில் இருப்பவர்களுக்கும் சம்பந்தம் எதுவும் இராது. ஒற்றப் போக்குவரவுக்கும் இடமிராது. இந்தக் காலத்தில் நமது கோட்டைத் தலைவர்கள் செய்ய வேண்டியது என்ன என்பதை அவர்களுக்குச் சக்கரவர்த்தி சொல்ல விரும்பினார். ஆதலின், சக்கரவர்த்தி வராமல் இந்த மந்திராலோசனையை நடத்துவதில் பயனில்லை என்பது என் அபிப்பிராயம்."

"சேனாபதியை ஒன்று கேட்க விரும்புகிறேன். வாதாபிப் படைகள் கோட்டை வாசலுக்கு எப்போது வந்து சேரும் என்று நினைக்கிறீர்கள்?" என்று கோட்டத் தலைவரில் ஒருவர் கேட்டார்.

"நாளைச் சூரியோதயத்துக்கு வந்து சேரலாம். நாளை அஸ்தமனத்துக்குள் கோட்டையை நாலாபுறமும் பகைவர்கள் சூழ்ந்துகொள்ளக் கூடும்."

"அப்படியானால், கோட்டைக்கு வெளியே போகிறவர்கள் சூரியோத

யத்துக்குள் போய்விட வேண்டுமல்லவா?"

"சக்கரவர்த்தி இன்று இரவுக்குள் வராத வரையில், கோட்டத் தலைவர்கள் அவரவர்களுடைய ஊருக்குத் திரும்பி விடுவதுதான் நல்லது. சக்கரவர்த்தியின் ஆக்ஞை அவர்களைத் தேடிக் கொண்டு வந்து சேரும்."

மறுபடியும் சற்று நேரம் மௌனம் குடிகொண்டிருந்தது. எல்லாரும் மாமல்லருடைய முகத்தை உற்று நோக்கிக் கொண்டிருந்தார்கள்.

"குமார சக்கரவர்த்தியின் ஆக்ஞையை எல்லாரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்" என்று முதன் மந்திரி கூறினார்.

மாமல்லர் தமது ஆசனத்திலிருந்து கம்பீரமாக எழுந்தார். சபையோர் அனைவரையும் ஒரு தடவை பார்த்தார். பிறகு கூறினார்:—

"பத்து மாதங்களுக்கு முன்பு சக்கரவர்த்தி காஞ்சியை விட்டுக் கிளம்பியபோது, தாம் திரும்பி வரும் வரை தம்முடைய ஸ்தானத்தில் சகல இராஜ்யாதிகாரங்களையும் வகிக்கும்படி உங்கள் முன்னிலையில் கட்டளையிட்டார். அது உங்களுக்கெல்லாம் நினைவிருக்கிறதல்லவா?"

"ஆம்; நினைவிருக்கிறது!" என்று சிலர் சொன்னார்கள். சிலர் ஆமோதித்துத் தலையை அசைத்தார்கள். ஏதோ விபரீதமான விஷயம் வரப்போகிறதென்று எண்ணியவர்களைப் போல் மற்றவர்கள் மௌனமாயிருந்தார்கள்.


"சக்கரவர்த்தி இன்னும் திரும்பி வரவில்லை. ஆகவே, அவர் எனக்கு அளித்த இராஜ்யாதிகாரத்தை இன்னும் நான் வகிக்கலாமல்லவா? அது உங்களுக்கெல்லாம் சம்மதந்தானே?"

"சம்மதம்! சம்மதம்!" என்பதாகச் சபையில் பல குரல்கள் கூறின.

முதல் மந்திரி மட்டும் எழுந்து, "பல்லவ குமாரரே! சக்கரவர்த்தி எங்களை ஆலோசனை கேட்கும்போது நாங்கள் ஆலோசனை சொல்வோம். அதுபோல் தாங்கள் கேட்டாலும் சொல்கிறோம். தீர ஆலோசித்த பின் தாங்கள் எப்படிக் கட்டளையிடுகிறீர்களோ, அப்படியே நடத்தி வைப்போம். யோசனை சொல்வதற்குத்தான் எங்களுக்கு உரிமை. ஆக்ஞை இடும் உரிமை தங்களது" என்றார்.

"மிகவும் சந்தோஷம். நீங்கள் சொல்ல வேண்டிய யோசனையெல்லாம் சொல்லுங்கள்; கேட்டுக் கொள்கிறேன். ஆனால், என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி நான் முடிவு செய்து விட்டேன். மந்திரிகளே! அமைச்சர்களே! கோட்டத் தலைவர்களே! அனைவரும் கேளுங்கள். படையெடுத்து வந்த பகைவர்களுக்குப் பயந்து கோட்டைக்குள் ஒளிந்து கொள்வது என்பது பல்லவ குலத்துக்கு என்றும் அழியாத அவமானத்தை உண்டு பண்ணக் கூடியது. தொண்டைமான் இளந்திரையனின் வழிவந்த வீர பல்லவ வம்சத்துக்கு இந்த மகத்தான களங்கம் என்னுடைய காலத்தில் ஏற்படுவதை நான் ஒரு நாளும் சகிக்க முடியாது. இந்தக் கோட்டைக்குள் இன்று சுமார் ஒரு லட்சம் பல்லவ வீரர்கள் போருக்குத் துடிதுடித்துக் கொண்டு காத்திருக்கிறார்கள். அவர்களை அழைத்துக் கொண்டு நாளைக்கே வெளியேறி நமது கோட்டை வாசலில் வாதாபி சைன்யத்தைத் தாக்குவது என்று முடிவு செய்து விட்டேன். அதற்கு உங்களுடைய சம்மதத்தை எதிர்பார்க்கிறேன். தளபதி பரஞ்சோதி என்னுடன் போர்க்களத்துக்கு வருவார். பரஞ்சோதிக்குப் பதிலாகச் சேனாபதி கலிப்பகையாரைக் கோட்டைக் காவலுக்கு நியமிக்கிறேன். இதை நீங்கள் ஒப்புக்கொண்ட பிறகு, வெளியூர்க் கோட்டத் தலைவர்களுக்கு நான் சொல்ல விரும்புவதைச் சொல்கிறேன்."

மாமல்லர் பேச்சை நிறுத்தியபோது இடி இடித்து ஓய்ந்தது போலிருந்தது. மந்திரிகளும் அமைச்சர்களும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தார்கள். சபையில் யாருக்கும் பேசுவதற்கு நா எழவில்லை.



மந்திராலோசனை

சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்

பதின்மூன்றாவது வருஷம் முடிந்தவுடன் பாண்டவர்கள் விராடனுடைய ராஜதானியை விட்டு அதைச் சேர்ந்த உபப்பிலாவியம் என்கிற நகரத்தில் பகிரங்கமாக வசித்து வந்தார்கள். அவ்விடமிருந்து தங்களுடைய பந்து மித்திரர்களுக்கெல்லாம் தூது அனுப்பினார்கள்.

துவாரகையிலிருந்து அர்ஜுனன் மனைவி சுபத்திரையையும் அவன் மகன் அபிமன்யுவையும் அழைத்துக்கொண்டு பலராமனும் கிருஷ்ணனும் மற்ற யாதவத் தலைவர்களும் உபப்பிலாவியம் வந்து சேர்ந்தார்கள். அவர்களுடன் யாதவ குலத்தைச் சேர்ந்த அநேக வீரர்களும் வந்தார்கள். ஜனார்த்தனன் வருகிறான் என்று கேட்டு மத்ஸ்ய ராஜனும் பாண்டவர்களும் சங்க முழக்கத்தோடு எதிர்கொண்டு வரவேற்றார்கள்.

பதின்மூன்றாம் ஆண்டு ஆரம்பத்தில் பாண்டவர்களை வனத்தில் விட்டுப் பிரிந்து துவாரகைக்குப் போன இந்திரசேனன் முதலானவர்கள் ரதங்களோடு உபப்பிலாவியம் வந்து சேர்ந்தார்கள். காசிராஜனும் சைப்பியனும் இரண்டு அக்குரோணி சேனையுடன் வந்து யுதிஷ்டிரனை அடைந்தார்கள்.

மூன்று அக்குரோணிகளுடன் பாஞ்சால ராஜனான துருபதன் வந்து சேர்ந்தான். துருபதனுடன் சிகண்டியும் திரௌபதியின் சகோதரன் திருஷ்டத்யும்னனும் திரௌபதியின் புத்திரர்களும் வந்து சேர்ந்தார்கள். இன்னும் பல ராஜாக்கள் தத்தம் பெருஞ் சேனைகளுடன் பாண்டவர்களுக்குத் துணை செய்வோம் என்று வந்து சேர்ந்தார்கள்.

அபிமன்யுவுக்கும் உத்தரைக்கும் சாஸ்திர முறைப்படி விவாகம் நிறைவேறிற்று. அதன் பின் எல்லா அரசர்களும் வீரர்களும் விராடனுடைய சபா மண்டபத்தில் மந்திராலோசனைக்கு உட்கார்ந்தார்கள். விராடன் பக்கத்தில் கிருஷ்ணனும் யுதிஷ்டிரனும் துருபதன் பக்கத்தில் பலராமனும் சாத்யகியும் ஆசனங்கள் பெற்று உட்கார்ந்தார்கள். இன்னும் பல அரசர்களும் மகாரதர்களும் சபையை அலங்கரித்தார்கள். கலகலப்பு அடங்கியதும் எல்லாரும் கண்ணனைப் பார்த்தார்கள். கண்ணனும் எழுந்து பேசலானான்.

"யுதிஷ்டிரர் சூதாட்டத்தில் வஞ்சனையாக ஜயிக்கப்பட்டதும், ராஜ்யம் அபகரிக்கப் பட்டதும், வனவாசப் பிரதிக்ஞை செய்யப்பட்டதும், பாண்டு புத்திரர்கள் பதின்மூன்று வருஷங்கள் கடுமையான விரதத்தைச் சொன்னபடி அனுஷ்டித்துச் சகிக்க முடியாத பலவித துன்பங்களைச் சகித்ததும் இவையெல்லாம் உங்களுக்குத் தெரிந்த விஷயங்களே. தரும புத்திரனுக்கும் அரசன் துரியோதனனுக்கும் எது ஹிதமோ, கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் எது நன்மையும் புகழும் தருவதும் தருமத்துக்கு இசைந்ததுமானதோ அதனை ஆலோசியுங்கள். தரும புத்திரர் அதர்மத்துடன் கலந்ததை ஏதுவாயினும் விரும்பமாட்டார். தம்மை வஞ்சித்துப் பலவிதக் கஷ்டங்களுக்கு ஆளாக்கிய திருதராஷ்டிர புத்திரர்களுக்கும் யுதிஷ்டிரர் க்ஷேமத்தையே விரும்புகிறார். கௌரவர்களுடைய லோப குணத்தையும் யுதிஷ்டிரருடைய தரும புத்தியையும் நன்றாக ஆலோசித்துச் சொல்லுங்கள். துரியோதனனுடைய எண்ணம் என்னவென்று உள்ளபடி தெரியவில்லை. சமர்த்தனும் சீலனுமான ஒருவனைத் தூதனாக அனுப்பி திருதராஷ்டிர புத்திரனுக்குச் சொல்ல வேண்டியதைச் சொல்லிச் சமாதானம் செய்து யுதிஷ்டிரனுக்குப் பாதி ராஜ்யத்தைக் கொடுக்கச் செய்ய வேண்டும்" என்று இவ்வாறு சொல்லி, தமயன் பலராமனைப் பார்த்தான்.

பலதேவன் சொன்னான்: "தருமமும் ராஜநீதியும் கூடிய யோசனையைக் கிருஷ்ணன் சொன்னான். அதைக் கேட்டீர்கள். துரியோதனன் தரும புத்திரர் இருவருக்கும் ஹிதமான யோசனை கிருஷ்ணனால் சொல்லப்பட்டது. அதை நான் மிகவும் பாராட்டுகிறேன். குந்தி புத்திரர்கள் தங்களுக்குக் கிடைத்த பாதி ராஜ்யத்தை இழந்து விட்டு அதை மறுபடி அடைய முயல்கிறார்கள். சமாதானத்தின் மூலம் அடைந்தார்களானால் பாண்டவர்களும் துரியோதனாதியர்களும் பிரஜைகளும் எல்லாருமே சுகமும் அமைதியும் அடைவார்கள். அதில் சந்தேகமில்லை. அதற்கு

ஒருவன் துரியோதனனிடம் போய் யுதிஷ்டிரருடைய வேண்டுகோளை அவனுக்குச் சொல்லி அவனுடைய கருத்தையும் தெரிந்து கொண்டு வர வேண்டும்; கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் சமாதானம் உண்டாக்கும் திறமையைப் படைத்தவன் போக வேண்டும். அப்படிப் போகும் தூதன் பீஷ்மரையும் திருதராஷ்டிரனையும் துரோணரையும் விதுரரையும் கிருபரையும் அசுவத்தாமனையும் கர்ணனையும் சகுனியையும் கலந்து ஆலோசித்துக் குந்தி புத்திரருக்காக வணங்கிக் கேட்டுக் கொள்ள வேண்டும். என்ன நேர்ந்தாலும் கோபிக்கக் கூடாது. தரும புத்திரன் தெரிந்தே சூதாட்டம் ஆடிச் செல்வத்தை இழந்தான். பல நண்பர்கள் தடுத்தும் ஆடுவேன் என்று பிடிவாதம் செய்து ஆடினான். சகுனி தாயக் கட்டை வீசுவதில் தேர்ச்சி பெற்றவன் என்று தெரிந்திருந்தும் தான் அதில் சமானமானவன் அல்ல என்பதை நன்றாக அறிந்திருந்தே யுதிஷ்டிரன் ஆட்டத்துக்கு ஒப்புக்கொண்டு ஆடினான். ஆகையால் இப்போது திருதராஷ்டிரனை வணங்கியே கேட்டுக் கொள்ள வேண்டும். தூதனாகப் போகிறவன் யுத்தப் பிரியனாக இருக்கக் கூடாது. எப்படியாவது சமாதானம் செய்து முடிக்க வேண்டும் என்ற எண்ணங் கொண்டவனே தூதனாகப் போகவேண்டும். துரியோதனனை நல்ல வார்த்தைகளினால் சமாதானப் படுத்துங்கள். அரசர்களே! யுத்தத்தை விரும்பாதீர்கள். சமாதானத்தில் சம்பாதிக்கப் பட்ட செல்வமே பயன் அளிக்கும். யுத்தத்தில் அநீதியே ஏற்படும்."

பலராமனுடைய கட்சி என்னவென்றால், 'தெரிந்தே யுதிஷ்டிரன் சூதாடிச் சொத்தைத் தோற்றான். பிரதிஜ்ஞைப்படி வனவாசம் முடித்ததனால் மறுபடி வனவாசம் போகாமல் சுதந்தரமாக இருக்கும் உரிமை உண்டு. ஆனால் ஆட்டத்தில் இழந்த ராஜ்யத்தைக் கேட்கும் உரிமை உண்டாகாது. பிரதிஜ்ஞையால் அவ்வாறான நிபந்தனை இல்லை. ராஜ்யத்தை இழந்தது இழந்ததுதான். வணங்கிக் கேட்டு ஏதேனும் பெறலாமே யொழிய உரிமை கிடையாது. சூதாட்டத்தில் சொத்தை வைத்து இழப்பது மடமை யானாலும் கண் திறந்து சூதாடி இழந்தது இழந்தபடியே யாகும். அதை மறுபடி எனது என்று ஒருவன் உரிமை பாராட்ட இடமில்லை என்பதுதான். ஒரே குலத்தைச் சேர்ந்தவர்கள் விரோதப்பட்டுக் கொண்டு கொடிய யுத்தம் செய்வது பலராமனுக்குப் பிடிக்கவில்லை. யுத்தத்தினால் எப்போதும் அனர்த்தந்தான் விளையும் என்பது அவனுடைய அபிப்பிராயம்.

எக்காலத்துக்கும் பொருத்தமான உண்மையை, பலராமன் வாயில் வைத்துச் சொன்னார் வியாசர்.

* * *

இவ்வாறு பலதேவன் கூறியதை யாதவ வீரனான சாத்யகியினால் பொறுக்க முடியவில்லை. கோபம் மேலிட்டு எழுந்து சாத்யகி பேச ஆரம்பித்தான்:

"பலதேவர் பேசினது எனக்குக் கொஞ்சமேனும் நியாயமாகத் தோன்றவில்லை. ஒருவன் தன்னுடைய அந்தரங்க எண்ணம் எதுவோ அதற்கு அனுசரணையாகச் சாமர்த்தியமாகப் பலம் கட்டிப் பேசிவிடுவான். எதையும் அழகாக வாதித்து விடமுடியும். ஆனால் அதருமம் தருமம் ஆகாது, அநீதி நீதியுமாகாது. பலதேவர் சொன்னதைநான் ஆக்ஷேபிக்கிறேன். மிகவும் வெறுக்கிறேன். ஒரே வயிற்றில் சூரனும் கயவனும் அண்ணன் தம்பிகளாகப் பிறக்கிறார்கள். ஒரே மரத்தில் பழம் தரும் கிளையும் பயனற்ற கிளையும் உண்டாவதைப் பார்க்கிறோமல்லவா? கிருஷ்ணன் பேசியது தருமம். பலதேவர் பேசியது அநீதி. தரும புத்திரரைப் பற்றிச்



சபையில் குறை சொல்லுகிறவன் துரியோதனனைக் கண்டு பயப்படுகிறவனாகத்தான் இருக்க வேண்டும். நான் கடுமையாகப் பேசுவதைச் சபையோர் மன்னிக்க வேண்டும். ஆட்டம் தெரியாதவரும் ஆட்டத்தில் இஷ்டமில்லாதவருமான பிருந்த யுதிஷ்டிரரை வருந்தி அழைத்து ஆடச் செய்து அவரைத் தோற்கடித்தார்கள். பிரதிக்ஞையைப் பூரணமாக முடித்துத் திரும்பிய இவர் ஏன் துரியோதனனை வணங்கிப் பிச்சை கேட்கவேண்டும்? யுதிஷ்டிரர் யாசிப்பவர் அல்ல; அவர் வணங்கவேண்டிய அவசியமில்லை. பாண்டவர்கள் வனவாசத்தைச் சரியாகப் பூர்த்தி செய்து அஞ்ஞாத வாசமும் சரியாக முடிந்திருக்கும் போது பன்னிரண்டு மாதம் பூர்த்தியாவதற்குள் நாம் கண்டு கொண்டு விட்டோம் என்று அதர்மமாகச் சொல்லி வரும் இந்த துரியோதனியரை நான் யுத்தத்தில் வீழ்த்தி, தர்மபுத்திரருடைய காலில் அவர்கள் விழுந்து வணங்கச் செய்வேன். இல்லையேல் கௌரவர்கள் யமபுரிக்குச் செல்லுவார்கள். தர்மயுத்தத்தில் அழிவு ஏன் விளையும்? ஆயுதம் எடுத்து யுத்தம் செய்யும் எதிரிகளைக் கொல்லுவதில் ஒரு பாபமுமில்லை. சத்ருக்களை யாசிப்பது இகழ்ச்சிக்குக் காரணமாகும். துரியோதனன் யுத்தத்தை விரும்புவானாகில் யுத்தத்துக்குத் தயாராவோம். யுத்தமில்லாமல் அவன் ராஜ்யத்தைத் தரப் போவதில்லை. கால தாமதம் செய்யாமல் நாம் செய்ய வேண்டியதைச் செய்வோம். கால தாமதம் செய்வது அறியாமையாகும்'' என்று சாத்யகி உறுதியாகச் சபையில் சொன்னதைக் கேட்டு துருபத ராஜன் மகிழ்ச்சியடைந்து எழுந்தான்.



“சாத்யகி சொல்லுவது சரி. அப்படித்தான் நடக்கப் போகிறது. சந்தேகமில்லை. நல்ல வார்த்தைகளால் துரியோதனன் வழிக்கு வரமாட்டான். நம்முடைய யுத்த முயற்சியை நிறுத்தாமல் நாம் செய்து கொண்டே இருக்க வேண்டும். நம்முடைய நண்பர்களுக்குத் தூதர்களை அனுப்பிக் காலதாமதமின்றிப் படைகள் சேர்க்கச் சொல்ல வேண்டும். சல்யன், திருஷ்டகேது, ஜயத்ஸேனன், கேகயன் முதலியவர்களிடம் உடனே நம்முடைய தூதர்கள் போக வேண்டும். என்னுடைய அரண்மனை வித்துவானும் புரோகிதருமான வேதியரை அஸ்தினாபுரம் அனுப்பலாம். சொல்ல வேண்டியதை அவரிடம் சொல்லி யனுப்பலாம். துரியோதனனிடம் என்ன சொல்ல வேண்டும், பீஷ்மரிடமும் திருதராஷ்டிரனிடமும் துரோணரிடமும் எவ்விதம் சொல்ல வேண்டுமென்பதை எல்லாம் அவரிடம் சொல்லி யனுப்பலாம்' என்றான்.

துருபதன் இவ்வாறு யோசனை சொன்னதும் வாசுதேவன் மகிழ்ந்து துருபத ராஜனைப் பார்த்துச் சொல்லுவான்: 'நீர் சொல்லுவது மிகவும் சரியான யோசனை. இதுவே செய்யத் தக்கது. அது ராஜ தருமம். நானும் பலதேவரும் கௌரவ பாண்டவர்கள் இருவருக்கும் சம உரிமைப் பட்டவர்கள். உத்தரையின் விவாகத்திற்காக வந்த நாம் நம் முறைப்படி நகரத்துக்குத் திரும்புவோம். அறிவிலும் வயதிலும் நீர் அரசர்களுக்குள் பெரியவர். நமக்கு நீர் குருவைப் போன்றவர். திருதராஷ்டிரன் உம்மைப் பெரிதும் மதிப்பவன். துரோணரும் கிருபரும் உமக்குப் பால்ய சிநேகிதர்கள் ஆவார்கள். நீர் தூதனுக்குச் சொல்ல வேண்டியதைச் சொல்லி அனுப்ப வேண்டும். துரியோதனன் நியாயமான வழிக்கு வராவிட்டால் எல்லா முயற்சிகளும் செய்து எங்களுக்கும் சொல்லி யனுப்புங்கள்'' என்றான்.

• • •

மந்திராலோசனையில் இவ்வாறு முடிவான பின் கிருஷ்ணனும் அவனைச் சேர்ந்தவர்களும் அவ்வாறு துவாரகைக்குத் திரும்பிப் போனார்கள். விராடனும், துருபதனும் யுதிஷ்டிரன் முதலானவர்களும் யுத்தத்திற்கு வேண்டிய ஆயத்தம் எல்லாம் செய்தார்கள். தூதர்களை ஆங்காங்கு அனுப்பி எல்லா அரசர்களுக்கும் தெரியப்படுத்தினார்கள். பாண்டவர்களிடமிருந்து அழைப்புக் கொண்ட அரசர்கள் எல்லாரும் தத்தம் சேனைகளைத் தயார் செய்தார்கள்.

துரியோதனனும் சும்மா இருக்கவில்லை. அவர்களும் யுத்தத்திற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் செய்ய ஆரம்பித்தார்கள். தங்களுடைய நண்பர்களுக்கெல்லாம் உடனே படைகளைத் திரட்டச் சொல்லி அனுப்பினார்கள். இவ்வாறு பரதகண்டம் முழுவதும் யுத்த முயற்சியின் ஆரவாரம் பரவிற்று. “அப்போது அரசர்களுடைய அவசரப் பிரயாணங்களினால் எங்கும் பெரும் கிளர்ச்சி ஏற்பட்டது. சேனைகள் வருவதும் போவதுமாகப் பூமி அதிர்ந்தது'' என்கிறார் பௌராணிகர். தற்போது நடைபெறும் யுத்த முயற்சிகளை நாம் பார்க்கிறோமல்லவா? அவ்வாறே அக்காலத்திலும் நடைபெற்றதாகத் தெரிகிறது.

துருபதன் தன் புரோகிதரைக் கூப்பிட்டு, "வித்துவான்களுள் சிறந்தவரே! துரியோதனனிடம் பாண்டவர்களுக்காகப் போகக் கடவீர். அந்தத் துரியோதனனுடைய குணங்களும் பாண்டவர்களுடைய குணங்களும் உமக்கு நன்றாகத் தெரியும். திருதராஷ்டிரனுக்குத் தெரிந்தே பாண்டவர்கள் வஞ்சிக்கப்பட்டார்கள். விதுரர் நியாயத்தைச் சொல்லியும் திருதராஷ்டிரன் கேட்கவில்லை. அந்தக் கிழ அரசன் தன் மகன் சொன்ன வழியே செல்லுகிறான். நீர் திருதராஷ்டிரனிடம் தருமத்தையும் நீதியையும் எடுத்துச் சொல்ல வேண்டும். விதுரர் நமக்கு உதவியாகத்தான் பேசுவார். இதனால் பீஷ்மர் துரோணர் இவர் முதலிய மந்திரிகளுக்குள்ளும் யுத்த வீரர்களுக்குள்ளும் பேதம் உண்டாகலாம். மந்திரிகளும் வீரர்களும் மாறுபட்ட அபிப்பிராயம் கொண்டால் அவர்களை எல்லாம் மறுபடி ஒன்று சேர்ப்பதற்குப் பெரிய முயற்சி வேண்டியதாகும். கால தாமதமும் ஆகும். இதற்குள்ளாகப் பாண்டவர்களுடைய யுத்த முயற்சிகள் சரியாக நடைபெறும். நீர் துரியோதனனுடைய நகரத்தில் இருந்துகொண்டு சமாதானம் பேசும் வரையில் அவர்களுடைய யுத்த முயற்சிகள் தளர்ச்சி அடையும். சமாதானம் பேசுவதால் நமக்கு இந்த நல்ல பயனுண்டாகும். சமாதானம் ஏற்பட்டாலும் நன்மையே. துரியோதனன் சமாதானத்திற்கு இசைவான் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஆயினும் சமாதானப் பேச்சுப் பேசுவதற்காகத் தூதர் போவது நமக்குப் பயனைத் தரும்" என்றான்.

சமாதானம் பேசுவது, உண்மையாகவே சமாதானத்திற்கு வேண்டியதைச் செய்வது. ஆனால் போருக்கும் தயாராக இருப்பது, அதற்கு வேண்டிய ஆயத்தங்களைத் தளரவிடாமல் செய்துகொண்டே இருப்பது, சமாதானப் பேச்சினால் விரோதிகளுடைய கூட்டத்தில் பேதம் உண்டாக்கப் பார்ப்பது, இவையெல்லாம் தற்கால முறையாயிருப்பது போல் புராதன முறையுமாகும். அமெரிக்கருடன் ஜப்பானியத் தூதர்கள் 1941 வருஷத்து டிசம்பர் மாதத்தில் சமாதானப் பேச்சுப் பேசி, அது முடிந்த மறு கணமே முத்துத் துறைமுகத்தைத் தாக்கி அமெரிக்கருடைய கடற்படையைத் தகர்த்தது புதிய முறையல்ல; பழைய க்ஷத்திரிய முறை போலவே காணப்படுகிறது!

குழந்தைகள்

சாவி

குழந்தையைப் போல மகா தொந்தரவான ஜந்து வேறொன்று உண்டென்றால் அது மற்றொரு குழந்தையாய்த்தான் இருக்க முடியும். பாருங்கள்: ஒரு குடும்பத்தில் ஒரு குழந்தை பிறந்ததென்றால் அன்று முதல் அந்த வீட்டில் யாரும் தூங்க முடியாது. அந்தக் குழந்தையாவது தூங்குமென்கிறீர்களா? ஊஹூம்; அது தூங்கினால்தான் மற்றவர்களும் நிம்மதியாய்த் தூங்கலாமே? பிறந்தது முதல் ஒரே அழுகைதான். அதற்கு வேளை, சமயம், பகல், இரவு, நல்ல நாள், கெட்ட நாள் என்று ஒன்றும் கிடையாது. இது முதல் தொந்தரவு.



இரண்டாவது தொந்தரவு, குழந்தை பிறந்த இரண்டாவது நிமிஷமே ஆரம்பமாகி விடும். குழந்தையின் மூக்ஜாடை விஷயத்தில் குடும்பத்திலுள்ளவர்களுக்குள் சர்ச்சை ஏற்பட்டு விடும். குழந்தையின் மூக்கு யார் மாதிரி இருக்கிறது? கண் ஜாடைக்கு யாரைக் கொண்டு வந்திருக்கிறது என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டு யாரும் ஒரு விதமான முடிவுக்கும் வர மாட்டார்கள். "வாய் தத்ரூபம் அதன் பாட்டி மாதிரியே இருக்கிறது" என்பார் குழந்தையின் தகப்பனார். ஒரு விதத்தில் இது உண்மையாக இருக்கலாம். ஏனென்றால் பாட்டிக்கும் வாயில் பல் கிடையாதல்லவா?

"மூக்கு யார் மாதிரி இருக்கிறது?" என்று இன்னொரு கேள்வி எழும்.

"அப்பன் மூக்கை அப்படியே உரித்து வைத்திருக்கிறது" என்று யாராவது பதில் சொல்லுவார்கள். இதைத் தகப்பனார் ஒப்புக் கொள்ள மாட்டார்.

இப்படி அந்தக் குழந்தையின் சாமுத்ரிகா லக்ஷணங்களைக் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருடனும் ஒப்பிட்டுப் பார்த்துக் கடைசியில் யாரும் அதை ஒப்புக் கொள்ள மாட்டார்கள். ஆனால் ஒரு விஷயத்தை மட்டும் எல்லோரும் ஒப்புக் கொள்ளுவார்கள்.

பெண் குழந்தையாயிருந்தால் "குழந்தை கிளி மாதிரியிருக்கிறது" என்று எல்லோரும் ஒரே முகமாய் அபிப்பிராயம் கூறுவார்கள். அந்தக் குழந்தை என்னதான் அவலக்ஷணமாயிருந்த போதிலும் அக்கறையில்லை. எல்லோருக்கும் அது கிளி மாதிரி இருப்பதாகவே தோன்றும். கிளியைத் தவிர மற்ற யாருக்கும் இதில் அபிப்பிராய பேதமே இருக்காது!



ஆண் குழந்தையாயிருந்தால் "குழந்தை ராஜா மாதிரி இருக்கிறது" என்பார்கள். ராஜா என்றால் அது எந்த ராஜாவைக் குறிக்கிறார்களோ தெரியவில்லை (ராஜாக்களுக்குக் குழந்தை பிறந்தால் அந்தக் குழந்தைகள் யார் மாதிரி இருக்கின்றன என்று சொல்வார்களோ அதுவும் எனக்குத் தெரியவில்லை!)

மூன்றாவது தொல்லை குழந்தைகளின் நாமகரணத்தின் போது ஆரம்பமாகிறது. ஆண் குழந்தைகளுக்குப் பெயர் வைப்பதில்கூட அவ்வளவு தொல்லை இருக்காது. ஏதாவது ராமசாமி, கிருஷ்ணசாமி என்று பெயர் வைத்து விடுவார்கள். பெண்ணாய்ப் பிறந்துவிட்டால்தான் தொல்லை அதிகம். பெயர் என்ன வைக்கலாம் என்பதைக் குறித்து குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் மண்டையை உடைத்துக் கொண்டு யோசனை செய்வார்கள். வாய் நிறைந்த பெயராய் இருக்க வேண்டுமென்று அதின் பாட்டி "மகாலக்ஷ்மி" என்று வைக்கலாம் என்று யோசனை கூறுவாள்.

"சட்! மகாலக்ஷ்மி யாவது, மண்ணாங்கட்டி யாவது? அதெல்லாம் கூடாது. சுத்த கர்நாடகம்!" என்பார் தகப்பனார்.

"பின் என்ன வைக்கிறதாம்?" என்று குழந்தையின் தாயார் கேட்பாள்.

"குழந்தைக்கு வடக்கத்திப் பெயர் தான் வைக்க வேண்டும். அதுதான் 'பாஷன்' என்பார் தகப்பனார். வடக்கத்திப் பெயர்கள் அவருக்கு ஒன்றும் தெரியவும் தெரியாது. தெரிந்தாலும் ஞாபகத்துக்கு வராது. இதற்காக வடநாட்டு சினிமா நக்ஷத்திரங்களின் பெயர்களையெல்லாம் ஒரு தடவை தனக்குத் தானே வரிசை



யாகச் சொல்லிப் பார்த்துக்கொள்வார்.

ரேணுகா, லீலா, மேரி, பாமா, ரஞ்சனாதேவி என்று ஏதாவது ஒரு பெயரை வைக்கச் சொல்லுவார். இது வீட்டிலுள்ள பெரியவர்களுக்குப் பிடிக்காது. அவர்கள் ஒரு தனி முறையைப் பின்பற்றுவார்கள். குழந்தைக்குக் கண் பெரிதாக இருக்கிறது. அதனால் கண்மணி என்று வைக்கலாம் என்பார்கள். ஆனால் யாரும் எந்தப் பெயரையும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.



நாலாவது தொந்தரவு குழந்தையின் சுகாதார விஷயத்தில் தொடங்கும். குழந்தை என்று ஒன்று பிறந்தால் அதனுடனேயே கடவுள் வியாதியையும் சேர்த்து அனுப்பி விடுகிறார். ஆகையால், குழந்தைக்கு என்ன வியாதி என்று கண்டு பிடிப்பது ஒரு தொந்தரவு. இங்கிலீஷ் டாக்டரிடம் போனால் ஏதாவது 'டிஸ்பெப்ஸியா' என்று சொல்லி, மருந்துக்கு ஒரு சீட்டு எழுதிக் கொடுப்பார். அவர் எழுதிக் கொடுக்கும் அந்த மருந்து கடைகளில் கிடைக்காது. பிளாக் மார்க்கெட்டில் இருக்கிறது என்று யாராவது சொல்வார்கள். பிளாக் மார்க்கெட் கண்ணுக்குப் புலப்படாது. புலப்பட்டாலும் மருந்து சீக்கிரம் கைக்கு வராது. வந்தாலும் குணமாகாது. இது மற்றொரு தொந்தரவு.

நாட்டு வைத்தியரிடம் போனால் வயிற்றில் கட்டி என்பார். கட்டிக்கு மருந்து கொடுப்பார். மருந்தும் பணமும் தான் கரையுமே ஒழிய, கட்டி மட்டும் கரையாமல் அப்படியேதான் இருக்கும். இப்படியெல்லாம் பாடுபட்டுக் குழந்தைகளை வளர்த்த பிறகு அவைகளுக்குப் பணத்தைச் செலவழித்துப் படிப்பு சொல்லித் தர வேண்டும். பெண் குழந்தைகளாயிருந்தால் பாட்டுச் சொல்லித் தரவேண்டும். குரலைப் பற்றியோ ஞானத்தைப் பற்றியோ கவலை இல்லை! பிறகு கல்யாணத்தின் போது மாப்பிள்ளை தேடும் தொல்லை. பிள்ளையாயிருந்தால் உத்தியோகம் தேடும் வேட்டை. இம்மாதிரி ஓயாமல் குழந்தைகளுக்கு முப்பது வயதாகிற வரையில் ஓரே தொல்லைதான். சரி; இனி பெரியவர்களாகி விட்டார்கள். தொந்தரவு நீங்கி விட்டது என்று நிம்மதியாய் இருக்க முடியுமா? இதற்குள் குழந்தைகளுக்குக் குழந்தை பிறந்து பேரக் குழந்தைகளின் தொந்தரவு "அடியைப் பிடிடா பாரத பட்டா" என்று ஆரம்பமாகிவிடும்!...

★

இந்தக் கட்டுரையை இந்த இடத்தில் எழுதிக் கொண்டிருந்த சமயம் தொட்டிலில் இருந்த என் குழந்தையின் அழுகுரல் அதிகமாகி என்னை மேலே எழுத முடியாமல் செய்து விட்டது.

குழந்தையின் கத்தலில் கட்டுரையே மேற்கொண்டு ஓடவில்லை. எனவே இத்துடன் நிறுத்தி விடுகிறேன். இந்தக் கட்டுரை எழுதியதற்கும் இதை முடிப்பதற்கும் குழந்தையே அல்லவா காரணம் என்று எண்ணும் போது சற்று வேடிக்கையாகவே இருக்கிறது!



பெரியவர்:—பையா! ஏண்டா இப்படி அழறே? இதோ பார்: நீ அழாமல் நல்ல பையனா யிருந்தால் உனக்கு நிறையப் பழங்கள் தருவேன்.

குழந்தை (அழுது கொண்டே):—நான் நல்ல பையனாக இருக்க முடியாதே ஏ...ஏ......

பெரியவர்:—ஏன்?

குழந்தை:—நான் ஒரு பெண்ணாச்சே!

இண்டோ - கமர்ஷியல் பாங்க் லிமிடெட்.,

1944௵ டிசம்பர்௴ 31உய கணக்கு விபரம்

பொறுப்புகள்

	ரூ. அ. பை.			ரூ.	அ.	பை.
அதிகாரம் பெற்ற மூலதனம்	25,00,000	0	0			
சொந்தத்திற்குக் கோரப் பட்ட மூலதனம் ...	21,25,000	0	0			
கோரப்பட்டு செலுத்தப் பட்ட மூலதனம் ...				18,75,000	0	0
ரிஸர்வ் நிதி ...				3,00,000	0	0
அவசர நிதி ...				15,000	0	0
வரிகளுக்காக ஒதுக்கி வைக்கப் பட்டுள்ளது ...				84,331	5	0
டிப்பாஸிட்டுகள்:						
பிக்ஸட், கரண்டு, சேவிங்ஸ் பாங்க், மாதவாரி டிபாஸிட், கேஷ் ஸர்டிபிகேட், சிப்பந்திகள் ஜாமீன், பிராவிடெண்ட் & கிராட்டியூட்டி நிதி மற்றும் இதர பொறுப்புகள்				2,35,00,010	4	6
பாங்குகளுக்குக் கொடுக்க வேண்டியவை ...				Nil		

ஆஸ்திகள்

	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.
கடன்கள், காஷ் கிரெடிட், பில்கள் டிராப்டுகள் புரோநோட்டுகள் இதர அட்வான்சுகள் முதலியன ...				1,46,37,566	11	10
1913௵த்திய இந்திய கம்பெனிகளின் சட்டம் VII-ன் படி தேவையான விவரங்கள் :						
1. பாங்கிக்குப் பூர்ணமான செக்யூரிடியுள்ள கடன்கள் ...	90,14,742	7	4			
2. நல்ல கடன்களென்று மதிக்கப் பட்டு ஆதாரவுள்ள கடன்கள் ...						
(a) ஜாமீன்டு புரோநோட்டுகள்	13,13,800	8	9			
(b) பலர் தனித் தனியாக எழுதிக் கொடுத்த புரோநோட்டுகள் ...	5,60,074	2	4			
(c) பில்கள், டிராப்டுகள் ...	36,97,375	11	8			
(d) தற்காலிக ஓவர் டிராப்டுகள் ...	37 663	11	1			
3. சந்தேகப்படத்தக்க கடன்கள் ...	13,910	2	8			
4. டைரக்டர்கள், ஆபீஸர்கள் பற்றியுள்ள கடன்	Nil					
தற்சமயமாவது எப்பொழுதாவது டைரக்டர்களுக்கு கொடுக்கப்பட்ட கடன்கள், அட்வான்சுகள் ...	Nil					
பாங்கி கட்டிடம் :						
வாங்கின விலை ...	24,379	3	5			
இவ் வருஷத்தில் சேர்க்கப்பட்டவை	8,891	10	5			
	33,270	13	10			
31-12-44 வரை தள்ளுபடி செய்யப் பட்டது ...	4,800	0	0	28,470	13	10
ஸேப்கள், மரதளவாடங்கள் :						
வாங்கின விலை ...	1,01,424	4	7			
இந்த வருஷத்தில் வாங்கினது	6,443	3	6			
	1,07,867	8	1			

பெற்றுக் கொள்ளாத டிவிடெண்டுகள் ...					3,623	0	0
வசூல் பில்கள் ...					9,91,389	6	1
பிராஞ்சு அட்ஜஸ்ட்மெண்டுகள் ...					2,59,408	15	7
வழங்கப்பட வேண்டிய டிராப்டுகள், தந்திகள் ...					3,11,911	8	9
சில்லறை இனங்கள் ...					30,341	12	11
லாப நஷ்டக் கணக்கு :							
முன் கணக்குப்படி பாக்கி		5,111	3	1			
இவ்வருஷத்திய லாபம் ...		4 84,168	14	2			
		4,89,280	1	3			
முதல் அரை வருஷத்தில் பிரித்து கொடுக்கப்பட்டவைகள்.							
A. B. C. ஷேர்களுக்கு 6% வீதம் டிவிடெண்ட் ரூ.	56,250						
ஜெனரல் ரிஸர்வ் நிதிக்காக ஒதுக்கப்பட்டது ரூ.	75,000						
வரிகளுக்காக ஒதுக்கப்பட்டது ரூ.	75,000	2,06,250	0	0	2,83,030	1	3
ஆக மொத்தம் ரூ.					2,76,54,046	6	1

இந்த வருஷத்தில் விற்றது ...	3,707	2	4			
	1,04,160	5	9			
31-12-44 வரை தள்ளுபடி ...	38,730	15	10	65 429	5	11
கைவசமுள்ள புஸ்தகம் ஸ்டேஷனரி				42,935	6	1
வசூல் பில்கள் ...				9,91,389	6	1
சில்லறை இனங்கள் ...				3,80,891	5	2
முதலீடுகள் :						
* கவர்ன்மெண்ட் புரோநோட்டு, எழுதப்பட்ட மதிப்பு ரூ. 55 96,000 (மார்க்கெட் மதிப்பு ரூ. 56,03,546 7 6) வாங்கின விலைப்படி ...	55,56,463	5	2			
ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகளது ஷேர்களின் மதிப்பு ரூ. 1,15,320 (மார்க்கெட் மதிப்பு ரூ. 1,13,890) வாங்கின விலைப்படி ...	97,218	2	0			
ஷெட்யூல்ட் பாங்கிகளிலுள்ள டிப்பாஸிட்கள் செக்யூரிடி ...	16 225	0	0	56,69,906	7	2
முதலீடுகளில் சேர்ந்துள்ள வட்டி				66,379	0	1
கைவசமுள்ள ரொக்கம்	35.92,160	4	3			
கரண்டு கணக்கில் பாங்கர்களிடம்	21.78,917	9	8	57,71,077	13	11
ஆக மொத்தம் ரூ.				2,76,54,016	6	1

* ரூ. 65,000 மதிப்புள்ள கவர்ன்மெண்ட் பிராமிசரி நோட்டுகள் டிப்பாஸிட்கள் பிராவிடெண்ட் நிதிக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

டைரக்டர்கள் :

K. லக்ஷ்மணன். அகௌண்டெண்டு
R. S A. சங்கர ஐயர்
K. வெங்கசாமி

R. விஸ்வநாதன்
V. வெங்கட்ராமன்

T. R. வெங்கட்ராம சாஸ்திரி
சேர்மன்

S. N N. சங்கரலிங்க ஐயர்
மானேஜிங் டைரக்டர்

P. S. சுப்ரமணிய ஐயர் B. A., G. D. A., R. A., ரிஜிஸ்டர்டு அகௌண்டெண்டு & ஆடிட்டர்

தேவானையின் உள்ளம்

— ரங்கன் —

கதையில் வரும் பாத்திரங்களைத் தூக்கி வாரிப் போடச் செய்வதற்கு, சில சமயம் பெரிய வெடி குண்டை அவர்கள் பக்கத்தில் போட வேண்டியிருக்கிறது. அல்லது பயங்கரச் செய்தி ஒன்றை அவர்கள் கையில் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆனால், இக் கதையில் வரும் தேவானையைத் தூக்கி வாரிப் போடும்படி செய்ய ஒருவித அவசியமும் இல்லை. அப்படியிருந்தும், "இந்தா, உன்னைத்தானே?" என்ற இரண்டு வார்த்தைகளைக் கேட்டதுமே சில்லறையை எண்ணிக் கொண்டிருந்த தேவானை தூக்கி வாரிப்போட்டவளாய்த் தலையை நிமிர்த்து பார்த்தாள்.

அவளுக் கெதிரில் ஒரு வாலிபன் நின்று கொண்டிருந்தான்.

"நல்ல புகையிலைக் கன்னியாக இருந்தால் மூணு காசுக்குக் கொடு!" என்றான் அந்த ஆசாமி.

அவன் சொன்ன வார்த்தைகள் தேவானையின் காதில் விழவில்லை. அவள் கண்கள் இமை கொட்டாமல் அவனைக் கவனித்தன. அவன் அந்த ஊருக்குப் புது ஆசாமி என்று தோன்றியது. அதற்கு முன் தேவானை அவனைப் பார்த்தது கிடையாது.

"கேட்டுக்கிட்டே இருக்கேன், பேசாம இருக்கியே. புகையிலை இருக்கா, இல்லையா?" என்று அதட்டினான் அவன்.

"புகையிலைக் கடையிலே புகையிலை இல்லாம வாழையிலையா இருக்கும்? ஒரு அணாவுக்குப் புகையிலை கொடுத்துடட்டுமா?" என்றாள் தேவானை குலுக்கி மினுக்கிக் கொண்டு. அந்த மினுக்கல் அவளுக்குக் கொஞ்சமும் புதிதல்ல. ஆனால் இந்தத் தடவை மட்டும் அவள் குலுக்கியதும் சிரித்ததும் ரொம்பவும் அசட்டுத்தனமாக அவளுக்கே தோன்றியது.

"மூணு காசுக்குக் கொடு என்றால் ஒரு அணாவுக்குக் கொடுக்கட்டுமா என்கிறாயே! உதவாக்கரைப் புகையிலையை என் தலையில் கட்டவா பார்க்கிறே?" என்றான் அந்த ஆசாமி முகத்தில் வெறுப்புத் தோன்ற.

முகத்தில் அசடு வழிய, புகையிலைக் கட்டை அவிழ்த்துப் புகையிலையைக் கொடுத்துவிட்டு, அரை ரூபாயை வாங்கிக் கல்லாப் பெட்டியின் மேல் வைத்துவிட்டுப் பையைத் திறந்து சில்லறையை எண்ணிக் கொடுத்தாள். அந்த ஆசாமி புகையிலையை எடுத்து முகர்ந்து பார்த்து விட்டு, "சே! புகையிலையைப் பார்க்கலே, புகையிலையை!" என்று முனகிக்கொண்டே போனான்.

★

இவ்வாறு அந்த ஆசாமி வெட்டு ஒன்றும் துண்டு மூன்றுமாகப் பேசியது, தேவானைக்கு ரொம்ப அவமானமாகத்தானிருந்தது. இதுவரை யாரும் அவளிடம் இவ்வளவு விறைப்பாகப் பேசியது கிடையாது. எவ்வளவோ பேர்கள் அவள் கடையில் புகையிலை வாங்கிக் கொண்டு போவார்கள். தேவானையைக் கண்டதுமே அவர்கள் முகத்தில் அசடு வழியும். "ஒரு அணாவுக்குப் புகையிலை கொடுக்கட்டுமா?" என்று தேவானை கேட்டால், "இரண்டணாவுக்கே கொடு" என்று சொல்லி வாங்கிப் போவார்கள். கடை வியாபாரத்தை உத்தேசித்தே, அவள் தகப்பன் ராமக்கோனான் அவளைக் கல்யாணங்கூடப் பண்ணிக் கொடுக்காமல், கடை வியாபாரத்தில் போட்டு விட்டுக் குடித்துத் தூங்கிக் கொண்டிருந்தான்.



இப்படி யிருக்கையில், இந்தப் புது ஆசாமி, கொஞ்சமும் மரியாதையில்லாமல், உதவாக்கரைப் புகையிலையை அவள் தலையில் கட்டப் பார்த்ததாகக் கூறியது அவளுக்கு மிகவும் மனவருத்தத்தை உண்டாக்கிற்று.

இதையெல்லாம் யோசித்த படியே,



அவன் கொடுத்த அரை ரூபாயை எடுத்துப் பெட்டிக்குள் போடப் போனான். அது தவறிக் கீழே விழுந்தது. மறுபடியும் அதை எடுத்துச் சுண்டிப் பார்த்தான். அவன் முகமும் சுண்டிப் போயிற்று.

"அட, பாவி! காசு செத்தக் கட்டையா யிருக்குதே! செல்லாக் காசைக் கொடுத்துட்டுப் போயிட்டானே" என்று கூவினான். வாசற் பக்கம் ஓடிப்போய்ப் பார்த்தான். தேவானை காசைத் தட்டிப் பார்த்துத் தன்னைக் கூப்பிட வேண்டும் என்று அவன் காத்துக் கொண்டிருக்கவில்லை. அதற்குள் மாயமாய் அவன் எங்கேயோ மறைந்து போய்விட்டான்.

அது சின்ன ஊராயிருந்தாலும், அந்தக் கடையில் ஒரு நாளைக்குக் குறைந்தது ஐந்து ரூபாய்க்கு வியாபாரம் நடக்கும். எவ்வளவோ செல்லாக் காசுகள் வருவது உண்டு; போகாமல் இருப்பதும் உண்டு. இந்த அரை ரூபாய் செல்லாக் காசாகப் போய்விட்டது அவனுக்கு ஒரு பெரிய விஷயமல்ல. ஆனால் அந்த ஆசாமி அவனை ஏய்த்ததையும், அகம்பாவமாய் நடந்து கொண்டதையும் அவனால் மறக்க முடியவில்லை. அவன் மறக்க முடியாததற்கு மேற் சொன்ன காரணம் மட்டுமா? இல்லை; அந்த வாலிபன் முகத்தில் உள்ள அபார வசீகரம் அவன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டதும் ஒரு காரணந்தான்.

மறுநாள் காலை எட்டு மணி யிருக்கும். தேவானை பள்ளிக்கூடத்தை அடுத்த மைதானத்தில் புல் செதுக்கிக் கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தாள்.

மகளை எங்கும் தனியாக அனுப்பாத ராமக் கோனான் கையில் உழவாரத்துடன் பின்னால் வந்து கொண்டிருந்தான். அவர்கள் கடைத் தெருவில் வந்து கொண்டிருக்கும்போது. "அப்பா! அதோ!" என்று கூவினாள் தேவானை. எதிரே வந்துகொண்டிருந்த ஆசாமி ஒரு கணம் தயங்கி நின்றான். "அப்பா! இவன்தான் நேற்று செல்லாத அரை ரூபாயைக் கொடுத்து என்னை ஏமாற்றினது. நிஜமா பொய்யா, கேளு!" என்றாள் தேவானை. ஆத்திரம் அவளை அறியாமல் பொங்கி வந்தது.

ராமக் கோனானுக்கு எதையும் யோசனை செய்கிற வழக்கமே கிடையாது. அந்தச் சம்பிரதாயப்படி. "ஏய்! உன்னைத்தானே! குழந்தை கேட்கிறது காதிலே விழுதா? இப்படி எத்தனை நாளாய் ஊரைக் கொள்ளையடிக்கக் கிளம்பி யிருக்கே?" என்றான் பளிச் சென்று. அவன் கிழவனானாலும் உடம்பில் வலுவுக்கும் பேச்சில் முறுக்குக்கும் எப்பொழுதும் குறைவில்லை. அந்த வாலிபன் முகத்தில் கோபம் ஜ்வலித்தது. கண்களில் தீப்பொறி பறந்தது.

"ஏய், கிழவா! ஜாக்கிரதையாய்ப் பேசு! ஏதாச்சும் சொப்பனம் கண்டுப்பிட்டு உளறுகிறாயா?"

"அப்பா! கடைத் தெருக் காளி அறியச் சொல்லுகிறேன், சயத் தட்டு கொடுத்தது இந்த ஆள்தான்!" என்றாள் தேவானை.

"டேய்! யாரிட்டே உன் கைவரிசையைக் காண்பிக்கிறாய்? ராமக்கோனான்

விட்டயா?" என்று சொல்லிக் கொண்டே அந்த ஆசாமியை நெருக்கினான் கிழவன்.

இதற்குப் பிறகு, ராமக்கோனான் கோபத்தில் கையிலுள்ள உழவாரத்தை ஓங்க, அந்த ஆசாமி கிழவன் முதுகில் குத்து விட, தேவானை கூச்சலிட, ஏகக் கூட்டம் கூடிவிட்டது. இந்த யுத்தத்தில் 'கல்' லென்ற சத்தமும், அதைத் தொடர்ந்து 'கல கல' வென்று ஏதோ பணம் கீழே உதிரும் சத்தமும் கேட்டது.

இதற்குள் இரண்டு போலீஸ் ஜவான்கள் அங்கே வந்து விட்டார்கள். கூட்டத்தைக் கலைத்து, சண்டைக்காரர்களைப் பிரித்து விட்டார்கள். கீழே கிடந்த சில்லறையை அவசரம் அவசரமாக அந்த ஆசாமி அள்ளும் போதுதான், அவன் அகப்பட்டுக் கொண்டான்!

"வாடாப்பா தம்பி, வா!" என்று அருகிலுள்ள போலீஸ்காரன் அவன் தோளில் கைபோட்டான். கீழே விழுந்திருந்த நாணயங்களைப் பார்த்து விட்டுத்தான் அவன் அவ்வாறு செய்தான்.

போலீஸ்காரர்கள் அந்த வாலிபனைப் பிடித்துப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக் கொண்டு போனார்கள். அவன் மடியில் வைத்திருந்தது அவ்வளவும் ஈயக் காசு— கள்ள நாணயங்கள்—என்று தெரிந்து போயிற்று. தேவானை திகைத்துப் போனாள். இப்படி, கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதையாகிவிடும் என்று அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

மேற்படி சம்பவம் நடந்த பிறகு, கள்ள நாணய வழக்கு விசாரணைக்கு வந்தது. வாலிபன் கைதியான சில நாட்களுக்கெல்லாம், போலீசார் வெகு நாளாகத் தேடிவந்த கள்ள நாணயம் போடும் ஆசாமிகள் பலர் ஒவ்வொருவராகக் கைதியானார்கள்.

இந்தக் கேஸில் குற்றவாளிகளுக்குத் தலைக்கு ஆறு வருஷம் கிட்டிவிடுவார்கள் என்று காதில் விழுந்ததும், என்ன காரணத்தினாலோ தேவானையின் உள்ளம் கலங்கியது. அந்த வாலிபனிடத்தில் அவள் கொண்டிருந்த வெறுப்பு அனுதாபமாக மாறிற்று.

கள்ள நாணயம் போடுவது பயங்கரமான குற்றந்தான். ஆனால் அந்தப் பையன் உண்மையில் அக்குற்றம் செய்திருப்பானா?—சிறைவாசத் தண்டனை அவனுக்குக் கிடைத்தால், உண்மையில் அதற்குப் பொறுப்பாளி அவள்தான்—இதனால் அவள் அடைய வேண்டியது சந்தோஷம் தானல்லவா? — பின், ஏன் அவள் மனம் காரணம் தெரியாமல் கலங்குகிறது?

ஒரு நாள் ராமக்கோனான், தேவானையைக் கூப்பிட்டுக் கொண்டே உள்ளே வந்தான். "கேட்டாயா? செல்லாக் காசு போட்டதற்காக ஆறு பேருக்கு ஆறு வருஷம் தண்டிச்சிருக்காங்க!" என்று சொல்லி விட்டு வெளியே போனான். தலையில் இடியும் குண்டும் சேர்ந்து விழுந்தாற்போல் இருந்தது தேவானைக்கு. அப்படியே தலையில் கையை வைத்துக்கொண்டு வாசற்படியில் உட்கார்ந்து விட்டாள். வெகு நாழி கழித்து நிமிர்ந்து பார்த்தாள். அவள் பார்ப்பது சொப்பனமா? அல்லது சினிமாவா?—ஒன்றும் புரியவில்லை. கண்ணைக் கசக்கிக் கொண்டு பார்த்தாள்! எழுந்து நின்று கொண்டு பார்த்தாள்! எதிரில் நின்று கொண்டிருந்தது வேறு யாருமில்லை; தேவானையின் உள்ளத்தைக் கவர்ந்த வாலிபன்தான்! அரை ரூபாய் கொடுத்து அவளை ஏமாற்றப் பார்த்த அதே ஆசாமிதான்! தேவானையால் ஒன்றும் பேச முடியவில்லை.

"என்பேரில் உனக்குக் கோபமா?" என்றான் அந்த வாலிபன்.

"நீ ஜெயில்லே யிருக்கிறதாகச் சொல்லிக் கொண்டார்களே!" என்றாள் தேவானை ஆச்சரியத்துடன்.

"நான் ஜெயிலிலே இருந்தால் இப்படி இங்கே வந்திருக்க முடியும்?"

"ஜெயில்லே யிருந்து தப்பித்துக் கொண்டு ஓடி வந்துட்டியா? நிஜத்தைச் சொல்லு" என்றாள் தேவானை பரபரப்புடன்.

"இல்லை. என்னை விடுதலை செய்து விட்டார்கள்!" என்றான் அவன். அவன் சொன்னதை தேவானை நம்பவில்லை.

"ஆமா! நீ எங்கே வந்தே?" என்றாள் தேவானை முகத்தைச் சற்றுக் கண்டிப்பாக வைத்துக் கொண்டு.

"தேவானை!......" என்று அவன் கூப்பிட்டான்.

"ஒரே ஒரு சேதி சொல்லத்தான் அவசரமாக இங்கே வந்தேன். எனக்கு இவ்வளவு கஷ்டம் வந்ததுக்கு, நான் செல்லாக் காசு வைத்திருந்ததோ, கொடுத்ததோ காரணம் இல்லை. ஆனால் நான் எல்லாவற்றையும் விடப் பெரிய குற்றம் ஒன்று செய்து விட்டேன்; அதாவது, நான் உன்னை அன்றைக்கு மதிக்காமல் போய் விட்டேன். மற்ற எல்லாரையும் போலவே நானும் உன்னோடே சிரிச்சுப் பேசி விட்டுச் செல்லாக் காசைக் கொடுத்திருக்

தான், எல்லாரையும் மறந்திருப் போலவே என்னையும் என் காசையும் மறந்திருப்பாய்; ஒரு வம்பும் வந்திருக்காது. நான் நடந்து கொண்டது உனக்குப் பிடிக்காததினாலே என்னையும் என் காசையும் ஞாபகம் வைத்துக்கொண்டு மறு நாளைக்கு என்னைப் பிடித்துக் கொடுத்து விட்டாய். அதுக்காக உன்னைக் குத்தம் சொல்லல்லே. பெண் பிள்ளைகள் சுபாவமே அது! அவங்க இப்படி, அவங்களைப் பெருமையாக் கொண்டாடிக் கொண்டே இருக்கணும். என்ன குத்தம் செய்தாலும் அவங்களுக்குத் தெரியாது. அவங்க மனம் கோணித்தானால் எவ்வளவு யோக்கியனா யிருந்தாலும் வம்பிலே மாட்டி வைத்துப்பிடுவாங்க!"

"நீ இவ்வளவு தூரம் யோக்கியமாய்ப் பேசறியே, எதுக்காக சயத்துட்டுப் போட்டயாம்? அது அடாபுடி வேலை யில்லே?"

"எல்லா வம்புக்கும் காரணம் பெண் பிள்ளைகள் என்று நான் சொல்லலையா? கும்பகோணத்துலே இருக்கிற என் மாமன் மகள் சாரதாம்பா என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்றதாகச் சொன்னாள். அவள் 'ஷோக்' பேர்வழி. பணம், பணம் என்று ஆளை அரித்துப் போடுவாள். நான் பணத்திற்கு எங்கே போகிறது? சயக் காசு போடறவங்கள் சில பேரை எனக்குத் தெரியும். அவங்களோடே சேர்ந்தாவது, சம்பாதிச்சு அவளுக்குக் கொடுக்கலாம் என்று பார்த்தேன். சயக் காசு போடுகிறதைப் பத்தி எனக்கு ஒன்றும் தெரியாது. அவர்கள் போடுகிற காசை எடுத்துக் கொண்டு ஊர் ஊராய்ப் போய்ச் செல்ல வைக்க வேண்டியது என் வேலை. ஆனால், விசாரணை நடக்கிறபோது, சயக் காசு யாரு யாரு போடுகிறார்கள் என்று நிஜத்தைச் சொன்னேன். என்னை மன்னித்து விடுதலை செய்து விட்டார்கள். இவ்வளவு கஷ்டப் பட்டதற்கு என்ன ஆச்சு? போலீசிலே என்னை இட்டுக் கொண்டு போன வுடனேயே, யாருக்காக நான் கஷ்டப் பட்டேனோ, அந்தச் சாரதாம்பா என் முகத்திலே இனி முழிக்க மாட்டேன்னு சொல்லிப்பிட்டு வேறெ ஒருத்தனைக் கலியாணமும் பண்ணிக் கொண்டு விட்டாள். எப்படியிருக்கு. பெண்பிள்ளைகள் லட்சணம்! ஆண் பிள்ளைகள் எல்லாம் அவர்களுக்குப் பொம்மை மாதிரி. வேணுமென்கிற போது உயர்த்தி வைக்கிறது; வேண்டாம் என்கிறபோது கீழே தள்ளுகிறது!" என்று சொல்லும்போதே அவன் கண்கள் கலங்கி விட்டன. தேவானைக்கு ஒரு பக்கம் இரக்கமும், மற்றொரு பக்கம் சிரிப்பும் உண்டாயிற்று.

அந்த வாலிபன் மெதுவாகத் திரும்பிச் சென்றான். சிறிது தூரம் சென்றதும் தேவானை அவனைக் கூப்பிட வாயெடுத்தாள். ஆனால் அவனே திரும்பி வந்தான்.

"எங்கே, மூனு காசுக்குப் புகையிலை கொடு!" என்றான் அவன்.

"ஒரு அணாவுக்குக் கொடுத்து விடுறேனே!" என்றாள் தேவானை.

"மூன்றணாவுக்கு வேணுமானாலும் கொடு!"

தேவானை சிரித்துக் கொண்டே கடைக் கண்ணால் அவனைப் பார்த்தது, அவன் அது வரை பட்ட அத்தனை துயரங்களையும் ஒரு நொடியில் மறக்கச் செய்தது.

"தேவானை! நான் ஜெயிலுக்குப் போய் வந்தவன் என்று நினைக்கிறாயா? இனிமேல் ஒரு நாளும் தப்புத்தண்டா வழிக்குப் போக மாட்டேன். நிச்சயமாக நம்பு!" என்றான்.

"ஆமா! உங்க பேர் என்ன?" என்று தேவானை விசாரித்தபோது ஆதரவும் அன்பும் அவள் குரலில் தொனித்தது.

"ஜயராமன்!" என்றான் அவன். அவன் முகத்தில் ஜயத்தின் அறிகுறி தோன்றியது.

மேற்கொண்டு நடக்க வேண்டிய சுப காரியங்களைக் கவனிக்க வந்தவன்போல், ராமக்கோனான் உள்ளே நுழைந்தான்.



போலீஸ் இன்ஸ்பெக்டர்:—என்ன, அம்மா! நீ சொல்றது ஆச்சரியமா இருக்கே. திருடன் வந்து உன் எஜமானரைக் கட்டிப் போட்டுவிட்டுத் திருடிக்கொண்டு ஓடி விடுகிறான், உனக்கு ஒன்றும் தெரியாதுன்னு சொல்றே? அவரைக் கட்டிப் போடும்போது அவர் ஒன்றும் கூச்சல் கிச்சல் போடவில்லையா?


வீட்டு வேலைக்காரி:—சத்தம் என்னமோ கேட்டுதுங்க. ரேடியோப் பெட்டியிலே ஏதோ நாடகம் நடக்கிறதாக்கும், எஜமான் கேட்டுக் கொண்டு இருக்கிறாராக்கும்னு நினைச்சுக்கிட்டிருந்தேன்!




நாயின் பொக்கிஷம்


ராஜி

ஒரு ஜமீன்தார் ஒரு குச்சு நாயை ரொம்ப விலை கொடுத்து வாங்கினார். இரவுநேரங்களில் திருட்டு பயம் இல்லாமல் நிம்மதியாகத் தூங்குவதற்கே அவர் அதை வளர்த்து வந்தார். ஆனால் அவர் அந்த நாயை வாங்கினதிலிருந்து நிம்மதியாகவே தூங்குவதில்லை. ஏனென்றால் அது இரவுமுழுவதும் 'வெள், வெள்' என்று குரைத்துக் கொண்டிருக்கும். வீட்டிலுள்ளவர்களைத் தூங்கவே விடாது. இப்படி நாய் குரைக்கும்போதெல்லாம் அவர் தடியை எடுத்துக் கொண்டு வந்து, நாயை அடிப்பது வழக்கமாக இருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக நாய் அடிக்குப் பயந்து கொண்டு குரைப்பதை நிறுத்திற்று.





ஒருநாள் இரவு எங்கும் நிசப்தம் குடி கொண்டு இருந்தது. நடுநிசியில் ஒரு திருடன் ஜமீன்தார் வீட்டு ஜன்னலைப் பிளந்து கொண்டு உள்ளே வந்தான். நாய்க்குத் திருடனைப் பார்த்தவுடன் என்ன செய்வது என்றே புரியவில்லை. குரைக்கலாம் என்றாலோ அடி விழுவது நிச்சயம்; ஆகவே பேசாமல் இருப்பதே நலம் என்று எண்ணிக் குரைக்காமல் இருந்து விட்டது. முதலில் நாயைப் பார்த்துப் பயந்த திருடனும் பயம் தெளிந்து நாயைச் சற்றுத் தடவிக் கொடுத்தான். நாய்க்குத் திருடனிடமிருந்த பயம் நீங்கி, சற்று தன் வாலை ஆட்டலாம் என்று நினைத்தது. ஆனால் தனக்கு வால் இல்லாததை நினைத்து வருந்தியது. பிறகு ஒருவாறு மனதைத் தேற்றிக் கொண்டு உடம்பையே ஆட்ட ஆரம்பித்தது.





திருடனைப் பார்த்துக் கொண்டே நாய் மற்றொரு அறைக்குள் ஓட ஆரம்பித்தது. தன்னை உள்ளே கூப்பிடும் பாவனையைக் கண்ட திருடன் அதனுடன் சென்றான். ஆனால், சற்றுத் தயங்கினான். எங்கே தன்னை தன் எஜமானிடம் அழைத்துச் சென்று விடுமோ என்ற பயம் உண்டாயிற்று. நாய் அவனை அழைத்துச் சென்ற காரணம் உள்ளே போனவுடன் தெரிந்தது. அங்கே மேஜையின் மேல் வைத்திருந்த பிஸ்கோத்துப் பெட்டிக்குத்தான். அதிலிருந்து கொஞ்சம் பிஸ்கோத்துகளை எடுத்துத் திருடன் நாய்க்குப் போட்டான். அந்த நிமிஷத்திலிருந்து நாய் அவன் போகிற இடமெல்லாம் தானும் சந்தோஷத்துடன் சென்றது.

திருடன் முதலில் இரும்புப் பெட்டி வைத்திருக்கும் அறைக்குச் சென்று அதன் பூட்டை உடைத்து

நகைகளை எல்லாம் தான் கொண்டு வந்திருந்த பைக்குள் போட்டுக் கொண்டான். பிறகு, மற்றொரு அறைக்குள் போய் வெள்ளி பாத்திரம், புடவை, மற்றும் விலை உயர்ந்த வஸ்துக்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டான். இதையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டே உடம்பை ஆட்டிய வண்ணம், தன் எஜமானின் சாமான்கள் திருட்டுப் போகிறதே என்ற எண்ணம் கொஞ்சமும் இல்லாமல் ஆனந்தமாகவே நாய் அவன் கூடச் சுற்றிக்கொண்டிருந்தது.


எல்லாவற்றையும் மூட்டை கட்டிக்கொண்ட திருடன் வீட்டினின்றும் வெளி வந்தான். மதில் சுவர் மேல் ஏறி ஓட எத்தனிக்கும்போது தவறித் தன் பையிலிருந்து ஒரு தங்கச் சங்கிலி கீழே இருந்த ஒரு செடியின் பக்கத்தில் விழுந்ததைப் பார்த்தான். திருடன் குனிந்து செடியின் பக்கத்தில் கையால் தடவிக் கொண்டே தேடினான். அவன் கையைக் கீழே வைத்ததுதான் தாமதம்; நாய் 'லொள், லொள்' என்று குரைத்துக் கொண்டு அவன் மேல் பாய்ந்தது.

திருடன் நடுங்கிப் போய் மூட்டையை அங்கேயே போட்டு விட்டு மாயமாய் மறைந்தான். நாய் செடியின் பக்கத்தில் குழி பறித்து, தான் வெகு நாட்களாய் ஜாக்கிரதையாகப் புதைத்து வைத்திருந்த தன் பொக்கிஷமாகிய எலும்புத் துண்டை வாயால் கவ்வி எடுத்து, "ஏ, திருடா,














போகிற போக்கில் என் எலும்புத் துண்டையும் எடுத்துக் கொண்டு போகலாமென்று பார்த்தாய்? என்னிடமே உன் வாலை ஆட்டப் பார்த்து விட்டாயே!' என்ற பாவனையில் 'லொள், லொள்' என்று நாய் ஓயாமல் குரைத்தது. தன் எஜமானன் குரைத்தால் அடிப்பான் என்பதையும் மறந்து லொள், லொள் என்று குரைத்தது.

நாய் குரைக்கும் சப்தத்தைக் கேட்ட எஜமானன் தடியுடன் நாயை அடிக்க ஓடி வந்தார். ஆனால் அவர் அங்கு கண்ட காட்சி அவரைப் பிரமிக்கச் செய்தது. உடனே அவருக்கு விஷயம் புரிந்து விட்டது. நாய், திருட்டுப் போன மூட்டையின் பக்கத்தில் நிற்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டார். அதை இவ்வளவு நாளாக அடித்ததற்கு வருந்தினார். "அடடா! என்ன நாய் நீ! நாயென்றால் நீ அல்லவோ நாய்! திருடனை விரட்டி என் சொத்தைக் காப்பாற்றினாயே! நாயே! உன் நன்றிக்கு மெச்சினேன்" என்றார் ஜமீன்தார்.

ஜமீன்தார் வீட்டில் அன்று முதல் நாய் மிகவும் சந்தோஷமாகக் காலம் கழித்தது. தனக்கு வால் இல்லாத ஒரு குறையைத் தவிர வேறு ஒரு குறையும் அதற்கு இல்லை. எஜமானர் தன்னை அடிப்பதை நிறுத்திவிட்ட தைரியத்தில் பகல் நேரங்களில் கூட ஓயாமல் கத்தியது. ஜமீன்தாருக்கும் நாய் குரைப்பது பழகிப் போய் நிம்மதியாகத் தூங்கினார்.

அறிவிப்பு

ப்ளாண்டர்ஸ் ஹை கரோன் நீலகிரி தேயிலை



இரு ரகங்களும் மிதமான விலையுள்ளது

உங்கள் வியாபாரியிடம் கிடைக்காவிடில் எங்களுக்கு எழுதுங்கள்

தி ப்ளாண்டர்ஸ் கம்பெனி லிமிடெட்,

ஸ்பிரிங்டேல் குனூர், நீலகிரி, தென் இந்தியா.

பாரதியார் ஞாபகார்த்த நிதி

சென்ற இதழில் "இதர நன்கொடைகள்" என்று குறிப்பிட்டிருந்த ரூ. 182—15—0க்கு விவரம்:

ரூ. 10—0—0: ஸ்ரீமதி பத்மா சுவாமிநாதன், மயிலாப்பூர், சென்னை; ஸ்ரீமான்கள் வி. பி. ராமச்சந்திர அய்யர் பி.ஏ.பி.எல்., வக்கீல், பெரியகுளம்; வீர. கருப்பையா பிள்ளை, கொழும்பு; என். பி. அருணாசலம், கோட்டமுனை, இலங்கை; ஜமேதார் பி. வி. நாராயணஸ்வாமி ஐந்தாம் குரூப் எஸ்.இ.ஏ.சி; ஆர்யவைஸ்ய யுவஜன வாசகசாலை, விழுப்புரம்; ஏ. வைத்திநாதன், ஹிந்துஸ்தான் கோவபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் சொஸைடி, கல்கத்தா; ஸ்ரீமதி சாதுரங்கஸ்வாமி, கல்கத்தா; ஸ்ரீமதி சாரதா வைத்தியநாதன், கல்கத்தா.

ரூ. 8—0—0: பாரத விளையாட்டுக் கழகம், ஆலந்தூர்; ரூ. 6—0—0: ஸ்ரீமான்கள் எஸ். கனகசபை, பெல்காம்; பி. எல். வைத்தியலிங்கம் தேவர், அரிசவல்லை, இலங்கை; "திருச்சி நகித்தி பிரசாரகர்கள்" திருச்சி. (ஸ்ரீ பெ. க. கிருஷ்ணசாமி மூலம்.); ரூ 5—4—0: ஸ்ரீ வி. வி. ராமன், மாதுங்கா, பம்பாய்; ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் எஸ். டி. சிவநாயகம், தாமரைக்கேணி, மட்டகளப்பு, இலங்கை; எஸ் பொன்னையா, கல்வி எஜண்டு, பட்டிகோலா, இலங்கை; ஜே. தியாகராஜன், நியூ டெல்லி; கே. வி. வெங்கட்ட ராமன் எட்டயபுரம்; பாரதி வாசகசாலை, இலுப்பையூர்; ரூ. 3—8—0: ஸ்ரீ எம். பி. சிவராமகிருஷ்ணன், டால்பங்கர், பீஹார்; ரூ. 3—0—0: ஸ்ரீமான்கள் கே. சந்திரசேகரன், மதுங்கா, பம்பாய்; எம். லிங்கம், ஸ்டேஷன் மாஸ்டர், அம்பாத்துரை; லக்ஷ்மி ரைஸ் மில், தச்சநல்லூர்; செ. பிச்சை முதலியார், நடுவிற்பட்டி, எட்டயபுரம்; ஸ்ரீமதி ஸரோஜினி வைத்தராஜன், சித்தூர்; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் கே. எஸ். வி. மாரியப்பன், ஆலங்குளம்; வி. கோவிந்தராஜன், குகை, சேலம்; குருவிக்குளம் ஆசிரியர்கள் சங்கம், குருவிக்குளம்; ஆர். சௌரிராஜன், ஆடிட்டர், பூனா; ரூ. 1—2—0: ஸ்ரீ அ. க. சுந்தர முதலியார், நடுவிற்பட்டி, எட்டயபுரம்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் அ. குப்புசாமி, திருவல்லிக்கேணி; ஸ்ரீமதி எம். ஜானகி, உமையாள்புரம்; டி. என். ஸ்ரீநிவாசன், கர்க்கி; மு. வி. பாலகிருஷ்ணன், பரமக்குடி; அ. தி. சண்முக முதலியார், நடுவிற்பட்டி, எட்டயபுரம்; அ. ரா. ப. முத்து முதலியார், நடுவிற்பட்டி எட்டயபுரம்; அ. கு. மா. அனந்து முதலியார், நடுவிற்பட்டி எட்டயாபுரம்; ஏ. ஆர். ஸ்ரீனிவாச அய்யங்கார், துங்கம்பாக்கம்; என். எஸ். எஸ். ஆரோக்கியசாமி, கோயமுத்தூர்.

சென்ற இதழில் "அன்பர்கள் மூலம் வந்த நன்கொடைகள்" என்று குறிப்பிட்டிருந்த ரூ. 1077—14—0க்கு விவரம்:

இலங்கை, அநுராதபுரா, "தெல்லை முஸ்லீம்," ஸ்ரீ எஸ். டி. முத்துவப்ப சாஹிப் மூலம்:

ரூ. 10—0—0: ஸ்ரீமான்கள் ஏ. சொக்கலிங்கம் செட்டியார், எஸ். நடராஜா, கே. எம். முகம்மது கஸ்நான், ஹாஜி வா. செ. செகு அப்துல்காதர் அன் பிரதர்ஸ், எம். ஏ. தாஸன், மீராண்டாஸ், பி. எஸ். மீரசாஹிபு, "தெல்லை முஸ்லீம்" காயல் பட்டணம், ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் எஸ். எம். பசுபதி, எஸ். வைத்திலிங்கம், வேலாயுதம், எம். எம். கே. கச்சு முகியத்தீன், எம். கௌஸ் முகம்மது, மெ. பெரி. மெ., எம். கருப்பையா பிள்ளை, சவியர் பெர்னான்டோ கொறைறு, என். பீட்டர், திருமதி சிற்றம்பலம், ராமசுவாமி பாமதுரு; ரூ. 3—0—0: ஸ்ரீமான்கள் மூசநாயகம், க. மெய்யழகன், டி. ஏ. அப்துர்ரகுமான், ஏ. எஸ். கே. ஹஸன்மீரு இலப்பை, எம். சிவசுமணியம், என். எஸ். ஹமீது ஹமிங்குரு கொடை., ரூ. 2—8—0: ஸ்ரீமான்கள் பி. நடராஜ பத்தர், வி. மயில்வாகனம், ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் ஏ. பங்கிருஸ், எஸ். எஸ். கந்தசாமி நாடார், எஸ். பி. மயில்வாகனம், வே. இராசையா எஸ். சோமசுந்தரம், எஸ். தம்பு. ஆர். ஆறுமுகம், டி. நடராஜா, எஸ். கே. ஓ. வெள்ளைச்சாமி, ஏ. சந்தனம், எஸ். இளையதம்பி; ரூ. 1—8—0: சீகல் சஹான், ஸ்ரீ பி. எஸ். நாகலிங்கம்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் வி. தியாகருஜன், மா. மு. அப்துல்காதர், கே. வேலுப் பிள்ளை, ஏ. எஸ். பெர்னான்டோ, ஆர். ராஜநாயகம், சோ. குமாரசாமி, கே. கந்தசாமி, பி. சேக இருநயம் குருஸ், வி. செல்வராஜா, ஏ. வி. ஷண்முகநாதன், டி. கணபதி பிள்ளை, கோ. பழனிமுத்து செட்டியார், ஏ. தங்கவேல், எஸ். ஏ. வைத்திலிங்கம், எஸ். துறையப்பா, ஓ. என். எம் சேகுதாவூது. பி. எஸ். முஸ்தபா காமால், ஜ. கஸ்நான், பகவதி ஸ்டோர்ஸ், திருமதி மெ. தில்லையம்மா, மெ. சரோஜா, க. மதுரும்பிகை.

ஆக ரூ. 205—0—0

இலங்கை, கண்டி, ஸ்ரீ மு. வி. கதிரேசன் செட்டியார் மூலம்:

ரூ. 11—0—0: ஸ்ரீ கிருஷ்ணஜுவல்லரி மார்ட்; ரூ. 10—0—0: ஸ்ரீமான்கள் பி. நடராஜ பிள்ளை, எஸ். பி. முத்துசாமி பிள்ளை; ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் பி. ஏ. நடேசன் பிள்ளை, கே. நடேசன் ஆச்சாரி; ரூ. 3—0—0: ஸ்ரீமான்கள் பி. மாரியா பிள்ளை, பழனியாண்டி பிள்ளை, எம். நடேசன், எம். செவந்தியா பிள்ளை, பி. டி. சுமனசேகர; ரூ. 2—8—0: ஸ்ரீ எஸ். கருப்பையா; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் ஏ. பி. ரத்நாயக்க, பி. முத்துசாமி பிள்ளை, எஸ். நல்லதம்பி நாடார், கே. எம். முருக பிள்ளை, பி. எம். சந்தானம் ஆச்சாரி, ஆர். எம். சண்முகம் பிள்ளை, ஏ. திருவண்ணாமலை, வி. அறப்பளி, எம். சுப்ரமணியம், ஏ. முத்தையா செட்டியார், எம். பாலகிருஷ்ணன், வி. குப்புசாமி பிள்ளை, எம். சுரேசன், பி. நடேச பிள்ளை, எம். எஸ். காளியப்ப ஆச்சாரி, வி. துரைச்சாமி; ரூ. 1—8—0; ஸ்ரீமான்கள் இ. கே. ஜயமன் அப்புஹாமி, ஏ. டி. சுந்தரராஜ்; ரூ. 1—0—0; ஸ்ரீமான்கள் கே. வி. மாரியா பிள்ளை, எம். எஸ். சிதம்பரம் பிள்ளை, கே. எஸ். அருணாசலம், டி. தோமஸ், எஸ். வி. முத்தையா பிள்ளை, கே. எல்பட், எஸ். பெரியய்யா ஆச்சாரி, வி. பரமசிவம் ஆச்சாரி. டபிள்யூ. ஜே. ஜேம்ஸ். எஸ். சிவபாத சுந்தரம் பிள்ளை. கே. எம். சுப்பிரமணியம், எஸ். டி. சுப்பையா பிள்ளை, பி. சேகுகாரன், எஸ். வ. எஸ். சுப்பையா பிள்ளை, டி. எஸ். செல்லதுரை, எஸ். செய்புலிங்கம் பிள்ளை, எஸ். சப்பாணி, எஸ். மருதநாயகம், எஸ். கனகசபை, எஸ். மச்சவல்லபன், எஸ். ஆர். பிச்சையா, வி. கிருஷ்ணசாமி

நாயுடு, ஜி. ஆர். சாஞுபிசியர், எம். என். செம்புலிங்கம் பிள்ளை, எம். அருணாசலம் பிள்ளை, வி. ஆறுமுகம் பிள்ளை, எம். செல்லையா பிள்ளை, என். பி. ராமலிங்கம் பிள்ளை, பி. ஏ. ராமசாமி பிள்ளை, பி. ஏ. அருணாசலம் பிள்ளை, டி. என். தேவராய பிள்ளை, கே. எம். சிதம்பரம் பிள்ளை, எம். குழந்தையா பிள்ளை, கே. வி. பெருமாள் பிள்ளை, பி. எம். முருக பிள்ளை, பி. கருப்பையா, கே. காசியண்ணன், எம். சண்முகம், என். நாகராஜசாமி பண்டாரம், ஆர். பாப்பு, எம். சுந்தரம், எம். எம். பெரியண்ண பிள்ளை, ஏ. தங்கதுரை, என். ராமசாமி நாயுடு, என். பி. அருணாசலம் பிள்ளை, ஏ. கந்தையா ஆச்சாரி, என். கே. சின்னையா, பி. கருப்பையா, எம். சௌந்திய பிள்ளை, வி. என். ஆறுமுகம் பிள்ளை, ஏ. ரெத்தினம் பிள்ளை, வி. ரெங்கசாமி நாயுடு, கே. ஆள்வார் நாயுடு, வி. செல்லையா ஆச்சாரி, எம். ஜி. மாரியப்பன், திருமதி பழனியம்மாள்: ரூ. 2—4—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடைகள். (தபால் செலவு நீங்களாக.)

ஆக ரூ. 151—0—0

திருச்செங்கோடு, கல்கி ஏஜண்டு, ஸ்ரீ பி. என். ராமதுரை மூலம்:

ரூ. 10—0—0: ஸ்ரீ வி. வி. சி. ஆர். வையாபுரி முதலியார்; ரூ. 7—0—0: ஸ்ரீ பி. என். நஞ்சப்பக் கவுண்டர்; ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் வி. கே. சன்வரய்யர், வி. டி. ராமஸ்வாமி ஐயர், டாக்டர் கே. ரெங்கநாதன், எஸ். கே. எஸ். அய்யங்கார், நியூ இந்திரா கபே: ரூ. 4—0—0: ஸ்ரீ எஸ். நாகராஜய்யர்; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் ஆ. ரு. ஸ. ராமாநுஜம் செட்டியார், டி. வி. காவேரி முதலியார், வேலாயுதம் செட்டியார், டி. எஸ். நாராயணி அம்மாள், என். வி. ரத்னவேலு முதலியார், வி. ஏ. சுந்தரம், கே. பச்சையண்ண முதலியார், டி. ஏ. சுப்பராயன், ஸ்ரீ ஜெயலக்ஷ்மி அன்டு கோ; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் டி. சி. அன்னாமலை முதலியார், டி. ஆர். நாராயணசாமி முதலியார், கே. ர. பரமசிவம், டி. எம். சுப்பிரமணிய ஆச்சாரி, டி. பி. வெங்கடாசலம், கே. சேஷகிரி ராவ், டி. எஸ். ராமசாமி ஐயர், ராஜா கவுண்டர், வி. வெங்கட சுப்பிரமணியன், எம். என். அனந்தராம், செந்தூர செட்டியார், கணபதி சுப்பிரமணியம், என். பச்சையண்ண முதலியார், டி. ஏ. முத்துசாமி, ஆர். ஏ. குபேரன், கே. என். வெங்கடாசல செட்டியார், டி. வி. அங்கமுத்து முதலியார், டி. ஏ. அர்த்தநாரி, டி. ஆர். ராமசாமி, ராஜாராவ், கணபதி, பி. எஸ். நாகநாதன், எஸ். கே. சுப்பிரமணிய செட்டியார், டி. என். அர்த்தநாரி, டி. ஜி. நாராயணய்யர், சிதம்பரம் செட்டியார், ஏ. கிருஷ்ணன், பி. என். ராமதுரை, என். வி. கே. மாரிமுத்து முதலியார், மு. ப. சா. மாணிக்க முதலியார், கே. ஏ. காசி விஸ்வநாதன், ஏ. குமரசாமி, ஆர். சி. சிக்க ராமலிங்கம், ஸ்ரீமதி டி. கிருஷ்ணவேணி அம்மாள், ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி பாங்க், மனைவி ஜெயப்பாலையம் சன்மார்க்க சங்கம், சேலம் பாங்க் கிளை, திருச்செங்கோடு; ரூ. 2—0—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடைகள்.

ஆக ரூ. 103—0—0

செக்கநூரணி, போஸ்ட்மாஸ்டர், ஸ்ரீ வி. பாலசுப்பிரமணியன் மூலம்:

ரூ. 10—0—0: ஸ்ரீ என். பேயத்தேவர்; ரூ.5—0—0: ஸ்ரீ பி.வி.பி. கணபதி; ரூ. 5—1—0: ஸ்ரீமான்கள் திருமாணிக்கம் டி. என். குருவய்யர்; ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் ஏ. சங்கர நந்தாலம் பிள்ளை, க. பாரைப்பட்டி ரோமமஹா ஜனங்கள்; ரூ. 3—0—0: ஸ்ரீமான்கள் கே. என். கிருஷ்ண சாஸ்திரி, பாலசுப்ரமணியன், கே. எம். பி. பெரிய கருப்பத்தேவர், ஆர். பொன்னு சேர்வை; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் ஆர். சுந்தரராஜன், பி. பி. வடிவேல் செட்டியார், என். காவேரியா பிள்ளை சன்ஸ், என். குப்புசாமி அய்யர், பி. மலையாளத் தேவர், கே. பெயாண்டித் தேவர், ஏ. முத்துவீரன்; ரூ. 1—8—0: ஸ்ரீமான்கள் என். ஏ. முத்துசாமி நாடார், ஆர். விஸ்வநாதய்யர், ஏ. சிற்றம்பல நாடார், பி. சக்கரை வீரத்தேவர்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் எம். பி. ஏ. அடைக்கலங்கா நாடார், ஏ. பெரியசாமி நாடார், வி. சுந்தரம் செட்டியார், என். கந்தசாமி நாடார், தமிழ்ச் சிங்கம் கடேர்முத்து, என். மாயாண்டித் தேவர், சந்தனம், துரைச்சாமி, ஏ. வி. எம். செல்லையா நாடார், என். வி. தண்டபாணி, எம். சோமநாதன், கே. எம். சின்னச்சாமி, என். நாகலிங்கம், ஓ. கே. எம். கருப்பண நாடார், வி. சேர்மலை செட்டியார், சி. காமாக்ஷி ராவ், பி. காமாக்ஷி ராவ், என். பெரியசாமி, ஏ. வி. கே. சுப்ரமணிய நாடார், என். சுப்பையா நாயுடு, டி. என். சுந்தரத் தேவர், ஜே. தேவசிவாநந்தம், எம். கே. பெரியசாமி நாடார், கோத்தாலம் பாலரெத்தினம், டி. பொன்னுச்சாமி, எம். பி. பழனிவேல் தேவர், சுப்பையா சேர்வை, பூ. பின்னத் தேவர், ஸ்ரீனிவாஸன், எம். காசிமுத்துப் பிள்ளை, ரூ. 8—10—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடைகள். (தபால் செலவு நீங்களாக.)

ஆக ரூ. 100—0—0

விழுப்புரம் டவுன், எலிமெண்டரி ஸ்கூல் மானேஜர், ஸ்ரீ ஆர். வெங்கடேசன் மூலம்:

ரூ. 16—8—0: விழுப்புரம் உத்தியோகஸ்தர்கள்; ரூ. 7—8—0: விழுப்புரம் வியாபாரிகள்; ரூ. 5—12—0: முனிசிபல் உயர்தர பாடசாலை ஆசிரியர்கள்; ரூ. 3—8—0 நாப்பாளையத் தெரு டவுன் ஸ்கூல் ஆசிரியர்கள்; ரூ. 2—12—0: முனிசிபல் உயர்தர பெண் பாடசாலை ஆசிரியர்கள்; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் என். சிதம்பர அய்யர், டி. ஆர். வெங்கிட்டராமன், பி. என். வெங்கடேசஐயர், டி. ராமச்சந்திரன், ஆர். வெங்கடேசன், வி. கே. ஜகதீஷ், வி. குப்புசாமி அய்யங்கார், வி. சங்கரநாதய்யங்கார், ஜி. அனந்தம் பிள்ளை, ஸ்ரீமதி ஜே. கடம்பா, முனிசிபல் எலிமெண்டரி பாடசாலை, கீழ்பெரும்பாக்கம்; முனிசிபல் எலிமெண்டரி பாடசாலை, ஆஸ்பத்திரி ரோடு; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் டி. கே. வீரராகவன், ஆற்காடு பிரஸ் மானேஜர், ஏ. வி. ராமதுரை அய்யர், பி. ஜெயராமன், கே. பத்மநாபன், வி. துரைமணி, என். சம்பமூர்த்தி, டி. வி. கிருஷ்ணமூர்த்தி, ஆர். சந்தான கிருஷ்ணன், வி. பி. ஆள்வார் நாயுடு, கே. வி. ராமன், வி. கிருஷ்ணமாச்சாரி, என். காளியப்ப செட்டி, என். தண்டபாணி பத்தர், சி. தியாகராஜன், கே. பாலசுப்ரமணியம், எம். கணபதி, வி. சுப்ரமணிய அய்யர், ஓ. பி. செல்வராஜ், ஓ. பி. சுப்பராமன், வி. பார்த்தசாரதி, என். ராமசாமி, ஏ. நடராஜன், கே. ராஜகிருஷ்ணன், கே. கிருஷ்ண நம்பியார், கே. என். ராமச்சந்திரன், கே. என். சுந்தரம் செட்டியார், ராமகிருஷ்ண செட்டியார், ராஜாராம் செட்டியார், ஜானகிராம் செட்டியார்,

சிங்காரம் பிள்ளை, டி. துரைசாமி, என். கிருஷ்ண செட்டியார், வி. ஆர். நாராயணசாமி ஐயர்.

ஆக ரூ. 94—0—0

கல்கத்தா, பந்தரம் இந்திய ஆகாய விமானப்படை, ஸ்ரீ சி. பி. எஸ். ராமசுப்பு மூலம்:

ரூ. 7—0—0 : ஸ்ரீ ஆர். கோவிந்தராஜன்; ரூ. 5—0—0 : ஸ்ரீமான்கள் சி. சுப்பிரமணியன், டி. சோமசுந்தரம், ஏ. செல்வராஜன், ஆர். சுவாமி ஆசாரி, பி. எஸ். அப்புராவ், சூரிய நந்தன், ஹரி; ரூ. 4—0—0 : ஸ்ரீ எஸ். ராமசுப்பு; ரூ. 3—0—0 : ஸ்ரீ விஸ்வநாதன்; ரூ. 2—0—0 : ஸ்ரீமான்கள் ஏ. இலட்சுமணன், வி. பி. சஞ்சீவி; ரூ. 1—0—0 : ஸ்ரீமான்கள் என். கே. நாயுடு, ஏ. கூப்பர், டி. என். நாராயணசாமி, டி. எஸ். சாலமோன், டி. வி. சந்தியம், ஏகநாதன், டி. தேவதிரவியம், ஜி. சுப்ரமணியன், பிள்ளை, ஜே. நாகராஜன், பத்மநாபன், ஒரு அன்பர்; (மணியார்டர் கமிஷன் நீங்கலாக.)

ஆக ரூ. 64—2—0

இலங்கை, நுவரெலியா, கல்கொடை ஏஜன்டு ஸ்ரீ எஸ். வேலுப் பிள்ளை மூலம்:

ரூ. 10—0—0 : ஸ்ரீமான்கள் ஏ. எஸ். டி. லெவிங்கம் பிள்ளை, ஏ. ஷண்முகம் செட்டியார்; ரூ. 5—0—0 : ஸ்ரீமான்கள் வி. இ. நடராஜ பிள்ளை, எஸ். வேலுப்பிள்ளை; ரூ. 2—0—0 : ஸ்ரீ. பி. சுப்பாணி பிள்ளை; ரூ. 1—0—0 : ஸ்ரீமான்கள் எஸ். துரைசாமி பிள்ளை, ஏ. ஆள்வார் நாடார், ஆர். ஜம்புலிங்க நாடார், பி. ஆர். பொன்னையா பிள்ளை, ஜி. அப்புஹாமி, ஒய். சாமுவல் நாடார், பி. ஏ. ஆண்டியப்பன், எம். சந்தானம், எம். கோவிந்தசாமி செட்டியார், கே ஆறுமுகம் செட்டியார், எம். நடராஜ பிள்ளை, கே. அருணாசலம் பிள்ளை, ஆர். எம். என். கே. நல்லப்ப உடையார், ஏ. எம். நடராஜ பிள்ளை, எம். ஏ. பீரமொஹிதீன், எம். வி. மஜுவேல், என். முத்துஸ்வாமி உடையார், ஒய். டேவிட், ஆர். பெரியண்ணன், எஸ். பி. வையாபுரி பிள்ளை, எம். வி. கோதண்டராமன்.

ஆக ரூ. 53—0—0

ஜாலந்தர், ஸ்ரீ எஸ். தியாகராஜன், பி. எஸ். வி. எல். டி. மூலம்:

ரூ. 2—0—0 : ஸ்ரீ எஸ். தியாகராஜன்; ரூ. 1—0—0 : ஸ்ரீமான்கள் வி. ராதாகிருஷ்ண நாயுடு, எஸ். வெங்கடசுப்ரமணியன், கிருஷ்ணமாச்சாரி, கே. ஜி. சிவசங்கரன், சிவப்பிரகாசம், எஸ். ஆர். வெங்கட்ராமன், கே. பாஸ்கர மேனன், எஸ். ராமநாதன், கே. வி. ராமச்சந்திரன், ஆர். ஜெகன்னாதன், எஸ். ராமு, எஸ். சுப்பையா, எஸ். வெங்கட கிருஷ்ணன், கே. ராமசுப்ரமணியன், வி. எஸ். குமாரஸ்வாமி, பி. எஸ். எஸ். ராகவன், டோன்டு ராவ், டி. வெங்கிடேராமன், எச். எஸ். சாந்தாரம், ஓ. நா. ஜெயராமன், எஸ். வெங்கிடராமன், ஓ. நா. சதாசிவன், எம். எஸ். சரவணம், ஜி. மாதவ ராவ், எஸ். நாராயண ராவ், டி. வைத்தியநாதன், வி. எஸ். விஸ்வநாதன், ஆர். வியோமகேசவ நாயர், வி. கிருஷ்ணமூர்த்தி, சி. கிருஷ்ணஸ்வாமி, கே. வெங்கடாசலம், ஜி. ஏ. ஜானகிராமன், டி. எஸ். சிவராமய்யர், டி. வரதராஜன், இரா. இராகவன், ஆர். எல். நரசிம்ஹன், ஆர். ஸ்ரீனிவாசன், எஸ். வெங்கடகிருஷ்ணன், எம். குருஸ்வாமி, வாசுதேவ ராவ், வி. எஸ். வரதராஜன், அநந்தபத்மநாபன், எஸ். வெங்கட்ராமன், வி. அரசப்பன், வாசு, ஜி. தியாகராஜன் அன்டு பிரதர், ஏ. தியாகராஜன், கே. ஜி. கிருஷ்ண மூர்த்தி, எஸ். மணி; ரூ. 1—0—0 : ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடைகள். (மணியார்டர் கமிஷன் நீங்கலாக.)

ஆக ரூ. 51—4—0

இலங்கை, பன்னலை, யக்விலா, ஸ்ரீ ஏ. எம். துரைசாமி நாடார் மூலம்:

ரூ. 3—0—0 ஸ்ரீமான்கள் ஆ. மா. துரைசாமி நாடார், சா. க. கந்தசாமி நாடார்; ரூ. 2—8—0 : ஸ்ரீ வே. கந்தய்யா; ரூ 2—0—0 ஸ்ரீமான்கள் த. குமாரசாமி நாடார், க. சதாசிவம், பி. கந்தசாமி நாடார், அ. திருப்பதி பாண்டியன்; ரூ. 1—0—0 : ஸ்ரீமான்கள் எஸ். ஆசை நாடார், மாதங்க நாடார், மா. சாமி நாடார், வே. தங்கப்பாண்டி நாடார், க. முத்தையா நாடார், வி. இல்லங்குடி நாடார், நா. பொன்னையா நாடார், வை. தம்பிஐயா, வை. செல்லத்தம்பி, பொ. சுப்பிரமணியம், க. சண்முகம், பா. அழகேச நாடார், பொ. கோவில்பிச்சை நாடார், வே. ஆறுமுக நாடார், க. ராஜபாண்டிய நடார், கே. மணி நாடார், நா. மாசிலாமணி நாடார், ப. பெருமாள் நாடார், த. நவமணி நாடார், டபிள்யூ. எம். குணசேகர, எம். எம். பி. பெர்னாந்து, வ. அழகுவேல் நாடார், பெ. பாண்டியா நாடார்; ரூ. 0—8—0 : ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடை.

ஆக ரூ 40—0—0

இலங்கை, மாவநல்லை, ஸ்ரீ எம். சி. முத்துக் கருப்பன் மூலம்:

ரூ. 5—0—0 : ஸ்ரீமான்கள் வ. திருநாவுக்கரசு; மு. சி. முத்துக்கருப்பன்; ஓர் சிங்கள அபிமானி; ரூ. 3—0—0 ; சிங்கள அபிமானிகள்; ரூ. 2—4—0 : ஸ்ரீ எஸ். திருச்செல்வம்; ரூ. 1—8—0 : ஸ்ரீ ச. சிவன்தேவர்; ரூ. 1—0—0 : ஸ்ரீமான்கள் ச. சபாரத்தினம், வே. இராசையா, இ. சோமசுந்தரம், மு. சி. ஆறுமுகம், எஸ். அருணாசலம், கே. பாலலிங்கம், கே. எஸ். பிச்சையா செட்டியார், வே. அ. நாகரெத்தினம், எஸ். ஆறுமுகசாமி, பெ. அழகன், வே. சி. குமாரசாமி, எம். ஜே. முகம்மது நஹாவிப், க. பொன்னுத்துரை, ஏ. ஹபு ஹனிபா; ரூ. 0—4—0 : ஒரு ரூபாய்க் குட்பட்ட நன்கொடை.

ஆக ரூ. 36—0—0

செங்கூர், ஸ்ரீமதி ராணி வள்ளிமயில் நாச்சியார் மூலம்:

ரூ. 10—0—0 : வேளார் ராமகிருஷ்ண லஞ்ச் ஹோம்; ரூ. 5—0—0 : ஸ்ரீமதி ரா. உ. மீனாக்ஷி சுந்தர நாச்சியார், ரா. த. கவேசகுஞ்சரி நாச்சியார், ரா. நவசக்தி, இராமநாதபுரம்; ரூ. 3—0—0 : ஸ்ரீமான்கள் எஸ். ராமசாமி பிள்ளை, ஸ்ரீநாதன்; ரூ. 2—0—0 : ஸ்ரீ சிவசுப்ரமணியன்.

ஆக ரூ. 33—0—0

கொழும்பு, ஸ்ரீ சோம. நாராயணன் மூலம்:

ரூ. 10—0—0 : ஸ்ரீ செ. ஜு. வ. சேக்கப்பன்; ரூ. 5—0—0 : ஸ்ரீமான்கள் சோம. நாராயணன், ராம. அடைக்கப்பன், ஒரு அபிமானி.

ஆக. ரூ. 25—0—0

பங்களூர், பாரதி நிலையம், ஸ்ரீ ஆர். திருவேங்கடம் மூலம்:

ரூ. 1—0—0 : ஸ்ரீமான்கள் மு. பாலகிருஷ்ணன், கெஜராஜ், ஆ. ப. பத்மநாபன், ம. ச. கோவிந்தராஜ், திருவேங்கடம், ராம

சாமி, சம்பத் நாராயணன், தங்கவேலு, க. அ.சமத், மு.அ. பத்மநாபன், கோ. ஸ்ரீ வேணு கோபால். ரூ. 9—2—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடைகள்.

ஆக ரூ. 20—2—0

மார்த்தாண்டபுரம், மாரதான் வாசகசாலை, ஸ்ரீ என் மணி மூலம்:

ரூ. 3—0—0: ஸ்ரீ கே. நாகராஜன்; ரூ. 2—0—0: புதுவை பஸ் யூனியன்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் சதாசிவ அய்யர், தேவதேசன், என். சி. வி., பி. வி. சுப்பிரமணியம், டி. கோவிந்தசாமி, கோவிந்தராஜுலு, ஜி. கே. ராமமூர்த்தி. ரூ. 6—4—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடைகள்.

ஆக ரூ. 18—4—0

தஞ்சாவூர், ஸ்ரீ கே. வரதராஜன் மூலம்:

ரூ. 2—0—0: ஸ்ரீ கே. வரதராஜன்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் ரு. சுவாமிநாதன், வை. வி. ஞானசேகரன், ரு. கணேசன், ரா. இலக்குமணன், ரா. வெங்கடராமன், மஹா கணபதி, ஆ. ராமபத்திரன், ஏ. எஸ். ஜெயராமன், வி ஆர். வெங்கடேசய்யர், வி. சுந்தரம், நவே அன்டு-பட்; ரூ. 4—8—0: ஒரு ரூபாய்க் குட்பட்ட நன்கொடைகள்.

ஆக ரூ. 17—8—0

21. ஏ.பி.பி.ஓ., இந்திய ஆகாய விமான சர்வே இலாகா, ஸ்ரீ டி. பி. சுவாமிநாதன் மூலம்:

ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் என். கிருஷ்ணன், டி.பி. சுவாமிநாதன்; ரூ. 2—0—0: ஸ்ரீ ஆர். துரை; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் என். வி. நாயர், என்.கே. நாயர், பி. ஓ. அப்ரஹாம்.

ஆக ரூ. 15—0—0

ராணிப்பேட்டை, சரஸ்வதி லஞ்ச் ஹோம் (பிச்சைவாடி ஸ்ரீ என். சுந்தரமய்யர்) மூலம்:

ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் வில்வநாதன் செட்டி, ஆர். வரதராஜ முதலியார்; ரூ 1—0—0: ஸ்ரீமான்கள் எல். ஆர். கண்ணப்ப நாயுடு, வி. திவாகர அய்யர், கே. அப்துல் வஹாப் சாகிப், கே. அண்ணாமலை பிள்ளை, பி. என். சதாசிவ முதலியார், எஸ். கே. ஜெயராம முதலியார், வி. வி. பெருமாள்; ரூ. 2—8—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடைகள். (தபால் செலவு நீங்கலாக.)

ஆக ரூ. 13—2—0

அலஹாபாத், ஆர். ஏ. எப்., ஸ்ரீ சி. ஜி. கிட்லி மூலம்:

ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் கிட்லி செல்லசாமி, எட்வின் செல்லசாமி, ரெங்கநாதன், தேவராஜ்லு. டி. ஆல்பர்ட், பிரபாகரன், எம். செல்வநாயகம், ஜே. தயிருதயசாமி, நீலகண்டம், ஆர். நாகராஜன்.

ஆக ரூ. 10—0—0

சிம்லா, ப்ரெவரி, ஸ்ரீ எம். கிருஷ்ணமூர்த்தி மூலம்:

ரூ. 5—0—0: ஸ்ரீ வி. சுவாமிநாதன்; ரூ. 3—0—0: ஸ்ரீ ம. கிருஷ்ணமூர்த்தி; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் ரா. ராமச்சந்திர சாஸ்திரி, ர. ராமச்சந்திரன்.

ஆக ரூ 10—0—0

பங்களூர், ஸ்ரீ ஆர். பாலசுப்பிரமணியம் மூலம்:

ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் ஆர். பாலசுப்பிரமணியம், எஸ். சிவராமன், எஸ் எஸ் ராம கிருஷ்ணன், எஸ். எஸ். சஞ்சீவகிருஷ்ணன், பி. கேசவ ஐயர், டி.கே. திருமூர்த்தி; 0—8—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடை.


ஆக ரூ. 6—8—0

கிட்டுவின் கேள்வி — 5.



கிட்டு:—அப்பா! எதற்குக் காலட்சேபம் முடிந்தவுடனே எல்லாருக்கும் சுண்டல் கொடுக்கறா?

தகப்பனார்:—இது தெரிய வில்லையா கிட்டு? எல்லோரும் கடைசி வரையில் இருந்து கதையைக் கேட்க வேண்டும் என்றுதான்!



அவன் திருட்டு விற்பனையை ஒழிக்க உதவுகிறான்

தேசிய போர்முனையின் பிரசுரம்

AAA 1384—B. TM

KALKI—4-2-1945

அத்தையின் பாசம்



ஜயலக்ஷ்மி ஆர். ஸ்ரீநிவாசன்

தங்கம் கைம்பெண்ணானவள். கடந்த வருஷம்தான் அவள் கணவன் அவளைத் தனியே விட்டு விட்டுப் போய்விட்டான். அவள் தமையன் தாசரதி ஐயரும், அவர் மனைவி பாமாவும் எவ்வளவோ தான தருமங்களும், க்ஷேத்திராடனமும் செய்த பிறகு, ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அதை உள்ளிலேயே பாமாவிற்கு ஜன்னி கண்டு விட்டது. எவ்வளவோ வைத்தியம் செய்தும் பயன்படாமல் பிரசவித்த ஒன்பதாம் நாள் அவள் விண்ணுலகை அடைந்தாள்.

குழந்தை பதுமைபோல் வெகு அழகாக இருந்தது. அதைச் சீராட்டிப் பாராட்டி வெகு செல்லமாகப் போஷித்து வந்தாள் தங்கம். அந்த நொந்த ஜீவனுக்கு இந்தக் குழந்தை வளர்ப்பு ஒரு ஆறுதலாக இருந்தது.

மறு விவாகம் செய்து கொள்ளும்படி உற்றார் உறவினரும், நண்பர்களும் எவ்வளவோ சொல்லியும் தாசரதி ஐயர் அதற்கு இணங்கவில்லை. தம் மறைந்த மனைவியின் நினைவிலேயே நாளுக்கு நாள் உருகினவராய், ஏதோ கடமையை முன்னிட்டுக் கோர்ட்டுக்குப் போய் வந்து கொண்டிருந்தார். தங்கம்தான் குடும்பத்தின் சகல அலுவல்களையும் திறமையுடன் கவனித்து வந்தாள்.

வளர் பிறைபோல் வளர்ந்த சுந்தரம் தன் பெயருக்குப் பின்னால் பி.ஏ. என்ற இரண்டு எழுத்துக்களையும் சம்பாதித்துக் கொண்டான். நல்ல உத்தியோகமும் கிடைத்தது. சென்னையில் பிரபல டாக்டரான ராமச்சந்திர ஐயரின் புதல்வி சௌபாக்கியவதி மாலதிக்கும், சிரஞ்சீவி சுந்தரராஜனுக்கும் கடவுள் அருளால் கலியாணமும் சிறப்பாக நடந்தது.

கலியாணம் நடந்த ஆறு மாதத்திற்கெல்லாம் மாலதி புக்ககம் வந்து சேர்ந்தாள். தங்கம், நாட்டுப் பெண்ணின் அழகையும், படிப்பையும், பாட்டையும் சமத்தையும் பற்றி எல்லோரிடமும் பெருமை யடித்துக் கொண்டாள். சுந்தரம் வேலையிலிருந்து திரும்பியதும், "ஏண்டா, ராஜா! பாவம், மாலதிக்குப் பொழுதே போகவில்லை. சிறிசு தானே? சாயந்திரம் சற்று வெளியில் எங்கேயாவது போய் வரணும்னு ஆசையா யிராதோ? அவளை சினிமாவுக்கோ, பீச்சுக்கோ, எங்கேயாவது தினம் ஓரிடத்துக்குக் குஷியாய் அழைச்சுண்டு போய் வரப்படாதோ?" என்பாள் தங்கம்.

"சரி, அத்தை! நீங்களும்தான் எங்களுடன் வாருங்களேன். மூன்று பேரும் தமாஷாகப் போய் விட்டு வரலாம்" என்பான் சுந்தரம்.

இதைக் கேட்டதும் மாலதியின் முகம் கோணும். அதைத் தங்கம் கவனித்து விடுவாள். "என்னவோ சிறிசு, பாவம்! அகமுடையானுடன் தனியாய்ப் போகணும்னு ஆசை யிருக்கும்!" என்று நினைத்தவளாய், "எனக்கென்னடா வேண்டிக் கிடக்கு. பீச்சும், கீச்சும்! நீங்கள் இருவரும் போய் வாருங்கள்" என்று தம்பதிகளை அனுப்பி வைப்பாள்.

ஆனால் ஒவ்வொரு நாள், தன் ராஜாவின் வார்த்தையைத் தட்டமாட்டாமல், "என்னடா, இன்னும் குழந்தையாகவே இருக்கிறயே!" என்று தங்கமும் அவர்களுடன் வெளியே சென்று வருவாள்.

தங்கம் மாலதியிடம் எவ்வளவோ அன்பு பாராட்டி வந்தும், ஏனோ மாலதிக்கு வர

வட அத்தையைக் கண்டால் பிடிக்கவே யில்லை. "நாங்கள் இருவரும் தனியாக இருக்க வொட்டாமல் இவள் யார் 'ராஜா, ராஜா!' என்று எவில் சொந்தம் கொண்டாடிக் கொண்டு கொட்டம் அடிக்கிறது?" என்று தன் சேகிகளிடம் அத்தையைப் பற்றிக் குறை கூறுவாள்.



ஒரு நாள் சுந்தரம் தன் மனைவியுடன் அத்தையையும் கூட்டிக் கொண்டு சங்கீதக் கச்சேரிக்குப் போய்விட்டு வந்தான். மறு நாள் தன் குழந்தை ஆண்டு நிறைவிற்காக மாலதியை அழைக்க வந்த லலிதா, அவளுடன் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டு உட்கார்ந்து விட்டாள்.

"ஏண்டி, மாலதி! நேற்றுக் கச்சேரிக்கு உன்னுடன் ஒரு அம்மாள் வந்திருந்தாளே, அவள் யார்? அவள் புடவையையும் அழகையும் பார்த்தால் சமையல்காரியோன்னு நினைத்தேன்!" என்றாள் லலிதா.

"அவளா? அவருக்கு அத்தை உறவாம். அத்தையைப் பார்க்கலே, சொத்தையை! என்னவோ சோத்துக்குக் கதியில்லா விட்டால், இத்தனை போட்டதை சாப்பிட்டுட்டு சிவனேன்னு வீட்டோட கிடக்கப் படாதோ? அவள் பவிஷுக்குப் பாட்டுக் கச்சேரி என்ன, சினிமா என்ன, பீச் என்ன, அருமை மருமானுடன் அவளும் கிளம்பி விடுகிறாள்! என்னதான் வெட்கம் பிடுங்கித் தின்கிறது!" என்றாள் மாலதி.

"இந்தச் சனியன்களே இப்படித்தான்! பேசாமே அவளை ஊருக்கு அனுப்பி விடு. மாதம் அஞ்சோ பத்தோ அவள் சாப்பாட்டுக்கு அனுப்பித் தொலை. சமையல் வேலைக்கு ஒரு ஆளை அமர்த்திண்டா போறது!"

"அவர் கேட்கணுமே! நான் எப்படிச் சொல்றது? அவர்தான் இந்தத் தரித்திரத்தினிடம் 'அத்தை அத்தை'ன்னு உயிரை விடுகிறாரே!" என்றாள் மாலதி.

கூடத்தில் உட்கார்ந்தபடி அதுவரை கேட்டுக் கொண்டிருந்த தங்கம், "சிவ, சிவா!" என்று இரண்டு காதுகளையும் இறுகப் பொத்திக்கொண்டு, சமையல் கட்டிற்குச் சென்று விட்டாள். தன் காதையே அவளால் நம்ப முடியவில்லை. வெகு நேரம் வரை கல்லாய்ச் சமைந்து போய் உட்கார்ந்த இடத்திலேயே உட்கார்ந்து கிடந்தாள். அவள் மனம் தன் வாழ்நாள் முழுதும் நடந்த நிகழ்ச்சிகளை யெல்லாம் எண்ணி எண்ணி உருகிற்று. யார் சுகத்திற்காக இவ்வளவு நாளும் அல்லும் பகலும் உழைத்து வந்தாளோ, அவன் தற்பொழுது குடியும் குடித்தனமுமாக இருப்பதைக் கண்டு களித்தாகி விட்டது. மன்னி தன் மீது சுமத்திச் சென்ற கடமையைச் செய்து முடித்து, வாரிசதாரிடம் ராஜாவையும் ஒப்படைத்தாகி விட்டது. இனி தனக்கு என்ன கவலை? இருவரும் நீர்க்காயுசோடு சுகமாயிருக்க வேண்டும், அவ்வளவுதான்.

★

மறு நாள் காலை மூட்டை முடிச்சுகளுடன் சேலத்திலிருந்த தன் அண்ணாவின் வீட்டுக்குப் புறப்பட்டு விட்டாள் தங்கம். திடீரென்று அத்தை இப்படிப் பிரயாணப் பட்டதைக் கண்டு சுந்தரம் ஆச்சரியமடைந்தான். கவலையுடன், "ஏன், அத்தை! திடீரென்று கிளம்பி விட்டாய்?" என்று கேட்டான்.

"இல்லை, ராஜா! எனக்கென்னவோ ராத்திரி யெல்லாம் தூக்கமே வரவில்லை. அண்ணாவைப் பற்றியே நினைவு. வர வர உடம்பும் தள்ளலே! அண்ணாவிடமே போய் இருந்துடணும்னு அஞ்ஞானம். ராஜம்மாவிடம் சொல்லி இருக்கேன். நாளைக்கு ஒரு சமையல்காரியை அழைச்சுண்டு வரேன்னு அவள் சொல்லி யிருக்காள். மாதம் பதினைந்து ரூபாய் சம்பளம் பேசி யிருக்கிறேன். இருவரும் சமத்தா, சௌக்கியமா யிருங்கள். நான் போய்விட்டு வரேன்" என்று கிளம்பியே விட்டாள் தங்கம்.

எவ்வளவோ தூரம் வற்புறுத்திப் பார்த்த சுந்தரம், கடைசியில் உடனே சென்று

பத்து ரூபாய் நோட்டுகள் பத்து எடுத்துக் கொண்டு வந்து, "இந்தா, அத்தை! செலவுக்கு வைத்துக் கொள்" என்றான்.

"வேண்டாம் ராஜா, வேண்டாம். என் உயிருள்ளவரை என்னை நான் சம்ரக்ஷித்துக் கொள்ள அவர் எனக்கு வேண்டிய செல்வம் வைத்துவிட்டுப் போயிருக்கிறார். அந்த விஷயத்தில் எனக்கு ஒரு குறையும் இல்லை. இரண்டு பேருமா, சமத்தா அன்னியோன்னியமா இருங்கள். அதுவே போதும், எனக்கு! சயிலுக்கு நாழியாகி விட்டது. வண்டி கொண்டு வருகிறாயா?" என்றாள் தங்கம்.


சுந்தரமும் மறுபேச்சின்றி 'ஷெட்'டிலிருந்த மோட்டாரை ஓட்டிக் கொண்டு வந்து வாசல் பக்கம் நிறுத்தினான். அத்தை ஊருக்குப் புறப்பட்டே விட்டாள். அவளுடைய பிரிவாற்றாமையால் அவர்கள் வீடு கூடப் புலம்புவதுபோல் தோன்றிற்று.

★

அத்தை சேலத்திற்குச் சென்ற இரண்டு மாதங்களுக்குப் பிறகு அவளிடமிருந்து சுந்தரத்திற்கு ஒரு கடிதம் வந்தது. அப்பொழுது சுந்தரம் வீட்டில் இருக்கவில்லை. மாலதியே உறையை உடைத்துக் கடிதத்தை எடுத்து, "ஊருக்குச் சென்றும் கூட இரசப் பீடையின் தொல்லை விட்டபாடில்லையே!" என்று முணுமுணுத்துக் கொண்டே படித்தாள்.

"என் அருமை குழந்தை சிரஞ்சீவி ராஜாவிற்கும், சௌபாக்யவதி மாலதிக்கும் அநேக ஆசீர்வாதம்.

இங்கே அண்ணா, மன்னி, மாப்பிள்ளை, குழந்தை பாலு, அம்புஜம் உள்பட அனைவரும் க்ஷேமம். மாலதியின் சுகத்தைப் பற்றியும் உன்னுடைய சுகத்தைப் பற்றியும் அடிக்கடி கடிதம் எழுது.



பட்டிக்காட்டான் (ஹோட்டலுக்கு வெளியே இருக்கும் ஒலி பெருக்கியைப் பார்த்துவிட்டு:—அந்தப் பெட்டிதானே பாடிக்கிட்டு இருக்கு; இந்தப் பெட்டியை என்னத்துக்கு ஐயா ரூவா போட்டு வாங்கி வச்சிருக்கீங்க?

உன்னைப் பிரிந்து வந்ததிலிருந்து எனக்கு ஊணுறக்கமும் வேண்டியிருக்கவில்லை. சதா உன் நினைவுதான். இந்த உலக பந்தத்தினின்றும் விடுபட எண்ணி, கடவுளின் தியானத்தில் மனதைச் செலுத்த படாதபாடு பட்டுக் கொண்டிருக்கிறேன்.

என் ராஜா! உன்னை எடுத்து வளர்த்த பாசம் அறுபடா வண்ணம் என் அன்பின் பரிசாக ஒரு ஞாபகச் சின்னம் இருக்க வேண்டாமா? அதற்காகப் பட்டணத்தில் ஒரு அழகிய பங்களா விற்பனைக்கு இருப்பதாக அண்ணாவின் கட்சிக்காரன் ஒருவன் சொன்னான். அதை அண்ணா பத்தாயிரத்திற்கு விலை பேசி விட்டான். என்னிடமிருந்த பன்னிரண்டாயிரத்தில், பத்தாயிரத்தைக் கொடுத்து அந்தப் பங்களாவை உன் பெயரில் வாங்கி விட்டேன். அதுவே நான் உனக்கு அளிக்கும் ஞாபகச் சின்னம். நம்மாத்துக்கு அடுத்தகத்து நாட்டுப் பெண் ஸ்ரீதேவியின் வைர வளையல்கள் ரொம்ப நன்றாக இருக்கிறதென்று மாலதி அடிக்கடி சொல்வாள். அதற்காக மாலதிக்கு ஒரு ஜதை வைர வளையல்கள் கட்டி இருக்கிறேன். அதை இன்றைய தபாலில் 'இன்ஷ்யூர்' செய்து அனுப்பியிருக்கிறேன். அது தான் அவளுக்கு நான் அளிக்கும் ஞாபகச் சின்னம்.

உங்கள் இருவரையும் பகவான் சகல மங்களத்துடனும், தீர்க்காயுசுடனும் வைக்கட்டும்.

உன் அன்புள்ள அத்தை,

தங்கம்.

கடிதத்தைப் படித்து முடித்ததும் மாலதியால் பொங்கி வந்த துக்கத்தை அடக்க முடியவில்லை. தன்னை நிந்தித்தவர்களிடமே தயவு காட்டும் தங்கத்தின் அருங்குணம் மாலதியின் உள்ளத்தை உருக்கி விட்டது. வாய் விட்டு அழுது விட்டாள். கண்ணீர் தோய்ந்த அவள் கண்களுக்கு எதிரே அத்தையின் அன்பு கனிந்த பிரதிபிம்பம் காட்சி அளித்தது. "இந்தப் பாவிக்கு மன்னிப்பு உண்டா?" என்று இரைந்து கொண்டே சென்று தங்கத்தின் படத்துக்கு முன்னால் விழுந்து நமஸ்கரித்தாள்.

காலக்ஷேபம்

பிரயோசனமில்லை

பிச்சைக்காரன் :—சாமி! பசி காதை அடைக்கிறது. ஏதாவது......

வீட்டுக்காரர் :—ஏண்டா, போய் ஏதாவது வேலை செய்வதுதானே?

பிச்சைக்காரன் :— அப்படியும் செய்து பார்த்தேனுங்க; ரொம்பப் பசிக்கிறது, சாமி!

—ஆர். ரங்கராஜன்.

★

ரொம்ப சரி!

காப்பி சாப்பிட வந்தவர் :— என்ன ஐயா, இது? காப்பி சாப்பிடலாமென்று வந்தால் வெறும் தண்ணீராயிருக்கே? எங்கே உமது முதலாளி?

பரிசாரகர் :—கொஞ்சம் பொறுங்கள், ஸார்! அவர் பக்கத்து ஓட்டலில் காப்பி சாப்பிட்டுவிட்டு வரப் போயிருக்காரு!

—ஏ. ஜானகி அம்மாள்.

★

முன் யோசனை!

நீதிபதி :—நீ இந்த மனிதன் திருடும் போது கண்ணால் பார்த்ததுண்டா?

சாக்ஷி :—உண்டு.

நீதிபதி :—கற்பூரம் அணைத்துச் சத்தியம் செய்வீரா?

சாக்ஷி :—செய்வேன்.

வக்கீல் (குறுக்கிட்டு) :— அநியாயமாய் சத்தியம் செய்தால் கண் அவிந்து போகும். யோசித்துச் செய்யும்.

சாக்ஷி :—ஓஹ், எனக்குத் தெரியும். இந்தக் கற்பூரப் பஞ்சகாலத்தில் அவருக்கு எங்கிருந்து கற்பூரம் கிடைத்து விடப் போகிறது?

—டி. ரங்கராஜன்.

★

பேசாதது ஏன்?

ராமு :—கணேசனுக்கும் அவன் மனைவிக்கும் பேச்சு வார்த்தை இல்லையாமே, ஏன்?

சோமு :—அன்றொரு நாள் அவர்கள் இருவருக்கும் ஒருவரையொருவர் யார் அதிகம் நேசிக்கிறார்கள் என்று வாக்குவாதம் முற்றிப் போய்ச் சண்டை ஏற்பட்டு விட்டது!

—வி. கணேசன்.

நல்ல காரணம்

தகப்பனார் :—ஏய், பள்ளிக்கூடத்திலிருந்து வருவதற்கு ஏன் இத்தனை நாழி?

பையன் :—இல்லை; தெருவிலே ஒருவர் ஒரு ரூபாயைத் தொலைத்து விட்டார். உடனே அங்கே ஒரு கூட்டம் கூடி விட்டது. கூட்டம் கலைகிற வரைக்கும் நான் வர முடியவில்லை.

தகப்பனார் :—ஏன்?

பையன் :—ஏன் என்றால் நான் அந்த ரூபாயின்மேல்தான் நின்று கொண்டிருந்தேன்.

—மங்களம்.

★

சகுனம்

“மனிதனைத் தவிர எந்த ஜந்துவாவது சகுனம் பார்ப்பதுண்டா?”

“ஏன்? பூனை குறுக்கே போனால் எலிகள் வெளிக் கிளம்புவதில்லை என்று உனக்குத் தெரியாதா?”

—எம். கே. சேய்க்.

★

பாகம் பண்ணுதல்

எஜமானர் (வேலைக்காரனைப் பார்த்து):— வீடு பாகம் பண்ண வேணும், யாராவது பெரிய மனுஷாளைக் கூட்டிக்கொண்டு வா.


வேலைக்காரன் :—பாகம் பண்ண பெரிய மனுஷா என்னத்துக்குங்க? இந்தக் குழந்தை போதுமே! இது அழ ஆரம்பிச்சிட்டா வீடு ரெண்டாப் போயிடும்னு நீங்க தானே சொன்னீங்க!”

—பா. ரா.

★

தந்திரம் பலிக்கவில்லை!

தாயார் :—நம்ம ராஜுவுக்கு எந்தப் பொம்மை வாங்கித் தந்தாலும் அவன் அதை உடனே உடைத்து விடுகிறான். அதற்காக ஒரு வெண்கலப் பொம்மையே வாங்கிக் கொடுத்து விட்டேன்.



தகப்பனார் :— ஏன், பின்னே யாண்டா அதையும் உடைத்து விட்டானோ?

தாயார் :— அப்படியிருந்தாலும் தேவலையே! வீட்டில் ஒரு சாமான் பாக்கியில்லாமல் அந்தப் பொம்மையைக் கொண்டே உடைத்து விட்டான்.

—கே. ஆர். குருமூர்த்தி.



படித்துப் பார்!

தமிழ் நாட்டில் காந்தி

[ஆசிரியர்: டாக்டர் டி. சே. சௌ. ராஜன்; பிரசுரம்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை. விலை: ரூபா 1—12—0.]

ரயில்களிலும் பஸ்களிலும் ஒரே நெருக்கடியாயிருக்கும் இந்த நாளில், மகாத்மா காந்தி தமிழ் நாட்டைச் சுற்றிப் பார்க்கவும் தீண்டாமை விலக்குப் பிரசாரம் செய்யவும் விரும்பினார் என்று வைத்துக் கொள்ளுங்கள். இது சுலபமாய் நடக்கிற காரியமா? மகாத்மாவின் தேக நலன்தான் அதற்கு இடம் தருமா? இதையெல்லாம் உத்தேசித்துத் தானோ என்னவோ மகாத்மாஜி 1934-ம் வருஷமே தமிழ் நாட்டின் மூலை முடுக்குகளை யெல்லாம் சுற்றிப் பார்த்து விட்டார். அவருடைய சுற்றுப் பிரயாணத்தின் போது கூடவே இருந்த டாக்டர் ராஜன் அவர்களும் தமது அநுபவங்களைப் பற்றியும், தமிழ் நாட்டின் இயற்கை அழகுகளையும், தமிழ் நாட்டினரின் இணையற்ற உபசாரத் தன்மையையும், சுற்றுப் பிரயாணத்தின் இடையிடையே நேர்ந்த ஹாஸ்ய சம்பவங்களையும் ரஸமாய், துளியேனும் பிரயாண அலுப்புத் தட்டாமல் படகின் மீது உல்லாச யாத்திரை போவது மாதிரி எழுதியிருக்கிறார்.

டாக்டர் ராஜன் புஸ்தகத்தைப் படிக்கும் போது நமக்குப் புஸ்தகம் படிக்கிறோம் என்கிற எண்ணமே ஏற்படுவதில்லை. காந்திஜியுடன் நாமும் தமிழ் நாட்டைச் சுற்றிப் பார்ப்பதாகவே தோன்றுகிறது. காந்திஜியுடன் நெருங்கிப் பழகவும், அவருடன் சுற்றுப் பிரயாணம் செய்யவும் கொடுத்து வைத்திருந்தால்தான் முடியும். அதிலும் காந்திஜியுடன் தமிழ் நாட்டைச் சுற்றிப் பார்ப்பதற்குப் பெரும் பாக்கியமே செய்திருக்க வேண்டும். அத்தகைய பாக்கியத்தை டாக்டர் ராஜன் அவர்களுடைய இந்தப் புத்தகத்தின் மூலம் நாம் அனைவரும் அடையலாம்.

காங்கிரஸும், கம்யூனிஸ்டுகளும்

[ஆசிரியர்: கே. அருணாசலம்: பிரசுரம்: பாரத்தேவி காரியாலயம், சென்னை; விலை: அணா 0—8—0.]

புதிதாகத் தோன்றியிருக்கும் காங்கிரஸ் சங்கங்களின் தீண்டாமை கொள்கையைக் கண்டித்துக் "கல்கி"யில் எழுதப்பட்டிருக்கிறது.

அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிப்பதுபோல், நியாயமாக பிரிட்டிஷ் மந்திரிகள் மீது காட்ட வேண்டிய கோபத்தைக் கம்யூனிஸ்டுகள் மீது காட்டுவதில் பிரயோஜனமில்லை. அதனால் கெடுதல்தான் உண்டு என்பது நமது கட்சி.

நம்முடைய கட்சிக்கு எதிர்க் கட்சியை இந்தப் புத்தகத்தில் காணலாம். புதிய காங்கிரஸ் சங்கங்களின் கம்யூனிஸ்ட் பகிஷ்காரக் கொள்கையை ஆதரித்துச் சாங்கோபாங்கமாகவும், அழுத்தந் திருத்தமாகவும், காரசாரமாகவும் எழுதியிருக்கிறார்.



நான் அழகனா, இல்லையா?



எஸ்.வி.எஸ்.

நண்பர் ஒருவர் கேட்டார். "ஸார்! நான் அழகு என்ற விஷயத்தைப் பற்றிப் பேச வேண்டியிருக்கிறது. தாங்கள் தயவு செய்து எனக்கு இரண்டொரு 'பாயிண்ட்' சொல்ல வேண்டும்!" என்றார். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது.

'எல்லாம் கிடக்க ......' என்ற பழமொழிபோல, எத்தனையோ பண்டிதர்கள், மேதாவிகள், கலா விற்பன்னர்கள் எல்லாமிருக்க, என்னை ஏன் இவர் வந்து கேட்க வேண்டும்? இல்லை; இதில் ஏதோ சூழ்ச்சியிருக்க வேண்டும் என்று எனக்குப் பட்டது. மூளையைத் துருவித் துருவிப் பார்த்தேன்; அலசி அலசிப் பார்த்தேன். கடைசியில் பிடிபட்டது என்னவென்றாலோ, இந்த மனுஷர் நான் அழகாக இல்லை, கோரமாக இருக்கிறேன் என்று சொல்ல வேண்டுமாம், அதற்காகத்தான் இப்படி மறைமுகமாகச் சொல்லுகிறார் என்பதுதான். உடனே என்ன செய்தேன் தெரியுமா? சட்டைகளை மடக்கிக் கொண்டு, மல் யுத்தத்துக்குப் போவேன் என்றோ, மீசையை முறுக்கிக் கொண்டு முஷ்டி யுத்தத்துக்குப் போவேன் என்றோ நினைத்தீர்களானால் அதற்கு நான் அல்ல பழி. ஆனால் என்னவாயிற்று என்றாலோ, உடல் எல்லாம் விறுவிறுத்து, தலையெல்லாம் கிறுகிறுத்து, அழு அழு என்று அழுது விட்டேன்.

அழுது என்ன பிரயோசனம்! எப்படியாவது இந்தப் பிரச்னையைத் தீர்த்துக் கொண்டு விடுவது என்று தீர்மானித்தேன். எது? நான் அழகனா, இல்லையா என்பதுதான்.

உடனே, "அடியே!" என்று அவளைக் கூப்பிட்டேன். 'அவள்'தான்; சகதர்மிணியைத்தான். அவள் வந்தாளோ இல்லையோ, "ஏண்டி, நான் அழகாக இருக்கிறேனா?" என்று கேட்டேன்.

"அழகுதான்!" என்று 'படார்' என்று மோவாக்கட்டையைத் தோளில் ஒரு இடி இடித்துக் கொண்டு மறுபுறம் வேறு திருப்பிக் கொண்டாள்.

அடுத்தாற் போல் என் தமையன் அந்தப் பக்கம் வந்தான். என் கெட்ட காலம் பாருங்கள், அவனைக் கேட்டு வைத்தேன், நான் அழகாக இருக்கிறேனா என்று. "உன் அழகை என்ன என்று சொல்ல? போடா, போ. வாசல் கூட்டும் வள்ளி எவ்வளவோ அழகாக இருக்கிறாள். அவள் வாளி வைத்துக் கொள்ளும் அழகும், தண்ணீர் தெளிக்கிற அழகும், காலை மாறி மாறி வைக்கிற அழகும் எவ்வளவோ அழகாக இருக்கிறது!" என்று ஒரு ஆவர்த்தனம் முடித்தான்.

"சரி, சரி. நான் அழகாக இருக்கிறேனா என்று கேட்டால், வள்ளியை வர்ணிக்க ஆரம்பிச்சுட்டான். ஆண் பிள்ளைகளே இப்படித்தான்" என்று என் மனசார இந்த ஆண் இனத்தை வைது கொண்டிருந்தேன்.



"டேய்! வெளிச்சம் ஜாஸ்தியாக இருக்கிறது. விளக்கைக் கொஞ்சம் இறக்கி வை" என்று சொன்ன எஜமானனின் கட்டளையை வேலைக்கார முனியன் நிறைவேற்றி வைக்கிறான்!

"ஏன்டா, யாரை இப்படி வைகிறாய்?" என்று கேட்டுக் கொண்டே வந்தாள் என் தாய்.



"பார், அம்மா! அண்ணனை நான் அழகாக இருக்கிறேனா?" என்று கேட்டால், வள்ளி அழகாக இருக்கிறாள் என்கிறானம்மா! அதாவது என் அழகை அவள் காலில் கட்டி அடிக்க வேண்டும் என்கிற தோரணையில்" என்றேன்.

"அவன் கிடக்கிறான்; அவனுக்கு என்ன தெரியும்? உன்னை யாராவது அழகில்லை என்று சொல்லுவார்களா!" என்றாள்.

"ஆமாம். உனக்கு என்ன, நான் ஒரு வயசுக் குழந்தையாக இருக்கும்போதும் அழகாக இருந்தேன்; முப்பது வயசுக் குழந்தையாக இருக்கும்போதும் அழகாகத்தான் இருப்பேன். உன்னை யார் கேட்டார்கள்? நீ போய் வா" என்று சொன்னேன்.

"அது இல்லேடா, நிஜமாகவே நீ அழகுதான்டா" என்றாள்.

அம்மாவுக்கு என்ன? அவள் பெற்றவள். சீராட்டிப் பாராட்டிக் கஷ்டப்பட்டு வளர்த்தவள். வளர்த்தவளுக்கு எப்போதுமே தன் குழந்தை அழகுதான். அன்புடன் கலந்த பார்வை அவள் பார்வை. அழகாகத்தான் இருப்பேன் அவள் கண்களுக்கு. ஆனால் அவள் வார்த்தை பிரயோசனமில்லை. எனக்கு ரொம்ப வருத்தமாக இருக்கிறது. பார்த்தாயா, நம் அழகுக்கு நற்சாட்சிப் பத்திரம் கொடுப்பார் இல்லையே என்று.

பதினைந்தாயிரம்

பகீரதன்

அன்று இரவு பிரமாதமான மழை. இதை எதிர்பார்த்திருந்தால் திருமலை குடை கொண்டு வந்திருப்பான். அவனுக்கு வீட்டிலிருந்துதான் குடை எடுத்துக் கொண்டு வரவேண்டும் என்பதில்லை. அவன் நினைத்தால் ஊரில் உள்ளவர்கள் குடை எல்லாம் அவனுடையதுதான்.

மழைக்காக ஒரு பங்களாவின் ஓரமாக ஒதுங்கி நின்றான் திருமலை. அவன் அருகே ஒரு ஜன்னல் இருந்தது. அந்த அறைக்குள் யாரோ இருவர் பேசிக் கொண்டிருப்பது அவன் காதில் விழுந்தது.

"என்ன சம்பமூர்த்தி! கோவிந்த ராஜ செட்டியாரிடமிருந்து வந்த பணம் எவ்வளவு?"

"ஐயாயிரம்."

"அய்யாசாமி நாயுடுவிடமிருந்து வந்த ரொக்கம் எவ்வளவு?"

"மூவாயிரத்து ஐந்நூறு."

"நீடாமங்கலம் நிலகண்ட ஐயர் அனுப்பி வைத்தது?"

"ஆறாயிரத்து ஐந்நூறு."

"வேளாந்தாச்சியிடமிருந்து......"

"மூவாயிரத்து முந்நூறு"

"மொத்தம் பதினெட்டாயிரத்து முந்நூறு அல்லவா?"

"ஆமாம்."

"விக்கிரவாண்டி லக்ஷ்மி நாராயண செட்டிக்கு நாம் கொடுக்க வேண்டியது எவ்வளவு?"

"மூவாயிரத்து முந்நூறு."

"பாக்கி?"

"பதினைந்தாயிரம்."


"சரி. அப்படியே மேஜைமீது இருக்கட்டும். எல்லாம் காலையில் பார்த்துக் கொள்வோம். நேரமாகிறது. படுத்துக் கொள்வோம். வா!"

அதற்குமேல் அவர்களும் ஒன்றும் பேசவில்லை; திருமலையும் ஒன்றும் எதிர்பார்க்கவில்லை. அடே அப்பா! ரூபாய் பதினைந்தாயிரம் போதாதா? அதை வைத்துக்கொண்டு எத்தனையோ வருடங்கள் காலட்சேபம் செய்யலாமே!

நள்ளிரவு. கையில் 'டார்ச் லைட்'டுடன் திருமலை அந்தப் பங்களாவின் பக்கம் வந்தான். அவன் வருகையை நாய்கள் தூங்கிக் கொண்டிருந்தவர்களுக்கு அறிவித்தன. அதை யாரும் லட்சியம் செய்யவில்லை; திருமலையும் அந்த நாய்களுக்கு அஞ்சவில்லை. போலீஸ்காரர்களை விடவா இந்த நாய்கள்?

எப்படியோ கஷ்டப்பட்டு பங்களாவின் உட்புறம் சென்று விட்டான். எல்லோரும் கொசு வலைக்குள் சுகமாகத் தூங்கிக் கொண்டிருந்தனர். தப்பித் தவறி யாராவது விழித்துக் கொண்டு தன்னைப் பிடிக்க வந்தால், ஓடுவதற்குத் தயாராகக் கொல்லைக் கதவைத் திறந்து வைத்தான். சந்தடி செய்யாமல் தான் ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த ஜன்னல் பக்கமாயிருந்த அறைக்குள் புகுந்தான். அவன் கண்கள் அவர்கள் குறிப்பிட்ட மேஜையைத் தேடின. அந்த மேஜையும் அவன் பார்வையில் விழுந்தது.

ஆனால் அவன் அந்த மேஜைமீது கண்டது என்ன? திறந்தபடி கிடந்த ஒரு நோட்டுப் புத்தகம். அந்தப் புத்தகத்தில் அவர்கள் கணக்குப் பார்த்துக் கொண்டிருந்த பணம் எல்லாம் வெறும் எழுத்தில் எழுதப்பட்டிருந்தது!





பெரிய மனிதர்கள்!

நாடோடி

என் மேல் மிகவும் அக்கரையாக இருக்கும் என் நெருங்கிய நண்பர்களுக்கும் என் மனைவி சரசுவுக்கும் இப்பொழுதே சொல்லி விட்டேன். நான் ஒரு காலத்தில் பெரிய மனிதனாக ஆகப் போகிறேன் என்றும், அப்பொழுது எனக்கு வரும் பெயரிலும், புகழிலும் தாங்களும் ஒரு பங்கு அடையலாம் என்றும் அவர்கள் கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் அந்தோ, பரிதாபம்! அவர்கள் ஆசையை நான் ஒருக்காலும் நிறைவேற்ற மாட்டேன் போல் தோன்றுகிறது. 'பெரிய மனிதனின் சிநேகிதன்', 'பெரிய மனிதனின் மனைவி' என்று சொல்லிக் கொள்ளும் சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிடைக்காது என்றே நான் அஞ்சவேண்டி யிருக்கிறது.

"ஏன், பெரிய மனிதன் ஆவதில் தங்களுக்கு இத்தனை வெறுப்பு!" என்று நேயர்கள் கேட்கலாம். ஆனால் உண்மையில் பெரிய மனிதன் ஆக வேண்டும் என்பதில் எனக்குத் துளிக் கூட வெறுப்பில்லை. அதுவும் அனு (அதுதான் என் ஏழு மாதப் பெண் அனுராதா) பிறந்ததிலிருந்து, வேறு யாரை உத்தேசித்து இல்லாவிடினும், அவளை உத்தேசித்தாவது நான் பெரிய மனிதன் ஆகவேண்டும் என்று வெகு ஆவலாக இருக்கிறேன். எல்லாரும் என் பெண் அனுவைப் பார்த்து "பெரிய மனிதனின் பெண்" என்று சொல்ல வேண்டும் என்று பெரிய மனிதனாவதற்கு வேண்டிய எல்லா முயற்சிகளும் செய்து வருகிறேன். ஆனால், ஊஹூம், நான் என்ன முயற்சி செய்தும், பெரிய மனிதர்களுக்கு இருக்கும் குணம் ஒன்றாவது எனக்குப் படியவே படியாது போலிருக்கிறது.

முதலில், பெரிய மனிதன் என்றால் யாரையும் தம்மை லகுவில் பார்க்க விடமாட்டார். தம்மைப் பார்க்க வருகிறவர்கள் எவ்வளவு தொலைவிலிருந்து வந்தாலும் சரி, என்ன அவசர காரியமாக வந்தாலும் சரி, அவர்களை நாலைந்து தடவையாவது அலைக்கழித்த பிறகு தான் பார்ப்பதற்கு இசைவார்.

பெரிய மனிதரைப் பார்க்க நாம் கால் நடையாகப் போய்ச் சேர்ந்தோமோ, அவருக்கு நம்மைப் பார்க்க ஒழியவே ஒழியாது. நம்மைப் பார்த்ததுமே வாசலில் இதற்கென்றே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வேலைக்காரன், ஏக வசனத்தில் "போ, ஐயா! இப்ப உன்னைப் பார்க்க எஜமானருக்கு ஒழியாது" என்று சொல்லி விடுவான்.

கால் நடையாகச் செல்லாமல் வண்டியில் சென்றோமோ, பாதி அரை மனதுடன் நாம் யார், நாம் வந்த காரியம் என்ன முதலிய விஷயங்களை ஒரு துண்டுக் காகிதத்தில் எழுதி வாங்கிக் கொள்வான். உள்ளே போய் மறைவாகக் கொஞ்ச நேரம் இருந்துவிட்டுத் திரும்பி வந்து, "ஐயா ரொம்ப காரியமாக இருக்காங்களாம். இப்பொழுது ஒழியாதாம" என்று உள்ளே இருக்கும் அவரைப் போய்த் தான் கேட்டதாகவும், அவரே அப்படி பதில் சொல்லி அனுப்பி விட்டது போலவும் சொல்லுவான்.

ஆனால் வண்டியில் போகாமல் மோட்டார் வண்டியில் போனீர்களோ வேலைக்

காரன் ஓடோடியும் வந்து உங்கள் மோட்டார் வண்டியின் கதவைத் திறந்து விடுவான். உங்களை வாசலில் போடப்பட்டிருக்கும் சோபாவில் உட்கார வைத்து விட்டு, உங்கள் 'விசிட்டிங் கார்'டை எடுத்துக் கொண்டு உள்ளே ஓடுவான். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் திரும்பி வந்து, நன்றாக ஆற, அமர உட்கார்ந்திருக்கிறவரையே பார்த்து, "உட்காருங்க, 'இதோ வந்துட்டேன்'னு சொன்னாருங்க!" என்பான்.

எஜமான் சொன்ன "இதோ" எத்தனை நிமிஷம் கொண்டது என்பது வர் இருக்கும் ஆளைப் பொறுத்தது. சாதாரணமாக இந்த "இதோ"வின் கால வரையறை பத்து நிமிஷத்திலிருந்து ஒரு மணி வரையில் நீளும்.

எவ்வளவுதான் வேண்டிய ஆசாமியாக இருந்தாலும், தம்மைப் போலவே பெரிய மனிதனாக இருந்தாலும், ஒரு பத்து நிமிஷமாவது அவரைக் காக்க வைத்துவிட்டுத் தான் உள்ளேயிருக்கும் பெரிய மனுஷர் வெளியே இருப்பவரைப் பார்க்க வருவார். அப்பொழுது தான் தம்மைப் பற்றி வெளியே இருப்பவருக்கு நல்ல அபிப்பிராயம் ஏற்படும் என்பது பெரிய மனிதரின் எண்ணம்.



"என்னுங்காணும்! நீர் நன்றாக சமைப்பீரோ?"

"நல்ல கேள்வி கேட்கிறேளே? நான் சமைச்சேன்னா ஒரு ஆசாமி ஒரு படி அரிசிச் சாதம் சாப்பிடுவானே!"

"அப்படியன்னா நீ நமக்குத் தேவையில்லே. இந்த ரேஷன் காலத்திலே அவ்வளவுக்குக் கட்டி வராது!"

கடைசியில் பெரிய மனிதர் வெளியே வருவார். எவ்வளவுக் கெவ்வளவு நாழி கழித்து வருகிறாரோ, அவ்வளவுக் கவ்வளவு முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டு வருவார். எவ்வளவுக் கெவ்வளவு சீக்கிரமாக வருகிறாரோ (அதாவது அந்தப் பத்து நிமிஷ காலத்துக்குப் பிறகுதான்!) அவ்வளவுக் கவ்வளவு மன்னிப்புக் கேட்டுக் கொண்டே வருவார்.

அதாவது, பத்து நிமிஷத்துக்குப் பிறகு வந்தால் "மன்னிக்க வேண்டும், ஒரு முக்கிய காரியத்தைக் கவனித்துக் கொண்டிருந்தேன்" என்று நான்கு தடவை மன்னிப்புக் கோருவார். பதினைந்து நிமிஷம் கழித்து வந்தால் மூன்று தடவை மன்னிப்புக் கோருவார். இருபது நிமிஷம் கழித்து வந்தால் மன்னிப்புக் கோருவது இரண்டு தடவையாக மாறும். அரைமணி ஆனால் இது ஒரு தடவையில் வந்து நிற்கும். அதற்கு மேல் கடு கடுப்பும், சிடு சிடுப்பும், எத்தனை நாழி கழித்து வருகிறாரோ அத்தனை அதிகரித்துக் கொண்டே போகும்.

எப்படியோ பெரிய மனிதர் கடைசியில் வெளியே வருகிறார். ஆனால் வந்ததும் நம்மை யார் என்று அடையாளம் புரிந்து கொள்வாரா? மாட்டார். அந்தனைக்கும் அவரை நீங்கள் இதற்கு முன்னர் எத்தனையோ தடவை போய் ஒரு மணியும் இரண்டு மணியும் காத்திருந்து பார்த்துப் பேசியிருப்பீர்கள். இருந்தும் அவர் உங்களை மறந்து விடுவார். நீங்கள் முன் பத்து தடவைகளில் சொன்னது போலவே இந்தத் தடவையும் உங்கள் வரலாற்றை ஆதியோடு அந்தமாகச் சொல்ல வேண்டும். ஆனால் நீங்கள் என்ன சொன்னாலும் அவர் ஏதோ கனவு லோகத்தில் இருப்பது போலவே நீங்கள் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருப்பார்.

பெரிய மனிதர்களுக்கு இன்னொரு குணமும் உண்டு. அதாவது, ஏதாவது கூட்டத்துக்குப் போக வேண்டியிருந்தாலும் சரி, அல்லது நல்ல சினிமா, டிராமா கச்சேரி முதலியவற்றுக்குப் போக வேண்டியிருந்தாலும் சரி, தங்கள் ஆசை, இஷ்டம் இவற்றின்படி நடக்க மாட்டார்கள்.

நல்ல கச்சேரியாக இருக்கலாம். முதலிலேயே போய்க் கடைசி வரையில் இருந்து கேட்க வேண்டும் என்று ஆசை இருக்கலாம். ஆனால் இந்த ஆசையை அவர்கள் நிறைவேற்றிக் கொள்ள மாட்டார்கள். அப்படி நடந்து கொள்வது பெரிய மனுஷத்தனத்துக்கே புறம்பானது என்பது பெரிய மனிதர்களின் துணிபு.

ஆகவே பாதிக் கச்சேரி நடந்து கொண்டிருக்கும் போதுதான் உள்ளே போவார்கள். அப்பொழுதானே

எல்லாரும் இவர்களைக் கவனிக்க முடியும்! அப்பொழுதுதானே எல்லாரும் இவர்களைப் பார்த்து, "ஏதோ முக்கிய காரியம்போல் இருக்கிறது. அதுதான் கச்சேரியின் ஆரம்பத்தில்கூட வரமுடியாமல் இத்தனை நாழி கழித்து வருகிறார்" என்று எண்ணிக் கொள்ள முடியும்?

அதேபோல பாதிக் கச்சேரியில் வந்தவர்கள் முக்கால் கச்சேரியில் எழுந்து போய் விடுவார்கள்.

பக்கத்தில் இருப்பவர்கள், "கடைசி வரை இருந்து விட்டுப் போகக் கூடாதோ?" என்று கேட்டால், "அவசரமான வேலை. மன்னிக்க வேண்டும்" என்பார்கள். இதுதான் எப்பொழுதும் அவர்களிடமிருந்து கிடைக்கும் பதில்.

எனக்கு ஒரு பெரிய மனிதரின் மனைவி உறவு. பாவம், அந்த அம்மாளைப் பார்க்க நான் போகும்போதெல்லாம் அந்த அம்மாள் சொல்லிச் சொல்லி வருத்தப்படுவாள். அந்த அம்மாள் தன் புருஷனான பெரிய மனிதருடன் எத்தனையோ, சினிமாக்கள், நாடகங்கள், கச்சேரிகள் போயிருக்கிறாள். ஆனால் ஒரு கச்சேரியையாவது முழுசாகக் கேட்டதில்லை. அவள் போனபோதெல்லாம் மிருதங்க ஆவர்த்தனம் நடந்து கொண்டிருக்கும். மிருதங்க ஆவர்த்தனம் முடிகிற சமயத்தில் அவள் திரும்பி வந்துவிட வேண்டியிருக்கும். ஆகக்கூடி அவள் ஒரு கச்சேரியிலும், பாடகரோ, பாடகியோ பாடிக் கேட்டதில்லை. மிருதங்க ஆவர்த்தனம் ஒன்றுதான் கேட்டிருக்கிறாள்.

இதே கதிதான் சினிமா விஷயத்திலும். கதாநாயகனும், கதாநாயகியும் ஒருவரை விட்டு ஒருவர் மனம் இல்லாமல் பிரியும் காட்சியில் தான் போய்ச் சேர்ந்திருக்கிறாள். கதாநாயகன் அகாரணமாகச் சிறையில் அடைக்கப்படும் கட்டத்தில் வெளியே வந்திருக்கிறாள். பாவம், கதாநாயகனுக்கும், கதாநாயகிக்கும் கல்யாணமாகிறதா, இல்லையா என்று அந்த அம்மாளுக்கு இன்னும் தெரியாது!

இன்னும் யாராவது சிநேகிதர்களைப் பார்க்கப் போனால்கூட அந்த அம்மாளால் ஆசை தீர ஒரு நேரம் பேசிக் கொண்டிருக்க முடியாது. போனதும் வந்ததுமாக ஓடி வந்துவிட வேண்டும். "நீ சௌக்கியமா? நான் சௌக்கியம். சரி, நான் வருகிறேன். அவசர வேலை இருக்கிறது" என்று சொல்லிவிட்டு வரும் ஒரு நிமிஷ வேலைக்காக, ஒரு மணி நேர டிரஸ்ஸிங்கும், அரை மணி நேர மோட்டார் சவாரியும் செய்வதென்றால் எந்த ஸ்திரீயால்தான் சகித்துக் கொண்டிருக்க முடியும்?

தான் கட்டிக் கொண்டிருக்கும் புதுப் புடவையைப் பற்றியோ, அல்லது தான் பார்க்கப் போகும் வீட்டு அம்மாள் கட்டிக் கொண்டிருக்கும் புடவையைப் பற்றியோ ஒருவருக்கொருவர் அபிப்பிராயம் பரிமாறிக் கொள்ளக்கூட நேரம் இல்லையென்றால் என்ன பெரிய மனுஷனின் மனைவியாக வேண்டியிருக்கிறது என்று அந்த அம்மாள் அலுத்துக் கொள்வாள்.

இந்தப் பெரிய மனிதரின் மனைவியைப் பற்றிச் சரசுவிடம் எத்தனையோ தடவைகள் சொல்லியிருக்கிறேன். இருந்தும் சரசுவுக்குப் பெரிய மனிதனின் மனைவி ஆகும் ஆசை இன்னும் விடவில்லை. என்னைப் பெரிய மனிதன் ஆகும்படி வற்புறுத்திக் கொண்டேயிருக்கிறாள்.

பெரிய மனிதன் ஆகவேண்டும் என்றால் இன்னுமொரு தொல்லை. எப்பொழுது பார்த்தாலும் நம் உணர்ச்சிகளை அடக்கி வைத்துக் கொண்டேயிருப்பதுதான் பெரிய மனுஷத்தனம் என்று பெரிய மனிதர்கள் நினைக்கிறார்கள். சிரிக்க வேண்டிய விஷயங்களைப் பார்த்துச் சிரிக்கக் கூடாது, அழ வேண்டிய இடங்களில் அழக் கூடாது, எப்பொழுது பார்த்தாலும் உம்மணாமூஞ்சி மாதிரி முகத்தை 'உம்'மென்று வைத்துக் கொள்ள வேண்டும்.

இதெல்லாம் யாரால் முடிகிற காரியம்? நானும் முயன்று, முயன்று பார்க்கிறேன், இந்தக் குணங்களில் ஒன்றுகூட எனக்குப் படியமாட்டேன் என்கிறது. நானும் "சீச்சீ! இந்தப் பழம் புளிக்கும்" என்று பெரிய மனுஷன் ஆகும் எண்ணத்தை விட்டு விட்டேன்.

ஆகையால் என் அருமை மிக்க நண்பர்களே! என் பிரியமுள்ள மனைவி சரசுவே! தயவு செய்து நான் பெரிய மனுஷன் ஆகப்போகிறேன் என்று நீங்கள் கண்டு கொண்டிருக்கும் கனவை அடியோடு மறந்து விடுங்கள்.

ஆனால் பாவம், என் அருமை அனுவை நினைக்கும் போதெல்லாம் அவளை உத்தேசித்தாவது எப்படியாவது பெரிய மனுஷன் ஆகக்கூடாதா என்று இருக்கிறது. என்ன பண்ணலாம்? எனக்குத் தான் பெரிய மனிதர்களின் சிறந்த குணங்களில் ஒன்று கூடப் படிய மாட்டேன் என்கிறதே!

அடுத்த நிமிஷம் இந்த கைகள் எப்படி இருக்கும்?



—குழந்தை 'அழுக்கு அபாய'த்திலிருந்து காப்பாற்றப் படுவது ஒரு வரம் போன்றது!




ஒரு நிமிஷம் களிமண்ணுல் காரியங்கள் செய்வதும், மறு நிமிஷம் தரையில் கடை வைத்து விளையாடுவதுமாக இருப்பதால் அவன் கையிலிருக்கும் அழுக்கு எப்படிப் பட்டதென்றும் அதில் என்னென்ன கிருமிகள் இருக்குமென்றும் சொல்ல முடியாது. ஆனால் தவருமல் லைபாய் சோப்பால் சுத்தம் செய்துக் கொள்வதால் அவன் தன்னைக் காப்பாற்றிக் கொள்கிறான்.

அவனுடைய பெற்றோர்கள் லைப்பாய்தான் குடும்பத்தை ஆரோக்கியமாகவும், சுகமாகவும், இருக்கச் செய்கிறதென்று சொல்லுவார்கள். அவர்களுக்கு அழுக்கில் வெகு பயங்கரமான கிருமிகள் இருக்கின்றன வென்றும், அவை எவ்வளவு சுலபமாக நோய் உண்டாக்கி அதைப் பரவச் செய்யுமென்றும் தெரியும். தவருமல் அடிக்கடி விஷக்கிருமி நாசக சோப்பான லைப்பாயால் சுத்தம் செய்தால் அது குழந்தைகளை இந்த அபாயத்தினின்றும் காப்பாற்றும். ஆரோக்கியத்தைப் பாதுகாக்கக்கூடிய ஒரு அதிசய குணம் இந்த சோப்பிற்கு உண்டு. இந்தியாவில் மற்றெந்த சோப்புக்கும் இக் குணம் இல்லை.

லைப்பாய் நல்ல சோப்பைக் காட்டிலும் சிறந்தது அதுஒருநல்வழக்கம்

L. 50-50 TM — LEVER BROTHERS (INDIA) LIMITED

கல்கி



ALKI பிப்ரவரி 4, 1945

4 அ



தென் இந்தியா ரயில்வே

கும்பகோணத்தில் மகாமக உத்ஸவம்

பிப்ரவரி 1945

★

1945 பிப்ரவரி மாதம் கும்பகோணத்தில் நடக்கப் போகும் மகாமக உத்ஸவத்தின் பொருட்டு எந்த விதமான விசேஷ ஏற்பாடும் செய்ய இயலாமல் இருப்பதையும் ஷ உத்ஸவ காலத்தில் யாதொரு ஸ்பெஷல் டிரெயினும் விடுவதற்கு இல்லை என்பதையும் தென் இந்தியா ரயில்வேயார் மிகமிக வருத்தத்துடன் பொது ஜனங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள். டிரெயின்களில் ஜன நெருக்கடி ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு ஸ்டேஷன்களில் டிக்கட் கொடுப்பது கட்டுப்படுத்தப்படும். ஆகவே ஷ உத்ஸவத்தின் பொருட்டு கும்பகோணத்திற்கு ரயில் மூலம் பிரயாணம் செய்ய வேண்டாம் என்று பொது ஜனங்கள் எச்சரிக்கப்படுகிறார்கள். யுத்த கால நிலைமையின் காரணமாக இவ்வாறு முடிவு செய்யும்படியான நிர்ப்பந்தத்தை எவ்வளவுதான் வருந்திய போதிலும் தவிர்க்க முடியாத வகையில் ரயில்வேயாருக்கு நேர்ந்திருக்கிறது.

வெஜிடபில் கதம்ப ஊறுகாய்



வெள்ளரிக்காய், இஞ்சி, பாவக்காய், கீரைத்தண்டு, வாழைத்தண்டு, கத்தரிக்காய், பச்சை மிளகாய், பச்சை மிளகு - சொல்லும்போதே வாயில் ஜலம் ஊறுகிறது - முதலியவை சேர்த்து கைபடாமல் ஜிஞ்ஜாமிருதமாகத் தயாரிக்கப்பட்டது. வாய்க்கு வெகு ஜோர். உடம்பிற்கு பரம சுகம். இன்றே உங்கள் தேவைக்கு எழுதவும். இரு சைஸ்களில் கிடைக்கும்.

•

தயாரிப்பாளர்கள் :

டி. எஸ். ஆர். & கோ.

வாஸனா திரவிய வியாபாரிகள்

கும்பகோணம்

மதராஸ் சிட்டி ஏஜெண்டுகள் :

மெஸர்ஸ். புஷ்பவனம் ஸ்டோர்ஸ்

பைக்ராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி

ஸ்டாக்கிஸ்டுகள் :

ஏ.கே. ஏ. ஏ. அண்ணாமலை நாடார் & பிரதர்ஸ்.

மதுரை



அஜீரணத்தைப் போக்கி நல்ல ரத்தத்தை விருத்தி செய்து தசைகளை வளர்த்து தாது புஷ்டி யளிப்பது.

காபூல் கனிகளாலும் இமய மலை மூலிகைகளாலும் தயாரிக்கப்பட்ட டானிக்.

அம்ருதா

ரத்த சுத்தி திராவகம்


கேசரி குடீரம் லிட், மதராஸ்

தமிழ் நாடு ஏஜண்டுகள் :

சீதாராம ஜெனரல் ஸ்டோர்ஸ்

மேலக் கோபுர வீதி : மதுரை

Regd. No. M. 4392



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press, 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.